

# பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி

## (Girl Child Rights Education)




அனைவருக்கும் கல்வி இயக்கம்

அனைவரும் கற்போம்! அனைவரும் உயர்வோம்!

மனித உரிமைக் கல்வி நிறுவனம்

# பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி

## அனைவருக்கும் கல்வி இயக்கம்

தமிழ்நாடு

## மனித உரிமைக் கல்வி நிறுவனம்

**பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி**

Girl Child Rights Education

முதல் பதிப்பு, 2016.

வெளியீடு : அனைவருக்கும் கல்வி இயக்கம், தமிழ்நாடு

குழுத் தலைவர் : **திருமதி. பூஜா குல்கர்னி** இ.ஆ.ப,
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை-600 006.

நெறியாளர்: **திருமிகு. ஹென்றி திபேன்**
நிர்வாக இயக்குநர்
மனித உரிமைக் கல்வி நிறுவனம், மதுரை.

ஆசிரியர் குழு: **திருமிகு. ஓவியா**
பெண்ணிய செயற்பாட்டாளர், சென்னை

**முனைவர்.ப. இராதா**
உதவி பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

**திருமிகு. வசந்தி**
பெண்ணிய செயற்பாட்டாளர், மதுரை

**திருமிகு. ல. பெர்னாட்**
மனித உரிமைக் கல்வி நிறுவனம், மதுரை

**திருமிகு. ஜோஸ்பின்**
குழந்தைகள் செயற்பாட்டாளர், சென்னை

**திருமிகு. கா. கணேசன்**
குழந்தைகள் செயற்பாட்டாளர், மக்கள் கண்காணிப்பகம், மதுரை

ஒருங்கிணைப்பு: **திருமிகு. மரிய சூசை,** தேசிய ஒருங்கிணைப்பாளர்,
**திருமிகு.சொக்கு.** மாநில ஒருங்கிணைப்பாளர்,
மனித உரிமைக் கல்வி நிறுவனம், மதுரை

உள்ளோவியங்கள் : ஓவிய ஆசிரியர்கள்
**திருமிகு. எஸ்.எஸ் மாரியப்பன்** அம்பாசமுத்திரம், திருநெல்வேலி
**திருமிகு. சுப்பையா** தருவை, திருநெல்வேலி
**திருமிகு. மனோகரன்** தேனி மாவட்டம்.


# பெண் குழந்தைகள் உரிமைக் கல்வி

## உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மனிதன் பிறந்த கதை | 5 |
| 2. | நான் யார்? | 9 |
| 3. | மனித ஏக்கங்கள் | 13 |
| 4. | முன் தீர்மானம் | 18 |
| 5. | பால் மற்றும் பாலினம் | 22 |
| 6. | பாலின பாகுபாடு | 26 |
| 7. | குழந்தைப் பருவமும் அவர்தம் உரிமைகளும் | 38 |
| 8. | பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் | 50 |
| 9. | பெண் குழந்தைகளுக்கான திறன்கள் | 73 |
| 10. | பாகுபாட்டை வென்று சாதித்த மகளிர் | 90 |
| 11. | மகளிர் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்கள் | 97 |

# 1. மனிதன் பிறந்த கதை


கிட்டத்தட்ட 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக மனித இனம் உயிர்களிடையே பரிணாமம் பெற்றது என்று சொல்லப்படுகிறது. நீங்கள் கொரில்லாக் குரங்குகள் பார்த்திருக்கிறீர்கள்தானே அவர்கள்தான் நம் முன்னோர்கள். இந்த விலங்குகளெல்லாம் நீர்வாழ் மீன்கள் போன்ற உயிரினங்களிலிருந்து பரிணாமம் பெற்றனவாம். நிறைவேற்றப்படாத தங்களின் தேவைகளின் பொருட்டு விலங்கினங்கள் புதிதாக ஒரு செயலை செய்ய முற்படும் போது அவை நாளடைவில் வேறொரு விலங்கினமாக பரிணாமம் பெற்றன. மனிதர்களும் அப்படித்தான் தங்கள் கால்களுக்கும் கைகளுக்கும் வேறு வேறு வேலைகளைக் கொடுக்கும் போது வேறு வேறு உருவ அமைப்புகளைப் பெற்று மனிதர்களாக மாறினார்கள். நீர் நிலைகள் வற்றி மீன் நிலத்துக்கு வந்த போது ஊர்வன பிறந்தன. ஊர்வனவற்றிலிருந்து பாலுட்டிகள் பரிணமித்தன. பாலுட்டிகளான சிம்பன்சி போன்ற குரங்கு வகையின் முன்கால்கள் கைகளாக மாறிய போது மனிதர்களாகிய நாம் உலகில் உருவெடுத்தோம் என்பதே அறிவியல் சொல்லும் நாம் பிறந்த கதையாகும்.



இவ்வாறு உருவான மனித இனத்தின் முதலில் தோன்றிய நமது பாட்டியை நாம் காண நேர்ந்தால் நாம் அவரை மனிதராகவே ஒத்துக் கொள்வது கடினம். குரங்கு போலவே முகத்தோற்றம்தான் அவருக்கு இருந்திருக்கும். இதோ அருகிலிருக்கும் படத்தைப் பாருங்கள். ஆனால் இது மாதிரி ஒரு பாட்டியிடமிருந்துதான் இன்றைய நமது கனவு நாயகர்களும் நாயகிகளும் தோன்றியிருக்கிறார்கள். ஒரு மீனிலிருந்து தொடங்கி இந்த பரிணாமம் மனித இனத்துக்கு எப்படி சாத்தியமானது என்று தெரிந்து கொண்டால் நம்மை நாமாக உருவாக்கிய பண்புக் கூறுகளை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

### போராட்டம்+தகவமைப்பு+சமூக உழைப்பு+முயற்சி= மனிதன்

எப்போதெல்லாம் இயற்கை ஓர் உயிரினம் பிழைப்பதற்கு அரிய சவால்களை தோற்றுவித்ததோ அப்போதெல்லாம் அந்த உயிரினத்தின் வலிமையான உயிர்கள் அந்த சவாலை தங்கள் போராட்டத்தால் எதிர்கொண்டன. உதாரணமாக நீர் நிலைகள் வறண்ட போது மீன்கள் நிலத்தில் வாழ்வதற்கான தகவமைப்பை போராடி வளர்த்துக் கொண்டு நிலத்தில் வாழும் ஊர்வனவாக பரிணமித்தன. ஆக இயற்கையின் சவாலை எதிர்கொண்ட போராட்டமே பரிணாமத்தின் வளர்ச்சி வரலாறாகும். ஆகவே மனித



இனம் பிறந்த கதையுமாகும். வாழும் வரை போராடு வழி உண்டு என்றே பாடு என்ற திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகிறதா.

## இயற்கைத் தேர்வில் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறன்கள்

மாறி வரும் சூழலுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்ட உயிரினங்களே தப்பிப் பிழைத்து புதிய உயிரினமாக தோற்றமெடுத்தன. இதனையே இயற்கைத் தேர்வு என்று சொல்கிறார்கள். ஆம் மாற்றத்தை மறுப்போருக்கு இந்தப் புவி சொந்தமில்லை. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உண்மையை ஏற்றுக் கொண்ட உயிர்களே புவியை வெற்றி கொண்டன. அதனாலன்றோ நம் அவ்வைப் பாட்டியும் ஒப்புரவு ஒழுகு என்று சொன்னார். அது மட்டுமல்ல இந்த மாற்றங்கள் விலங்குகளில் தனித்த விலங்கின் செயல்பாடாக நிகழ்த்தப்பட்டவை அல்ல மாறாக கூட்டு உழைப்பால் விளைந்தவை ஆகும். எனவேதான் மனிதர்கள் சமூக விலங்காக பரிணாமம் பெற்றார்கள். உணவு, நெருப்பு, வாழ்க்கைக் கருவிகள் அனைத்தையும் கூட்டாக சேகரித்தார்கள். கூட்டாக பாதுகாத்தார்கள். தான் என்பது தனது கூட்டமே என்றே உணர்ந்திருந்தார்கள். சமூகம் அழிந்தால் மனிதர்கள் அழிந்து போவார்கள். எனவே கூட்டு உழைப்பின் அவசியத்தையும் மனித இனம் உருவானதில் அதன் பாத்திரத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். காடுகளில் மனிதர்கள் வாழ்ந்த போது சமூகத்தின் ஓர் அங்கம்தான் நான் என்ற உள்ளுணர்வு மனிதர்களிடையே மிகுந்திருந்தது. ஆனால் இன்று நாம் தனித்தனி வீடுகளில் வசிப்பதால் சமூக உணர்வு பற்றிய கல்வி நமக்கு தேவைப்படுகிறது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற முதுமொழி பட்டறிவும் பரிணாமமும் நமக்குத் தந்திருக்கும் பாடங்களன்றோ ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வே இல்லையேல் அனைவருக்கும் தாழ்வே என்று உரைத்ததின் பொருள் புரிகிறதா?

முயற்சி திருவினையாக்கும் என்பது நமது வள்ளுவ பெருந்தகை நமக்களித்து சென்றிருக்கும் அறிவுரையாகும். பல்லுயிர்கள் இந்த பூமிப்பரப்பில் செய்த முயற்சிகளின், வெற்றியின் திருவினையே இந்த மனித சமூகமாகும். முடியும் என்பதே முதல் வெற்றி என்ற முழக்கம் நம் அடிப்படை உளவியலாக இருக்க வேண்டும். எனவே தான் இந்த மாந்தர் இனத்தின் அரும் பண்புகளாக நாம் போற்ற வேண்டியவை போராட்டமாக, புதியன தேடும் ஆர்வம், மாற்றத்தை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் ஒப்பரவு, கூட்டு உழைப்பு, ஒற்றுமை மற்றும் முயற்சி ஆகிய பண்புகளாகும்.


## வகுப்பு செயற்பாடுகள்

1. ஆதிவாசிகள் வாழ்க்கையை சித்தரிக்கும் நடனங்களை உருவாக்கி பயிற்சி தருக
2. மனித இனத்தின் பண்புகளைப் போற்றும் கவிதைகள் எழுத ஊக்குவித்தல்.
3. இந்த பூமிப் பரப்பையும் மனித இனத்தையும் காப்போம் என்ற உறுதிமொழி வாசகங்களை கூறச் செய்தல்.

## டார்வின்

மனித இனம் படைக்கப் பட்டதல்ல, பல்லுயிர்கள் இயற்கையில் மாற்றமடைந்து பரிணாமத்தில் உருவானது மனித உயிர் என்ற இந்த அரிய உண்மையை உலகுக்கு கண்டறிந்து சொன்ன மாமேதை சார்லஸ் டார்வின் என்னும் பேரறிஞர் ஆவார். இதோ இந்த படத்தில் இருக்கும் சிறுவன்தான் சார்லஸ் டார்வின்.





இவர் 1895-ல் " இயற்கைத் தேர்வு மூலமாக உயிரினங்களின் தோற்றம்" என்ற அந்த புத்தகம் கூறிய கொள்கைதான் பரிணாம வளர்ச்சிக் கொள்கை. அதன்படி "உயிரினங்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியும், வலிமையும் உள்ளவை நிலைத்து நிற்கும் மற்றவை அழிந்து போகும். இது புதிய இனங்களின் உருவாக்கத்திற்கு வழியேற்படுத்தும்" என்று கூறினார் டார்வின். இக்கருத்துகளின் அடிப்படையிலேயே உயிரினங்களில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவரது கண்டுபிடிப்புகளின் நீட்சியாகவே இன்றைய மரபணுக் கொள்கைகளை அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்து மருத்துவ உலகில் சாதனைகள் பல நிகழ்த்தி வருகிறார்கள். இயற்கை யிலேயே பறவைகள் மற்றும் பல்வேறு உயிரினங்களைப் பற்றி அறிவதில் ஆர்வமாக இருந்த சார்லஸ் டார்வினுக்கு அவர் மேற் கொண்ட உலகச் சுற்றுப் பயணங்கள் பல்வேறு உண்மைகளை உணர்த்தின. அதனை அவர் இந்த உலகறிய தனது கண்டுபிடிப்புகளாகத் தந்தார். குரங்கிலிருந்து தோன்றியதுதான் மனிதன் என்று சொன்ன தற்காக அன்றைய உலகம் அவரை கேலி செய்தது. இன்னல் விளைவித்து தூற்றியது. ஆனால் இன்றோ உலகம் அவரைக் கொண்டாடுகிறது. அவருடைய கண்டுபிடிப்புகளை ஏற்று அறிவியல் பீடுநடை போடுகிறது. எனவே இந்த சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது என்பதற்காக நாம் உண்மைகளைக் கண்டு அஞ்சவோ அவற்றிலிருந்து விலகிச் செல்லவோ கூடாது.

## வகுப்பு செயற்பாடுகள்:

1. இந்த சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது ஆனால் இதுதான் சரி என்று நீ நினைக்கும் சில உண்மைகளைப் பட்டியலிடு.
2. இதே கேள்வியை உன் பெற்றோரிடம் கேட்டு பதில் பெற்று வா

## மனித இனத்தின் பிரிவுகள்:

### பெண்:

விலங்கிலிருந்து மனித இனம் தோன்றிய காலத்தில் குட்டிகளை ஈன்ற பெண்ணே அவ்வுயிர்களின் தாய் என்ற நிலையிலிருந்து அவர்களை காத்து வளர்த்தாள். வேட்டையாடி உணவளித்தாள் என்று கூறப்படுகிறது. உயிர்களை தன்னுடம்பில் கருப்பையில் சுமந்து மறு உற்பத்தி செய்து தரும் வல்லமை பெண்ணுக்கு மட்டுமே இருக்கிறது. இன்றைய வாழ்க்கை முறையில் நீண்ட காலமாக பல்வேறு பணிகளை செய்வதற்கு உதாரணமாக உழுதல், மரம் ஏறுதல், கப்பலில் செல்லுதல், போர் புரிதல் போன்ற தொழில்கள் செய்ய பெண்களை தடை செய்த காரணத்தினால் இவர்கள் உடல் வலு குறைக்கப் பட்டிருக்கிறது. இன்று இந்த தடைகளைக் கடந்து பெண்கள் பல்வேறு துறைகளில் மீண்டும் சாதனை படைத்து முன்னேறி வருகிறார்கள்.

### ஆண்

ஆண்களால் எல்லா வேலைகளையும் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. எனினும் சமூகப் பணிகளின் முழுப் பொறுப்பும் ஆண்கள் வசம் சுமத்தப்பட்டிருக்கிறது. கூட்டுத் தலைமையும் பொறுப்புமின்றி ஆண்களை மட்டும் வைத்து இயங்குவதாக சமூகம் இருக்கிறது. மேலும் சாதி மதம் என்று பல்வேறு பிளவுகள் இவர்களின் வலிமையைக் குறைத்து சமூகத்தில் அமைதியின்மை நிலவ காரணமாக இருக்கின்றன. வீட்டு வேலைகள் செய்வதிலிருந்து இவர்கள் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே வீட்டு வேலைகளுக்கும் குழந்தைகள் மற்றும் முதியோர் பராமரிப்புக்கும் இவர்கள் பெண்கள் சார்ந்திருக்கும் நிலையில் இருக்கிறார்கள். இன்று சாதி மத வேறுபாடுகளைக் களைத்து பெண்களோடு சமமாக இணைந்து கூட்டுப் பொறுப்புடன் சமூகத்தை நடத்த தங்கள் சிந்தனையிலும் செயலிலும் முன்னேற்றங்களைக் கண்டு வருகிறார்கள்.

### மூன்றாம் பாலினம்

ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியும், பெண்ணாகப் பிறந்து ஆணாகவும் பரிணமிக்கிறார்கள். இவர்கள் திருநங்கையர் மற்றும் திருநம்பியர் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் பெருவாரியான மக்கள் இவர்களை ஏளனமாக நடத்துகிறார்கள். எந்தத் துறையிலும் பணிபுரிய இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கல்வி பயிலக்கூட விடுவதில்லை. இத்தகைய கொடுமைகளைத் தாண்டி இன்று இப்பிரிவினரும் பல்வேறு உயர்க்கல்வி, உயர் பதவிகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

### பாலின சமத்துவம்

இந்த பிரிவினரில் யாரும் யாரையும் விட உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ இல்லை. ஒரு பிரிவு இன்றி மற்ற பிரிவு இல்லை. அடிப்படையில் அனைவரும் மனிதர்களே. ஒரு சில குரோமோசோம்களின் மாற்றமே அவர்களின் பாலினத்தை தீர்மானிக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து சம மரியாதையுடனும் மதிப்புடனும் அனைவரும் வாழ்வது அவசியமாகும்.

## வகுப்பு செயற்பாடுகள்

1. நீ பெண்ணா, ஆணா, திருநங்கையா, அல்லது திருநம்பியா? உனது சமூக நிலை என்ன என்பது பற்றியும் நீ அடைய வேண்டிய மாற்றம் பற்றியும் கூறு.

1. மற்ற பாலினம் பற்றி உனது கருத்துக்களைக் கூறு.

# 2. நான் யார்?

## நோக்கம்

குழந்தைகள் அவர்களைப் பற்றி புரிந்து கொள்ளவும் தங்கள் வாழ்க்கையில் நேர்மறை மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ளவும் தூண்டுதல்.

## நான் யார்?



ஒரு நாள் வகுப்பாசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்ததும் மாணவர்களை அவர்களின் பாட புத்தகங்களை மூடி வைக்கும்படி கூறி "இன்று நான் புத்தகத்திலிருக்கும் எந்த பாடமும் நடத்தப் போவதில்லை" என்று கூறுகிறார். குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து கை தட்டி ஆரவாரம் செய்கின்றனர்.

ஆசிரியர் ஒரு மாணவனையும் ஒரு மாணவியையும் முன்னே வரும்படி கூறுகிறார்.

சத்யாவும் கிரணும் முன்னே வருகின்றனர்.

ஆசிரியர் சத்யாவிடம் "நீ யார்" என்று கேட்கிறார். சத்யா பதில் சொல்லாமல் திரு திருவென விழிக்கிறாள்.

சில நொடிகளுக்கு பிறகு கிரண் தனது பெயர், பெற்றோரின் பெயர் தனது ஊரின் பெயரைக் கூறுகிறான்.

ஆசிரியர் "நான் உங்களது வெளிப்படை அடையாளங்களைக் கேட்கவில்லை. உங்களுக்குள்ளே இருக்கும் சுய அடையாளத்தைக் கேட்கிறேன். அதாவது நீங்கள் எப்படிப்பட்டவர், உங்களுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது போன்றவற்றை கேட்கிறேன்"

எனினும் இருவராலும் எதையும் கூற இயலாமல் இருந்தனர். அதன் பிறகு ஆசிரியர் இருவரையும் அவர்கள் இடத்தில் அமரும்படி கூறிவிட்டு ஒவ்வொரு குழந்தையும் தன்னைப் பற்றியும் அறிந்து கொள்வது எவ்வளவு முக்கியம் என்றும் ஒரு நல்ல மனிதனாக இருப்பது எப்படி என்பதை கற்றுக் கொள்வது என்பதையும் ஒரு கதையின் மூலம் விளக்க ஆரம்பித்தார். பின்னர் அனைத்து மாணவர்களையும் வீட்டுக்கு சென்று தன்னைப் பற்றி பெற்றோர் நல்ல குணங்களாக மற்றும் தீய குணங்களாக எவற்றை நினைக்கின்றனர் என்பதை அவர்களது பெற்றோரிடம் அறிந்து கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கிரணுக்கு தன்னைப் பற்றி உடனே பெற்றோரிடம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மிகவும் ஆர்வம். எனவே அவன் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் வீட்டுக்கு விரைவாக சென்றான்.

வீட்டிற்குள் நுழைந்தவுடன் தனது புத்தக பையை வைத்து விட்டு நேராக அவனது அம்மாவிடம் சென்று பள்ளியில் நடந்ததைக் கூறினான். அவனது அம்மா அவனிடம் நீ என் செல்லம் என்று உடனடியாகக் கூறினார்.

கிரண் உடனே மகிழ்ச்சியடைந்து சிரித்தான். அவனது அம்மா மெதுவாக அவனது நடத்தைகள் என்னென்னவென்று அவனிடம் கூற ஆரம்பித்தார். "நீ உனது வீட்டுப் பாடங்களை செய்வதில் மிகவும் ஆர்வமாகவும் பொறுப்பாகவும் இருப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் உனது தங்கையை காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ அடிப்பது மற்றும் கோபத்துடன் கத்துவது எனக்கு பிடிக்காது."



கிரண் உடனே "அப்பா உன்னை அடிக்கும்போது நான் மட்டும் ஏன் அடிக்கக் கூடாது என்று கேட்டான். அவனது அம்மா கூறினார், "அப்பா செய்வதும் தப்பு. நீ செய்வதும் தப்பு. ஆணும் பெண்ணும் சமம். அனைவரும் மனிதர்கள். இதில் ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்று இல்லை".

கிரண் சிறிது நேரம் அமைதியாய் இருந்துவிட்டு யோசிக்க ஆரம்பித்தான்.

சத்யாவும் தன் வீட்டிற்கு சென்றவுடன் தனது அம்மாவிடம் சென்று "அம்மா நான் யார்" என்று கேட்டாள்.

ஆனால் அவளுக்கு பதில் கூறாமல் அவளது அம்மா "நீ என்னை பற்றி அறிந்த, உனக்கு பிடித்த மற்றும் பிடிக்காத குணங்களைக் கூறு" என்றார்.

உடனே சத்யா "நீங்கள் என்னை விட தம்பியிடம் தான் அதிக நேரம் இருக்கிறீர்கள்" என்றாள்.

மேலும் "நீங்கள் அவனுக்கு நல்ல உணவு வகைகளை கொடுக்கிறீர்கள் எனக்கு கொடுப்பதில்லை. தொலைக்காட்சி பார்ப்பதில் கூட அவனுக்குத்தான் முன்னுரிமை அளிக்கிறீர்கள். நான் பையன்களுடன் பேசினால் என்னைத் திட்டுகிறீர்கள். ஆனால் உங்களை எனக்கு மிகவும் பிடிக்கும் அம்மா"

இவ்வாறு அனைத்து மாணவிகளும் மாணவர்களும் தத்தமது பெற்றோரிடம் தங்களைப் பற்றி கூறிய தகவல்களை வகுப்பறையில் பகிர்ந்து கொண்டனர்.

ஆசிரியர் அனைத்து மாணவர்களிடமும் அவர்கள் கூறியதைக் கேட்ட பின் ஒரு கதையைக் கூறி முடித்தார்.

பள்ளி முடியும் நேரத்தில் அனைத்து மாணவர்களுக்கும் வீட்டுப் பயிற்சி செய்து வரும்படி கூறினார். அனைவரும் ஒரு சார்ட் பேப்பரில் வண்ண பேனா கொண்டு ஒரு பக்கம் தன்னிடம் தனக்கு பிடித்தது என்ன பிடிக்காதது என்ன? என்பதை எழுதியோ அல்லது படமாகவோ வரைந்து வரும்படி கூறினார்.

### வீட்டுப் பயிற்சி

மாணவர்கள் தமது பெற்றோரின் உதவியுடன் இதே மாதிரி தம்மைப் பற்றி எழுதி வரவும்.

ஆசிரியரும் மாணவர்களும் இந்த வகுப்பை மறுநாள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர். வகுப்பு ஆரம்பமானது. ஆசிரியர் மாணவர்களிடம் "எத்தனை பேர் வீட்டுப் பயிற்சியை முடித்து வந்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டார். அனைத்து மாணவர்களும் கையை உயர்த்தினார்கள். ஒரே குரலில் தாம் வீட்டு பயிற்சியை முடித்து விட்டதாகக் கூறினார்கள்.

ஆசிரியர் "உங்களது வீட்டு பயிற்சியை உங்களிடமே வைத்திருங்கள். யாரிடமும் காட்ட வேண்டாம்" என்றார். அதன்பின் ஒரு வெள்ளைத் தாளையும் ஒரு குண்டூசியையும் அனைவருக்கும் கொடுத்து அதனை ஒவ்வொருவர் முதுகிலும் மாட்டிவிடும்படி கேட்டுக் கொண்டார். அனைவரையும் ஒரு வட்டமாக நிற்கச் சொன்னார்.

ஒவ்வொருவரும் அடுத்த மாணவரைப் பற்றி ஏதாவது ஒரு நல்ல பண்பையும் திறமையையும் மற்றும் அவரிடம் உள்ள தமக்கு பிடிக்காத பண்பையும் அவர் முதுகிலுள்ள தாளில் எழுதும்படி கேட்டுக் கொண்டார். இப்படியே அனைவரும் எழுதினர்.

இந்த குழு பயிற்சி முடிந்தவுடன் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி மற்ற மாணவர்கள் எழுதியவற்றை உரக்க வாசிக்கும்படி கூறினார். அனைத்து மாணவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். யாருமே தனக்கு இவ்வளவு நல்ல குணங்களும் திறமைகளும் இருப்பது குறித்து அறியாமல் இருந்தனர். அதை அறிந்தவுடன் அவர்கள் மட்டமற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

சத்யா தனது சக மாணவர்களுக்கு கணக்குப் பாடத்தில் உதவுவது குறித்து அனைவரும் குறிப்பிட்டிருந்ததை கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தாள். அதே நேரத்தில் குமார் சாலையில் அடிப்பட்ட நாய் ஒன்றிற்கு உதவியதைத் குறிப்பிட்டு இருந்தது கண்டு மகிழ்ச்சி அடைந்தான். இதே மாதிரி அனைவரும் நிறைய நல்ல பண்புகளால் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அதே நேரம் அவர்களது எதிர்மறை பண்புகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

குணசீலன் தான் நிறைய பொய் சொல்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது குறித்து மிகவும் வருத்த மடைந்தான். அதே போல் அருணா எல்லோர் மீதும் அதிகாரம் செலுத்துவது குறித்து மாணவர்கள் குறிப்பிட்டிருந்ததால் மிகவும் கவலை அடைந்தாள். அன்றைய வகுப்பில் ஆசிரியர் அனைத்து மாணவர் களிடமும் தங்களின் நல்ல குணங்கள் வெளிப்பட்ட தருணங்கள் குறித்து குறிப்பிடும்படி கேட்டுக் கொண்டார்.

ஒரு சிலர் பகிர்ந்து கொண்டனர். ஆனால் அனைவரும் கயல் குளத்தில் மூழ்கிய இரண்டு சிறுவர்களைக் காப்பாற்றியது குறித்து கூறுவாள் என்று எதிர்பார்த்தனர். கயலுக்கும் தான் செய்த சாதனை குறித்து பேசுவதற்கு ஆசையாக இருந்தாலும் எப்படி கூறுவது என்று தயங்கினாள். எனவே அவள் முன்னே வந்து அதைப்பற்றியும் கூற வெட்கப்பட்டாள். அவள் இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றியதற்காக குடியரசு



தலைவரின் “வீரதீர விருது”க்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தாள். மேலும் மாவட்ட ஆட்சியரிடமிருந்தும் பல்வேறு பள்ளிகளிலிருந்தும் பாராட்டுகள் குவிந்திருந்தன. அவளது பள்ளி தலைமை ஆசிரியரும் அவள் கூடிய சீக்கிரமே முதலமைச்சரை சந்திக்க செல்வாள் என்று கூறியிருந்தார். கயலுக்கு இவையெல்லாம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் அவள் முக்கிய பிரமுகர்கள் குறித்தும் நிறைய பேரை சந்திப்பது குறித்தும் மிகுந்த படபடப்புடன் இருந்தாள். கயல் தன்னைப் பற்றி மிகவும் தாழ்வாக எண்ணியிருந்தாள்.

இது நாள்வரை அவளது தந்தையிடமிருந்தும் தனது சித்தியிடமிருந்தும் எந்தவொரு பாராட்டுதலையும் பெற்றதில்லை. அவள்தான் பெரும்பாலான வீட்டு வேலைகளைச் செய்வாள். ஆனால் அவளது சித்தி “நீ எதற்கும் லாயக்கில்லை. நாங்க உனக்கு எதுவும் செய்வோம் என்று எதிர்பார்க்காதே” என்று கூறியது கயலுக்கு தன்னைப் பற்றி தாழ்வாக நினைக்க காரணமாயிருந்தது. எனவே பள்ளிக்கு

வருவது மற்றும் அடுத்தவர்களுக்கு உதவி செய்வது போன்றவை மகிழ்ச்சியளித்தது. அவள் தனது சித்தி வீட்டில் இல்லாத நேரங்களில்தான் விளையாடச் செல்வாள். அப்படித்தான் ஒருநாள் விளையாடிக் கொண்டு இருக்கும் போது உதயா வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்த இரு குழந்தைகள் நீரில் முழ்குவதைக் கண்டு ஓடிச் சென்று காப்பாற்றினாள். அடுத்தவர்கள் ஆபத்தில் அல்லது ஒரு கஷ்டத்தில் இருக்கும் போது காப்பாற்றுவது நமது கடமை என்று அவள் கருதினாள். எனவே அனைவரும் அவளது செயலை பாராட்டும்போது அவள் தர்மசங்கடத்திற்கு உள்ளானாள்.

ஆசிரியர் அவளை முன்னே வரும்படி கூறி அனைத்து மாணவர்களையும் கைத்தட்டும்படி கூறினார். அவளுக்கு இது மகிழ்ச்சியையும் தன்னம்பிக்கையையும் அளித்தது. அவள் அந்த சம்பவத்தைக் குறித்து அனைவரிடமும் தைரியமாக கூற ஆரம்பித்தாள். ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து "நாம் அடுத்தவர்களை அவர்கள் செய்யும் நற்செயலுக்காக மென்மேலும் பாராட்டினால் நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள்" என்று கூறினார்.

ஆசிரியர் நேர்மையாகவும், ஒழுங்காகவும் பெரியோரை மதித்து நடக்கும், மற்றவர்களிடம் தமது பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் குணம் மற்றும் பிறர் மேல் அக்கறை கொண்ட குணங்களைக் கொண்ட மாணவர்களைப் பாராட்டினார்.

அதனையடுத்து ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் பார்த்து அவர்கள் பெரியவர்களாகும் போது எப்படிப்பட்டவர்களாக ஆக விரும்புகின்றனர் என்றும் அவர்களது வாழ்க்கையின் லட்சியம் என்ன என்றும் கேட்டார்.

மேலும் அவர்கள் தங்களது முன் மாதிரிகளாக யாரை நினைக்கின்றனர். அவர்களை அப்படி நினைக்க காரணம் என்ன என்பது குறித்து கூறும்படி கேட்டுக் கொண்டார்.

### பயிற்சி

ஒவ்வொருவரும் ஒரு நாட்குறிப்பு வைத்துக் கொண்டு அதில் நல்ல குணங்கள், மதிப்பீடுகள் மற்றும் எதிர்மறை குணங்களை பட்டியலிட்டு வர வேண்டும் என்றும் கூறினார். அப்படி எழுதும்போது அவர்களுக்கு அதனை நேர்மறை குணங்களாக மாற்றுவதற்கு தூண்டுதலாகவும் ஒரு நல்ல மனிதராக மாறுவதற்கும் உதவி செய்யும் என்றும் குறிப்பிட்டார்.

### பெற்றோரின் கவனத்திற்கு

தங்களது குழந்தைகள் குறித்து அவர்களின் நல்ல மற்றும் கெட்ட பழக்க வழக்கங்கள் பண்புகள் குறித்து அவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சின்ன செயலுக்கும் பாராட்டும் மனப்பான்மை இருக்க வேண்டும்.

உலகில் பிறக்கும் மனிதர் அனைவரும் சுதந்திரத்தோடும், சுயமரியாதையோடும் உள்ளார்ந்த உரிமைகளோடும் பிறக்கின்றனர். இவர்கள் அனைவருமே பகுத்தறிவும் மனசாட்சியும் இயல்பிலேயே பெற்றவர்கள். எனவே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

–அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு–1

# 3. மனித ஏக்கங்கள்



**நோக்கம்**

- ஏக்கங்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- தங்களுடைய, பிறருடைய விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை புரிந்து கொள்ளுதல்.
- நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் ஏக்கங்கள் வெளிப்படுவதை உணர்தல்.

## மரம் செடிக்கும் உயிர் இருக்கு...

குழந்தை : அம்மா ! அம்மா . . . . . .

அம்மா : ஏண்டா கத்துற?

குழந்தை : நம்ம தோட்டத்தில இருந்த முள்ளுச் செடியை வெட்டி னேல்ல !

அம்மா : ஆமா, அதுக்கென்ன?

குழந்தை : அந்தச் செடி திரும்பவும் துளிர்த்திருக்குமா?

அம்மா : அய்யய்யோ ! அதை உடனே வெட்டணுமே.

குழந்தை : வாம்மா, வெட்டுவோம். (அம்மா அரிவாளை எடுத்துச் சென்று வெட்டுகிறாள். சில நாட்கள் சென்று தோட்டத்திற்கு விளையாடச் சென்ற குழந்தை செடி மீண்டும் துளிர்த்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். தாயிடம் ஓடி வருகிறான்.)

குழந்தை : ஏம்மா ! இந்தச் செடி வெட்ட வெட்ட துளிர்க்குது.

அம்மா : அது அப்படித்தான்.

குழந்தை : சொல்லும்மா ! (சிணுங்குகிறான்)

அம்மா : அந்தச் செடிக்கும் உயிர் இருக்குப்பா. அதனாலதான்.

குழந்தை : உயிர் இருக்கா ?!

அம்மா : உயிர் இருப்பதால்தான் சாகக் கூடாதுன்னு நினைக்குது.

குழந்தை : ஏன் செத்துப் போகக் கூடாதுன்னு நினைக்குது? அந்தச் செடியால யாருக்கும் எந்தப் பயனுமில்லையே!

அம்மா : நமக்குப் பயனில்லைதான் ஆனால், அந்தச் செடிக்கும் உயிர் இருக்கே.

குழந்தை : அதனால . . . . .

அம்மா : அதுக்கும் உயிர் இருப்பதால்தான் உயிர் வாழணும்னு ஏக்கமிருக்கு!

குழந்தை : இந்த ஆசை முள்ளுச் செடிக்கு மட்டுந்தான் இருக்கா.



அப்பா : உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் வாழணும்னு ஒரு ஏக்கம் இருக்குப்பா. இந்த ஏக்கம் எல்லார்க்கும் பொதுவானதுப்பா !

குழந்தை : ஏக்கம் இயற்கையானதுன்னா, நாம அதை வெட்டுறது தப்புதானப்பா.

அப்பா : சரியாச் சொன்ன !

குழந்தை : இந்த ஏக்கம் செடிகளுக்கு உண்டுன்னு சொன்னா, மனுஷங்களுக்கும் இருக்கும்தானேப்பா?

அப்பா : நிச்சயமாக எல்லோருக்கும் உண்டு.

குழந்தை : உனக்கு ஏக்கம் உண்டாப்பா?

அப்பா : எனக்குமுண்டு, உன் அம்மாவுக்குண்டு, உனக்கும் உண்டு.

குழந்தை : எனக்குமா? எனக்கு ஏக்கமே இல்லையப்பா.

அப்பா : இல்லையில்லை ! உனக்குமுண்டு.

குழந்தை : அது எப்படி.

அம்மா : அம்மா, அப்பா நீ கேட்டதெல்லாம் வாங்கித் தரணும்னு நினைக்கிறல்ல? உன்னை திருவிழாவுக்கு கூட்டிட்டுப் போகணுமுன்னு நினைக்கிறல்ல? மிட்டாய் வாங்கித் தரணுமின்னு நினைக்கிறல்ல. இதே மாதிரி நிறைய ஏக்கமிருக்கத்தானே செய்யும்.

குழந்தை : இதுதான் ஏக்கமாம்மா !

அப்பா : சிலருக்கு நிறைய படிக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு பக்தியாயிருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு உடல் நல்ல பலமா இருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு சரிசமமாக நடத்தணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்குச் சுதந்திரமாக இருக்கணும்னு ஏக்கமிருக்கும். இப்படி எத்தனையோ ஏக்கங்கள் இருக்கு.

குழந்தை : இதுக்கெல்லாம் நாம என்ன செய்யுறது?

அம்மா : நாம மனுஷசங்கதானே, அதனால நம்ம ஏக்கங்களைப் பற்றி மட்டும் கவலைப்படாமல், பிறருடைய ஏக்கங்களைப் பற்றியும் கவலைப்படணும். அவங்க ஏக்கங்களை நாம புரிஞ்சுக்கணும்.

குழந்தை : பக்கத்து வீட்டு மல்லிகா பள்ளிக்கூடத்துக்கே போகலியேப்பா? அவளுக்குப் பள்ளிக்கூடம் போகணும்னு ஏக்கமிருக்குமாம்மா?

அப்பா : ஆமா. கட்டாயமிருக்கும். இதைத்தான் வாழ்வுக்கான ஏக்கம்னு சொல்றோம்.

குழந்தை : அது சரிப்பா. இந்த மாதிரி வாழ்வுக்கான ஏக்கங்கள் எப்போ வெல்லாம் எப்படியெல்லாம் நம் மனசுக்குள்ள வெளிப்படும்னு சொல்லுங்கப்பா.

அப்பா : நல்ல கேள்வி. இந்த ஏக்கம் நாம் பொறந்ததுலேயிருந்து இருக்குது. எப்போதுமே நமக்குள்ளேயே இருக்கும். ஆனா, ஒரு மனிதர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது அது தெளிவாக வெளிப்படுறதைப் பார்க்கலாம். இதோ பாரு சில செய்தித் தாள்கள் வச்சிருக்கேன். அவைகளில் கொடுக்கப்பட்டுள்ள சில செய்திகளை நான் படிக்கிறேன். கவனமாக் கேளு. நான் சொன்னது புரியும்.



## ஏக்கம் 1

**சங்கீதா, வயது 14.**

தூய்மைப் பணி செய்யும் குடும்பத்தைச் சார்ந்த பெண் குழந்தை. வகுப்பறையில் ஏனைய மாணவர்களோடு உட்கார ஆசிரியர் அனுமதிக்காமல் கடைசி பெஞ்சில் அமரச் சொன்னார். படிப்பில் அவள் கெட்டிக்காரியாக இருந்த போதும் இவள் இவ்வாறாக நடத்தப்பட்டமையால் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டாள். 'நான் டாக்டராக வேண்டும் என்று விரும்பினேன். என் கனவெல்லாம் தகர்ந்து போய் விட்டது.'

## ஏக்கம் 2

இன்னொரு பையன் சொல்கிறான். 'எங்கள் ஆசிரியர் வகுப்பின் கடைசி இருக்கையில் அமரச் சொல்கிறார். நாங்களும் மனிதர்களில்லையா? எங்களுக்கும் மாண்பில்லையா? எங்கள் மாண்பும் காக்கப்பட எங்களுக்கு விருப்பம் இருக்காதா? எங்களையும் சமமாக நடத்த மாட்டாங்களா?

(ஆதாரம் : Human Scope 2002)

குழந்தை : வாசிச்ச பிறகு ரொம்ப கவலையா இருக்குப்பா. ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலேயும் எவ்வளவு ஏக்கம் இருக்குண்ணு இப்பத்தான் புரிஞ்சுதுப்பா.

## ஏக்கங்கள் பலவிதம்

உயிர்களுக்கு வாழணும்கிற ஏக்கம் பொதுவானது என்று பார்த்தோமல்லவா? இந்த உயிர்களுள் மனிதனுக்கு நிறையவே ஏக்கங்கள் இருக்குன்னு உங்களுக்குத் தெரியும். இவை என்னன்னு கண்டுபிடிப்போமா?

### உடல் சார்ந்த ஏக்கம்


எனக்கு காய்ச்சல் வரக்கூடாது. மூக்கு ஒழுகக் கூடாது. நல்ல திடமான உடல் வேண்டும். எந்த நோயும் வரக் கூடாது.

### தேவைகள் சார்ந்த ஏக்கம்

எனக்கு என் நண்பனின் சட்டைபோல நல்ல சட்டை வேணும். மூன்று வேலையும் நல்ல உணவு வேண்டும். விளையாட எனக்கு பொருட்கள் வாங்கித் தர வேண்டும்.

### பாசத்திற்கான ஏக்கம்

எங்க அம்மா, அப்பா எங்கிட்ட அன்பா இருக்கணும். எங்க வாத்தியாரு எங்கிட்ட நல்லா பேசணும். என் வகுப்புல உள்ள மத்த மாணவர்கள் எங்கிட்ட நல்லா பழகணும்.



### அறிவுக்கான ஏக்கம்

நிறைய படிக்கணும், நல்லா சொல்லித் தருகிற ஆசிரியர் வேணும். எல்லா வகையான புத்தகங்களும் வேணும். எளிதாய் புரிந்து கொள்ளும் வகையில் புத்தகங்களை வாங்கித்தர வேண்டும்.

### படைப்பதற்கான ஏக்கம்

எனக்கு ஓவியம் வரைய ரொம்ப ஆசை. எந்தக் காட்சியைக் கண்டாலும் வரையணும்னு துடிப்பேன். எங்க வீட்ல நான் படம் வரைவதைக் கண்டாலே படிடா படிடான்னு திட்டுவாங்க. எனக்கு எப்போதும் படம் வரை யணும்னுதான் ஏக்கமாயிருக்கு. நாடகங்களில் நடிக்கணும் என்ற ஏக்கம். மேடையில் தயக்கம் இல்லாமல் பாட்டு பாடணும்னு ஏக்கம். நல்லா கவிதை எழுத ஏக்கம்.

### சமமாக வாழ்வதற்கான ஏக்கம்

எங்கூட படிக்கிற பையங்க சிலரு மத்தியானம் சாப்பாடு கூட கொண்டு வருவதில்லை. ஏன்னு கேட்டா வீட்ல கஷ்டமாம். இதைப் பார்க்கும்போது ரொம்ப கஷ்டமாக இருக்கு. ஒருவர் சாப்பிடறது; இன்னொருவர் பட்டினி கிடப்பது ஏன்? இரண்டு பேரும் சமமாக வாழணும்னு எனக்கு ஏக்கமாக இருக்கு. சாதி, மதம் பார்த்து நண்பர்களாக பழகாமல் எல்லோரும் சமமாய் நண்பர்களாய் பழகணும்னு ஏக்கம்.

### சமூக அந்தஸ்துக்கான ஏக்கம்

என் தந்தை கழிவறை சுத்தம் செய்யும் பணியைச் செய்றார். நான் எட்டாம் வகுப்பு வரை படித்தேன். அதற்குப் பிறகு வசதியில்லாமையால் படிப்பை நிறுத்தி விட்டேன். ஆனால், தொடர்ந்து படிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. அது மட்டுமல்ல, ஒரு டாக்டராக வேண்டும் என்று கூட ஆசைப்பட்டேன். முடியவில்லை. அடுத்த பிறவியிலாவது எனது கனவு நனவாகாதா என்று ஏங்குகிறேன். இது 14 வயது சுகுணாவின் ஏக்கம்.

## சுதந்திரத்திற்கான ஏக்கம்

என் பெயர் மீரா. நான் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறேன். என் தம்பி எட்டாம் வகுப்பில் படிக்கிறான். ஒவ்வொரு நாளும் மாலையில் என்னுடைய தம்பி தெருவிலுள்ள நண்பர்களோடு ஓடியாடி விளையாடுவான். ஆனால், என்னை மட்டும் தெருவில் விளையாடப் போகக் கூடாது. வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று என் அம்மா கட்டுப்படுத்துகிறார். எனவே, வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறேன். என் தம்பியைப்போல நானும் சுதந்திரமா என் தோழிகளோடு வெளியில் சென்று விளையாட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.

## பயிற்சி

1. அடிப்படைச் சொற்கள் (வாசிப்புப் பயிற்சி)

(ஒவ்வொரு மாணவரும் ஒரு சொல்லை உரக்க வாசிக்க வேண்டும்)

| | | |
|---|---|---|
| உயிர் | துளிர்த்தல் | வளர்ச்சி |
| வாழ்வு | ஆசை | ஏக்கம் |

2. இது யாருடைய ஏக்கம் ?

'எல்லோரையும் பார்த்து எவ்வளவு நாளாச்சு?'

விடை : ______________________

3. இது என்ன ஏக்கம்?

(எ.கா.) நல்ல சட்டை வேண்டும்

விடை : தேவை சார்ந்த ஏக்கம்

1. என்னிடம் எல்லோரும் அன்பா இருக்கணும்

விடை : ____________ ஏக்கம்

2. நிறைய படிக்கணும்

விடை : ____________ ஏக்கம்

3. தலைவலி, காய்ச்சல் வரக்கூடாது

விடை : ____________ ஏக்கம்

4. என் தோழிகளோடு வெளியில் சென்று விளையாட வேண்டும்.

விடை : ____________ ஏக்கம்

உங்களுக்கும் இது போன்ற ஏக்கங்கள் உள்ளதா? எழுதவும்

மனிதரின் ஏக்கம், அவரவர் உடனடித் தேவையின் அடிப்படையில் எழுகின்றன. இவைகள்தான் உணர்வுகளின் பிறப்பிடமாகவும் இருக்கின்றன.

> இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியம், தேசியம், தேசிய இனம், இயலாமை, பிறப்பு இவைகளின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டப் பெறல் கூடாது.
>
> -ஐ.நாவின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கை, 1989 பிரிவு-2

# 4. முன் தீர்மானம்

**நோக்கம்**

- முன்தீர்மானம் என்றால் என்ன?
- முன்தீர்மான கருத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன? எங்கிருந்து உருவாகின்றன?
- முன்தீர்மான கருத்துக்கள் எவ்வாறு மக்களைப் பிரிக்கிறது என்பதை புரிந்து கொள்ளுதல்.
- முன்தீர்மான கருத்துக்கள் சமத்துவத்திற்கு எதிரானது என்பதை உணர்ந்து கொள்ளுதல்.

## பேருந்து நிலையத்தில் பெண் குழந்தையை தவிர்க்க விட்ட கொடுமை

சரோஜா : எங்கே போயிட்டு வர. ஏன் இன்றைக்கு பள்ளிக் கூடத்துக்கு வரல

கமலா : பக்கத்து ஊரில இருக்குற அத்தை வீட்ல விசேஷம் இருந்தது. அதனாலதான் பள்ளிக் கூடத்துக்கு வரல.

சரோஜா : ஏன் கமலா ஒரு மாதிரி கவலையாய் இருக்க?

கமலா : ஒன்னும் இல்ல சரோஜா, ஊருக்கு போயிட்டு வரும்போது பேருந்து நிலையத்தில் பிறந்த பெண் குழந்தையை யாரோ போட்டுட்டு போயிட்டாங்களாம். ஒரே கூட்டமாய் இருந்தது.

சரோஜா : அப்புறம் என்ன நடந்தது?

கமலா : போலீஸ்காரங்களும் குழந்தைகள் உதவும் குரலில் இருந்து அதிகாரிகளும் வந்து குழந்தையை மீட்டுட்டு போயிட்டாங்க.

சரோஜா : கேட்கவே ரொம்ப கவலையா இருக்கு. நாளைக்கு நம்ம வித்யா டீச்சரிடம் இதைப்பத்தி சொல்லி ஏன் இது போல நடக்குது என கேக்கலாம்.

கமலா : நீ சரியா சொன்ன, நாளைக்கு டீச்சர்கிட்ட இது பற்றி கேட்கலாம்.

சரோஜா : காலை வணக்கம் மிஸ்.

ஆசிரியை : வணக்கம், ரெண்டு பேரும் வாங்க எப்படி இருக்கீங்க?

கமலா : டீச்சர் நான் நேற்று ஊருக்கு போயிட்டு வரும்போது, பேருந்து நிலையத்தில் பிறந்த பெண் குழந்தையை யாரோ போட்டுட்டு போயிட்டாங்க. குழந்தைகள் உதவும் குரல் அதிகாரிகள் வந்து குழந்தையை மீட்டுட்டு போனாங்க. அம்மா இல்லாம அந்த குழந்தை அழுதது மனசுக்கு ரொம்ப கஷ்டமாய் இருந்தது.

சரோஜா : ஏன் டீச்சர் இப்படி குழந்தைகளை ரோட்டுல வீசிட்டு போறாங்க.

ஆசிரியை : நாம் வாழும் இந்த சமூகத்தில் ஆண் என்றால் உயர்வு என்றும் பெண் என்றால் தாழ்வு என்றும் மனநிலை ஊறிபோய் இருக்கு. அதனால்தான் ஆண் குழந்தைகளை ஒரு மாதிரியாகவும் பெண் குழந்தை என்றால் ஒரு மாதிரியாகவும் நடத்துறாங்க.

கமலா : அதற்காக குழந்தையை வேணாம் என்று தெருவில் வீசுவாங்களா?

ஆசிரியை : அப்படி செய்வதற்கு பல தவறான காரணங்களை சொல்றாங்க. அது எல்லாமே தப்புதான்.

சரோஜா : தவறான காரணங்கள் என்றால் என்ன டீச்சர்?


ஆசிரியை : தவறான காரணங்களைத்தான் முன்தீர்மானம் என்று சொல்வாங்க.

முன் தீர்மானக் கருத்துக்கள் நம்மிடம் நிறையவே இருக்கின்றன. ஆண் பெண், சாதி, மத, ஏழ்மை என பல குறுகிய எண்ணங்களுடன் பிறரை வித்தியாசப்படுத்தி பார்ப்பது முன்தீர்மானமாகும். பிறரோடும் பிற குழுக்களோடும் பழகும் போது இக்கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு பேசத் தொடங்குகிறோம். இத்தகைய மனநிலை நம்மில் ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தாமல் பிரிவினைகளை உருவாக்குகிறது.

## முன் தீர்மானம் என்றால் என்ன?

முன் தீர்மானம் என்பது ஒருவரைப் பற்றியோ, அல்லது இன்னொரு சமூகக் குழுவைப் பற்றியோ முன் கூட்டியே ஒரு தப்பான, இழிவான, தாழ்வான கருத்தைத் தீர்மானித்துக் கொண்டு அதையே சரியென்று நியாயப்படுத்தும் மனநிலை.

## முன் தீர்மானக் கருத்துக்கள் உருவாகக் காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| அறியாமை | வதந்திகள் | பொறாமை | அந்தஸ்து |

**அறியாமை** : பிறர் கூறுவதை அப்படியே கேள்வியே கேட்காமல் உண்மையென்று நம்புவது.

**வதந்திகள் :** வதந்திகள் உண்மைதானா என்று கேட்டறியாமல் நம்புவது.

**பாரம்பரியப் பேச்சு :** பழமொழிகள், கதைகள், விடுகதைகள் தரும் செய்திகளை அப்படியே உள்வாங்குவது. 'அவர்கள் அப்படித்தான்' எனப் பொதுமைப்படுத்தித் தீர்ப்பிடுவது.

**பொறாமை :** ஒருவர் மீது கொண்ட பொறாமையால் அவர் மீது எப்பொழுதும் தவறான எண்ணம் கொண்டிருப்பது.

**அந்தஸ்து :** உயர்ந்த நிலையில் இருப்பதாக கருதுபவர்கள் பிறரைத் துச்சமாகக் கருதுவது, தாழ்வாக மதிப்பது, இளக்காரமாகப் பேசுவது.

## எங்கிருந்து உருவாகிறது?

### குடும்பம்

பெற்றோர், சகோதர, சகோதரிகள், அத்தை, மாமா, தாத்தா பாட்டி, அண்டை வீட்டார் – இவர்களைச் சுற்றித் தானே குழந்தைகள் வாழ்கின்றனர். இக்குழந்தைகள் தாம் அறியாமலேயே, குடும்பத்தின் மூத்தோரின் பழக்க வழக்கங்களை, மதிப்பீடுகளை அப்படியே பிரதிபலிப்பதுபோல, இக்குடும்பத்தாரின் கருத்துக்களையும் அப்படியே உள் வாங்கிக் கொள்கின்றனர்.

### மதம்

முன் தீர்மானக் கருத்துக்களை உருவாக்குவதில் மதம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மதத்திற்குள் கடவுள் மட்டும் இருப்பதாக எண்ணக்கூடாது, ஒவ்வொரு மதத்திற்கும் தனிப்பட்ட வழிபாடு முறை, உணவு,

உடை, பழக்கவழக்கங்களும் உண்டு. குழந்தைகள் இச்சமயச் சூழலில் வளர்க்கப்படுகின்ற போது, இச்சடங்குகளின் படி வாழவே தூண்டப் பெறுகின்றனர். இச்சடங்குகளே உயர்ந்தவை, நாம் வணங்கும் கடவுளே உயர்ந்தது என்ற கருத்து குழந்தைப் பருவத்திலேயே சொல்லித் தரப்படுகின்ற போது, ஏனைய மதத்தைச் சார்ந்த அனைத்தையும் இக்குழந்தை தவறாகப் பார்க்கிறது.

## நண்பர் வட்டம்

குடும்பச் சூழலில் வளரும் குழந்தை பெரியவராகின்ற போது பள்ளிக்கூடம், கல்லூரி, விடுதி, பணி செய்யும் இடங்களிலும் பலதரப்பட்ட மக்களைச் சார்ந்திருக்கின்றார். சிறிய வட்டம் பெரிதாகிறது. சிலருக்குப் புதிய அனுபவம், கருத்தில், பார்வையில் மாற்றத்தைத் தருகிறது. சிலர், உலகினுள் நுழைகின்ற போது தான் சார்ந்த சாதி, மதக் குழுவினரோடு மட்டும் உறவு கொண்டு, ஏற்கனவே குடும்பத்தில் பெற்ற மதிப்பீடுகளை, பார்வைகளை இங்கு நியாயப்படுத்தி நிலைப்படுத்துகின்றனர்.

## சமூகத் தொடர்பு சாதனங்கள்




- திரைப்படங்கள், பத்திரிகைகள் மூலம் முன் தீர்மானக் கருத்துகள் வலுப்படுத்தப்படுகின்றன.
- சாதியக் கலவரங்கள், சமயச் சண்டைகள் போன்ற நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற போதும், கதைகள் சொல்லுகின்ற போதும் சில குறிப்பிட்ட சமூகங்களின் தனிப்பட்ட குணங்களை மிகையாகக் காட்டுதல்.
- சில சாதிகள், மதத்தைச் சார்ந்த மக்களின் நடை, உடை, பழக்க வழக்கங்கள், பேச்சு முறை போன்ற விஷயங்களைப் பிரித்துக் காட்டுதல்
- ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுக்களை தொடர்ந்து தவறாக காட்டுதல்.
- பெண்களை தவறாக சித்தரிப்பது.

## பயிற்சி

### 1. அடிப்படைச் சொற்கள் [வாசிப்புப் பயிற்சி]

(ஒவ்வொரு மாணவரும் ஒரு சொல்லை உரக்க வாசிக்க வேண்டும்)

| | | |
|---|---|---|
| வீடு | நிலம் | கடன் |
| சாதி | மதம் | ஊர் |
| தீர்மானம் | கருத்து | பிடிவாதம் |

| | | |
|---|---|---|
| கற்பனை | பயம் | மறுப்பு |
| கதை | வதந்தி | செய்தி |

2. இவர்கள் நால்வரும் நண்பர்கள். ஆனால் நமக்கு எதிரிகள். இவர்கள் யார்? விடுபட்ட எழுத்துக்களை நிரப்பிக் கண்டுபிடி.

    1. க ___ டுக் ___ தை
    2. ___ தந்தி
    3. பொ ___
    4. மு ___ தீ ___ மா ___ ம்

## பெற்றோருக்கான பயிற்சிகள்

3. பெண்களை தவறாக சித்தரிக்கும் பழமொழிகளை உங்கள் வீட்டில் அல்லது தெருவில் உள்ள பெரியவர்களிடம் கேட்டு எழுதி வரவும்.

    1. ______________________________
    2. ______________________________
    3. ______________________________
    4. ______________________________
    5. ______________________________

4. உங்கள் வீட்டில் பெண் குழந்தைகளை சமமாக மதிக்கும் சூழல் உள்ளதா? இல்லையெனில் மதிக்கும் சூழலைக் கொண்டு வர என்ன செய்வீர்கள்?

பெண்கள் மீது மரபுரீதியாக சமூக, கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன் தீர்மானக் கருத்துக்களைப் போக்க அரசு முயல வேண்டும்.

– பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான சர்வதேச உடன்படிக்கை, பிரிவு 5.

### அடிமையென்று யாருமில்லை

யாரும் யாரையும் அடிமையாகக் கொள்ளவோ நடத்தவோ உரிமை இல்லை. அடிமை முறைகளின் அத்தனை வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

– அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு–4

### தவறான முறையில் பயன்படுத்தப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும்

உடல், மனரீதியான வன்முறைகளிலிருந்தும், சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைகளிலிருந்தும் புறக்கணித்தல், அவமானப்படுத்துதலிருந்தும் பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

–ஐ.நாவின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கை, 1989 பிரிவு–19

# 5. பால் மற்றும் பாலினம்

## நோக்கம்

- பால் மற்றும் பாலினம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளுதல், சமூகத்தில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ளுதல்.

## பால் மற்றும் பாலினம் என்றால் என்ன?

பால் என்பது உடல்ரீதியானது. ஆண் என்றும் பெண் என்றும் உடலை வைத்து குறிப்பிடுவது மற்றும் மாறாதது. பாலினம் என்பது கலாச்சாரம் மற்றும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது. இது இடத்துக்கு இடம் காலத்துக்கு காலம் மாறக்கூடியது.



## உடல் ரீதியான வித்தியாசங்கள் :

| ஆண் | பெண் |
|---|---|
| மீசை மற்றும் தாடி | குழந்தை பெற்றெடுத்தல் |
| கர்ப்பப்பை கிடையாது | கர்ப்பப்பை உண்டு |

## பணிப் பங்கீடுகள்:

சமூக, கலாச்சார அடிப்படையில், ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு பொறுப்புகளையும், வேலைகளையும் பகிர்ந்தளிப்பது என்பதைக் குறிக்கிறது. பால் மற்றும் பாலின அடிப்படையில் பெண் களுக்கும், ஆண்களுக்கும் சிறுமியருக்கும், சிறுவர்களுக்கும் இடையில் வேலைகளும் பொறுப்புகளும் ஒப்படைக்கப்படுகின்றன. உற்பத்தி, மறு உற்பத்தி மற்றும் சமூகம் சார்ந்த பணிகள் என்று அவற்றை வகைப்படுத்தலாம்.

தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் பண்ணைகளில் செய்யப்படும் அனைத்து வேலைகளும் உற்பத்தி என்ற வகைக்குள் அடங்கும்.

மறு உற்பத்தி பணிகள் என்பது இரு வகைப்படும்.

அவை உயிரியல் ரீதியான மறு உற்பத்தி மற்றும் சமூக ரீதியான மறு உற்பத்தி. உயிரியல் ரீதியான மறு உற்பத்தி என்பது மனித உயிர்களைப் பெற்றெடுத்தல் என்பதைக் குறிக்கும். மனிதர்கள் வாழ்வதை, வாழ்க்கையை உத்திரவாதப்படுத்துதல், கவனித்தல், பேணி வளர்த்தல் போன்ற அனைத்து காரியங்களும் சமூக ரீதியான மறு உற்பத்தி பணியைக் குறிக்கும்.

சமூகம் சார்ந்த பணிகள் என்பது சமூக அமைப்பை ஒருங்கிணைத்து, வழி நடத்தி செல்வதற்கு தேவையான அனைத்து செயல்பாடுகள் உதாரணத்திற்கு ஆட்சி முறை, சமூக கலாச்சார திருவிழாக்களை ஒருங்கிணைப்பது, சாலை, பள்ளிகள் மருத்துவ வசதிகள் போன்றவை.

இவற்றுள் பெண்கள் பங்கெடுத்தாலும் இதிலும் ஆண்கள் செய்யும் பணிகள் பெண்கள் செய்யும் பணிகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

**உரையாடல்:**

கீதா : அம்மா... அம்மா... எங்கம்மா இருக்கிறீங்க?

பாலன் : கீதா, அம்மா சமையலறையில் இருக்காங்க. இங்க வா

அம்மா : வா கீதா, இந்த சிற்றுண்டி சாப்பிடு, பாலன் நீயும் சாப்பிடு, இருவரும் சாப்பிட்டவுடன் அவரவர் பாத்திரங்களை கழுவி வைத்து விட்டு வெளியில் கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் உங்கள் ஆடைகளை மடித்து வையுங்கள். அதன் பிறகு உங்கள் பள்ளியில் நடந்த விசயங்களைப் பற்றி பேசலாம்.

கீதா : அம்மா நான் எனது பாத்திரங்களைக் கழுவி வைத்து விட்டேன். பாலன் அண்ணா அவனது பாத்திரங்களை கழுவவும் இல்லை. துணிகளை மடிக்கவும் இல்லை.

பாலன் : அதெல்லாம் பொம்பள செய்யுற வேலை. நான் ஆம்பிளை. போ நீ போய் கழுவு அல்லது அம்மா கழுவுவாங்க.

அம்மா : பாலன் இனிமேல் நீயும், கீதாவும் என்னுடன் வேலைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நம் வீடு ஆண், பெண் சமத்துவம் நிலவும் வீடு.

கீதா : அம்மா... ஆம்பிளை செய்யுற வேலை பொம்புள செய்யுற வேலை என்றால் என்ன?

அம்மா : இரு, பாலன் அவன் பாத்திரங்களை கழுவி விட்டு, துணிகளை மடித்து வைத்து விட்டு வரட்டும் விளக்கமாக பேசலாம்

பாலன் : அம்மா... நான் என் வேலைகளை முடித்து விட்டேன்.

அம்மா : வா பாலன் இங்கு வந்து உட்கார். கடவுள் மனிதனை படைக்கும் போது ஆண், பெண் என்று படைத்தாரே தவிர இது ஆண் வேலை, இது பெண் வேலை என்று படைக்கவில்லை. இருவரும் ஒன்றாகவே எல்லா வேலைகளையும் செய்தார்கள். பெண்ணுக்கு கர்ப்பப்பை இருப்பதனால் அவள் குழந்தை பெற்றாள். ஆனால் குழந்தை உருவாவதற்கு ஆண். பெண் இருவரும் காரணம். குழந்தை பெற்றதனால் பெண் குழந்தைகளைப் பராமரித்தாள். உற்பத்தி அப்போது வீட்டுக்குள்ளேயே இருந்தது. காலப் போக்கில் நாகரிகம் வளர, வளர தொழில் அல்லது உற்பத்தி என்பது வெளியே சென்று பொருளீட்டும் வேலையாக அமைந்தது. இதில் ஆண்கள் அதிகம் பங்கேற்றனர். பெண்கள் குழந்தைகள் மற்றும் பெரியோரை பராமரித்தல் மற்றும் வீட்டை பராமரித்தல் என்று வீட்டிலேயே இருந்து விட்டனர். இது தொடர்ச்சியாக பல காலமாக நடைபெற்று வந்ததால் இது ஆண்கள் வேலை, இது பெண்கள் வேலை என்று பிரித்து பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

கீதா : அம்மா... ஆனால் பெண்கள் எல்லா வேலையையும் செய்ய முடிவதில்லையே, அவர்கள் பலவீனமானவர்கள்தானே?

அம்மா : இல்லை, எல்லா வேலைகளையும் இருவரும் செய்ய முடியும். நாம் ஒரு வேலையை தொடர்ந்து செய்யும் போது அது நமக்கு சுலபமாகி விடுகிறது. உதாரணத்திற்கு வாகனம் ஓட்டுவது. முன்பு ஆண்கள் மட்டுமே ஓட்ட முடியும் என்று நினைத்ததை இன்று பெண்கள் செய்து வருகின்றனர். அதிலும் கனரக வாகனங்களைக் கூட பெண்கள் இயக்குகின்றனர். விமானம் ஓட்டுதல், இரயில் ஓட்டுதல் போன்றவற்றைக்கூட பெண்கள் இயக்குகின்றனர். அதேபோல் குழந்தை வளர்ப்பு பெண்கள் மட்டுமே செய்யக் கூடியது. ஆனால் எத்தனையோ ஆண்கள் குழந்தைகளை வளர்க்கின்றனர். சமையல் செய்கின்றனர். இவற்றிற்கெல்லாம் பழக்கம்தான் காரணம்.

பாலன் : ஆனால் அம்மா... ஆண்கள் பெண்களை விட பலசாலிகள்தானே

அம்மா : இல்லை பாலன். பெண்களில் பலசாலிகள் உண்டு. பத்து குழந்தைகளைக் கூட சர்வ சாதாரணமாகப் பெற்ற பெண்கள் உண்டு. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பெண்கள் உண்டு. ஆண்களில் பலவீனமானவர்கள் உண்டு, எல்லா ஆண்களும் பலசாலிகள் இல்லை. மேலும் சிறு வயது முதல் நல்ல சத்தான உணவு சாப்பிட்டு உடற்பயிற்சி செய்பவர்கள் உடல் பலம் பொருத்தியவர்களாக இருப்பர். காலம் காலமாக பெண்கள் மிக குறைவாக சாப்பிடுவதும், வீட்டில் கடைசியாகச் சாப்பிடுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு சமூகத்தில் பெண்கள் அதிகம் சாப்பிடக்கூடாது என்ற கட்டுப்பாடும் ஒரு காரணம். நல்ல உணவை ஆண்களுக்கு அளித்து விட்டு மிச்சம் இருப்பதை பெண்கள் சாப்பிடுவது வழக்கமாக காணப்படுகிறது. அதே போல சிறு வயதில் இருந்து நீச்சல். மரம் ஏறுதல், ஓட்டம் போன்ற பயிற்சிளைச் செய்ய ஆண் குழந்தைகளுக்கு இருக்கும் அனுமதி பெண் குழந்தைகளுக்கு கிடையாது. இதனால் பெண் குழந்தைகள் மென்மையான விளையாட்டுக்கள் விளையாடுகின்றனர். தொடர்ந்து பெண்கள் மென்மையானவர்கள் அவர்கள் பலவீன மானவர்கள் என்று கூறியும் அதுதான் பெண்களுக்கு அழகு என்று கூறியும் பெண்களை பலவீனமாக்கி விட்டனர்.

கீதா : பெண்கள் இப்போ நிறைய வெளி வேலைக்கு சென்றுவிட்டார்களே அம்மா, அப்போ ஆண், பெண் சமத்துவம் வளர்த்து விட்டது என்று சொல்லலாமா அம்மா?

அம்மா : அப்படி சொல்வதற்கு முடியாது. மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. இன்னும் முழுமையான ஆரோக்கியமான ஆண், பெண் சமத்துவம் வளரவில்லை. பெண்கள் எல்லாம் வேலைக்கு சென்றாலும் குடும்பத்தில் வீட்டில் அவர்கள் பணிகள் மாறவில்லை. அதனால் அவர்கள் இரட்டை வேலைப் பளுவுக்கு ஆளாகியுள்ளனர். சமைத்தல், துணி துவைத்தல், பாத்திரங்கள் கழுவுதல், குழந்தைகளைக் கவனித்தல், பெரியோரைக் கவனித்தல் போன்ற அனைத்து வேலைகளிலும் பெண்கள் பங்கே மிக அதிகம். ஒரு சில இடங்களில் ஒரு சில ஆண்கள் இந்த வேலைகளை செய்கின்றனர். இன்று வீட்டு வேலைகள் செய்வதற்கு பல கருவிகள் வந்து விட்டாலும் அவற்றை இயக்குதலும் அவற்றை பராமரித்தலும் பெண்கள் வேலையாகத்தான் உள்ளது.

பாலன் : இதனால் பெண்கள் ஆரோக்கியமும் பாதிக்கப்படும் இல்லையா அம்மா?

அம்மா : கண்டிப்பாக அவர்கள் தனக்கு உடல் நிலை மிக மோசமடையும் போதுதான் சிகிச்சை எடுத்துக் கொள்கின்றனர். இன்றும் சத்தான உடலுக்கு தேவையான உணவு எடுத்துக் கொள்ளும்

பெண்கள் மிகக் குறைவு. பெண்களே தம்மை தாழ்வாக நினைப்பதும் இதற்கு ஒரு காரணம். ஆண்களுக்குத்தான் சத்தான உணவுகள் தேவை தமக்கு தேவை இல்லை என்று நம்புவதும் பெண்கள் ஆரோக்கியம் கெடுவதன் காரணங்களில் ஒன்று.

கீதா : அரசியலிலும், பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகம் பங்கெடுக்காமல் இருப்பதற்கு ஆண், பெண் சமத்துவமின்மைதான் காரணமா அம்மா?

அம்மா : ஆமாம். பெண்களுக்கென்று சில சமூக வேலைகள் அதாவது பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகளின் நீட்சியாக சில வேலைகள் வெளியில் செய்ய அனுமதிக்கப்படுகிறது. வேலை வட்டாரங்களிலும் அப்படியே. பெண்ணுக்கு நிறைய கட்டுப்பாடுகளை விதித்த சமூகம் ஆணுக்கு நிறைய சுதந்திரத்தை அளித்து விட்டது. இது பெண்களின் சுதந்திரத்தை பாதித்தது மட்டுமன்றி ஆண்கள் நிறைய குற்றங்களில் ஈடுபடுவதற்கும் காரணமாகி உள்ளது. மேலும் பெண்களின் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளப்படாமல் இருந்ததால் பெண்களுக்கு பொது வாழ்க்கையில் ஈடுபடுவது என்பது இரட்டை வேலைப்பளுவாக இருக்கிறது. இதையும் தாண்டி சாதித்துக் கொண்டு இருக்கும் பெண்களும் இன்று நம்மிடையே இருக்கின்றனர். மாற்றங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் நிறைய வர வேண்டும்.

கீதா : அம்மா... நம் அப்பா உங்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்காரா அம்மா? அவர் வீட்டு வேலைகளை பகிர்ந்து கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அதனால் பணிப்பங்கீடு என்பது நம் வீட்டில் காணப்படும் ஒரு நல்ல விசயம்.

அப்பா : ஆம் கீதா, சரியாக சொன்னாய், நான் இதுவரை நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் உங்களை தொந்தரவு செய்யாமல் என்ன பேசுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். இனி நீங்கள் இருவரும் உங்களது வேலைகளைச் செய்து பழக வேண்டும். நீங்கள் ஓரளவிற்கு வளர்ந்து விட்டதால் இனி நீங்கள் உங்களது வேலைகளைச் செய்து கொள்ளலாம். வீட்டில் உள்ள பொது வேலைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.


பாலன் : மிக்க மகிழ்ச்சி அப்பா. இப்படி எல்லா ஆண்களும், பெண்களும் இருந்து விட்டால் நம் சமுதாயம் ஒரு நல்ல நாகரிகம் கொண்ட சமுதாயமாக மாறிவிடும் அம்மா.. அப்பா... நானும் கீதாவும் எங்கள் நண்பர்களிடம் இது குறித்து பகிர்ந்து கொள்வோம் அப்பா.

# 6. பாலின பாகுபாடு

**நோக்கம்**

- மக்கள் எண்ணிக்கையில் சரிபாதியானப் பெண்கள் பாகுபடுத்தப் பெறல் மனித உரிமை மீறல் என்பதனை எடுத்துக் காட்டல்.
- பெண்கள் தம் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் எப்படியெல்லாம் பாகுபடுத்தப் பெறுகின்றனர் என்பதனைப் படம் பிடித்தல்.
- ஆண், பெண் சமத்துவமற்ற சமூகம் ஒரு முழுமையான சனநாயக சமூகமா இருக்கமுடியாது என்ற கருத்தை விளக்கல்.
- பெண்களும் ஆண்களும் சரிநிகர் சமானமாக வாழ விழிப்புணர்வை உருவாக்கல்.

## பெண்கள் மீதான பாகுபாடு- கருவறையிலிருந்து கல்லறை வரை



பெண்கள் மீது பாகுபாடு காட்டப்படுகிறது. கருவறையிலிருந்து கல்லறை வரை பாகுபடுத்தப் படுகின்றனர்.

### 1. கனவு நிலையில்

பெண், தாய் வயிற்றில் கருவாகு முன்னே பாகுபடுத்தப்படுகிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா? திருவள்ளுவர் குழந்தையைப் பெற்றுக் கொள்வதுதான் மணவாழ்க்கையின் அணிகலன் என்று சொல்கிறார். குழந்தைப் பேற்றில் தான் மணவாழ்க்கையின் நிறைவு இருக்கிறது. உண்மைதான். நம் ஊரில் குழந்தை



வேண்டும் என்று ஆசைப்படுகிற தம்பதியர், எந்தக் குழந்தையானாலும் சரி என்று ஏற்றுக் கொள்கின்றனரா? அல்லது ஆண் குழந்தைதான் வேண்டும் என்று ஆசைப் படுகின்றனரா? வயிற்றில் குழந்தை கருவாகும் முன்னே, கனவில்கூட பெண் குழந்தையை விரும்புவதில்லையே !

எனக்கொரு மகன் பிறப்பான் என்று கனவு காணும் தம்பதியர் எங்காவது தம் முதல் குழந்தையை எனக்கொரு 'மகள்' பிறப்பாள் என்று கனவு காண்கின்றனரா?

ஏன் கனவிலும் பாகுபாடு ! கனவிலும் வளர்க்கப் படும் இப்பாகுபாட்டிற்கு என்ன காரணம்? உங்கள் பெற்றோரிடம் கேளுங்கள். குழந்தை பற்றிய கனவு பொதுவாக குழந்தை பற்றியதா? ஆனால், ஆண் குழந்தைதான் வேண்டும் என்பது பற்றியதா?


அ. கனவில் கூட ஏன் பெண் குழந்தை வேண்டாமென்று எண்ணுகின்றனர்?

ஆ. கனவில்கூட ஏன் ஆண் குழந்தைதான் வேண்டுமென்று எண்ணுகின்றனர்?

## 2. கருநிலையில்

பாகுபாடு கனவுநிலையிலே தொடங்கி விடுகிற அவலம் கண்டோம். இப்பகுதியில் கருநிலையில் பெண் எவ்வாறு பாகுபடுத்தப்படுகிறாள் என்பது பற்றி பார்ப்போம்.

ஆண் குழந்தை வேண்டும் என கனவு காண்கிறார்கள். கனவு தோற்றுப் போனால் கருவை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்து கருவிலே கண்டு அழித்துவிடுகின்றனர்.



### பெண் கரு உருவாவதற்குப் பெண்தான் காரணமா? ஆண் காரணம் இல்லையா?

பெண் கரு உருவாவதற்குக் காரணம் பெண்தான் என்ற தவறான கருத்து சமூகத்திலே நிலவி வருகிறது. பெண்தான் காரணம் என தவறாகக் கருதுவதால் கணவனும் கணவன் வீட்டாரும் அவளை இளக்காரமாகப் பேசுகிறார்கள். கரு ஆணா, பெண்ணா என்று நிர்ணயிப்பது ஆண்களிடமுள்ள குரோமோசோம்தான். இது அறிவியல் உண்மை. ஆணா பெண்ணா என்று இயற்கை ரீதியில் நிர்ணயிப்பது பெண் அல்ல, ஆண்தான். இது தெரியாமல் நாம் பெண் குழந்தை பிறப்பதற்குப் பெண்களைக் காரணமாக்குகிறோம்.

கருவுக்கு உயிருள்ளது; இந்த உயிர் வாழ்வதற்கான உரிமையுடையது; கரு நிலையில் ஆண்-பெண் வேறுபாடு காட்டுவது, உயிரைப் பறிப்பது; வாழ்வுரிமையைப் பறிப்பது; அதுவும் பெண் கரு என்று கண்டறிந்து சிதைக்கப்படுகின்றபோது, பாகுபாடு காட்டப்படுகிறது. கருக்கலைப்பு மூலம் சிதைக்கப்படுவது, ஓர் உயிர் மட்டுமல்ல, இவ்வுயிரைத் தர கருவியாக இருந்த தாய் தந்தையரின் மாண்பும்; உரிமையும் கூட.

ஆக இங்கு இருவகை மீறல்கள் நிகழ்கின்றன.

(அ) கருக்கலைப்பு - முதல் மீறல் (ஆ) பெண் கரு எனக் கண்டறிந்து பாகுபாடு காட்டப்பட்டு கலைத்தல் இரண்டாவது மீறல். உருவாகும் உயிரை, அதன் அனுமதியின்றி, விசாரணையின்றி, தண்டிக்கும் உரிமை யாருக்கும் இல்லை.

## 3. மழலை நிலையில்

மழலை ஆண்பாலா? பெண் பாலா?

மழலை என்றால் ஆண், பெண் என்ற இரு பாலையும் தானே குறிக்கும். ஆனால், ஆண் எனும் மழலைக்குக் கொடுக்கும் மதிப்பைப் பெண் மழலைக்குக் கொடுக்கிறோமா? மழலையுள் பெண் மழலையை மட்டும் ஏன் பாகுபடுத்துகிறோம்?

இவர்கள் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்களேன்.

"இன்னிக்குப் பொம்பள புள்ளைகளைக் கட்டிக் கொடுக்கிறது மலையை முழுங்குகிற விஷயமாக இருக்குங்க. அன்றாட பொழப்பையே நடத்துறதுக்கு வழி இல்லாம தவிக்கிற நாங்க எப்படி வரதட்சணை கொடுத்துப் புள்ளைகளைக் கரையேத்த முடியும்? ஆகவே சிசுவைக் கொன்னுடுறோம்."

அ. பெற்ற தாய் தான் பெற்ற குழந்தையைக் கொல்லும் போது எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள் என்று யோசித்துப் பார்.


ஆ. பெற்ற குழந்தையைத் தாயே கொல்ல வைத்த குற்றத்தைச் செய்தது யார்?

## 4. குழந்தை நிலையில்

பெண் மழலையர் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றனர் என்பதனைக் கண்டோம். மழலைப் பருவம் தாண்டிய பெண் குழந்தைகள் கொஞ்சம் விபரமுடையவர்களாகத்தானே இருக்க முடியும். அவர்களாவது தப்புகின்றனரா? சில அனுபவப் பகிர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அமைதியாக வாசிக்கவும்.

### பகிர்வு I

என் பெயர் சரசு, வயது 15, எட்டாம் வகுப்போடு என் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டனர். அண்ணன் கல்லூரியில் படிக்கிறான். தம்பி 12-ம் வகுப்பு முடித்துவிட்டுக் கல்லூரிக்குச் செல்லவிருக்கிறான். எனக்குப் படிப்பதற்கு ஆர்வம் இருக்கிறது. 'பொட்டச்சிக்கு எதுக்குப் படிப்பு' என்று சொல்லி படிப்பை நிறுத்தி விட்டனர்.



### பகிர்வு II

நான் வனிதா, வயது 15, அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிற நான் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தவுடன் தோழிகளோடு விளையாட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்; வீட்டில் அனுமதிப்பதில்லை. தம்பியோ பள்ளி முடிந்தவுடன் விளையாடச் செல்கிறான். எனக்கு மட்டும் ஏன் விளையாட அனுமதி யில்லை?

பெண்குழந்தைகள் கல்வியிலும், விளையாட்டிலும் மட்டுந்தான் பாகுபடுத்தப் படுகின்றனரா? வேறு எவற்றிலெல்லாம்? பட்டியலிடுக.

## 5. இளமை நிலையில்

இளமை நிலையில் பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட பெண்கள் தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

சுமதி : 'நான் பெரிய பிள்ளை ஆயிட்டனாம் "சமைஞ்ச பிள்ள மாதிரி இலட்சணமாய் இரு, முன்ன மாதிரி வெளியே போய் விளையாடாதே, எல்லோர் கிட்டயும் பேசாதே. தனியாய்ப் போகாதே, சத்தமாய்ப் பேசாதே, சிரிக்காதே, அடக்கமாக மெல்ல நட, அதிர்ற மாதிரி நடக்காதே' என்று இயற்கையான இயல்பையே மறக்கடிக்கும் அளவுக்கு நிறைய கட்டுப்பாடு போடுறாங்க. என் சுதந்திரத்தையே முடக்கிட்டாங்களே! ஏன்?



லட்சுமிப்பிரியா ஒரு கல்லூரி மாணவி. இவள் ஒவ்வொரு ஞாயிறு மாலையும் கோவிலுக்குச் செல்கின்ற போது, ஒரு இளைஞர் கூட்டம் அவளைக் கிண்டல் செய்தபடியே பின் தொடர்ந்து வருவது வழக்கம். அன்றும் அப்படியே, அவளை வழிமறித்து நின்றனர். அவர்களை எச்சரித்து வீடு வந்து சேர்ந்தவுடன், சம்பவங்களைப் பெற்றோரிடம் தெரிவித்தாள். மறுநாள் விடிந்தது. ஏற்கனவே கல்லூரிக்கு வரும்போது பிரியா பயத்துடனே கல்லூரிக்குச் சென்றாள். வழியில் அந்தக் கும்பல் திடீரென குறுக்கிட்டது. கேலி கிண்டல் அளவு மீறிப்போகப் பிரியாவைப் பிடித்துத் தள்ளினர்...

### கேள்விகள்

அ. இளம்பெண் ஏன் கேலி செய்யப் படுகிறாள்?

ஆ. கேலியின் உள்ளடக்கம் அவமானமா ? அழகுக்கான மரியாதையா?

இ. நாம் யாரைக் கேலி செய்கிறோம்? யாரைக் கேலி செய்வதில்லை?

ஈ. கேலி என்பது ஒரு மீறல்தானே?.

## 6. மண நிலையில்

ஒரு இளம்பெண் திருமணத்திற்குத் தயாராக இருக்கும் நிலையில் எப்படியெல்லாம் பாகுபடுத்தப்படுகிறாள் என்று பார்ப்போம்.

ஒரு பெண் திருமணத்திற்கு தயாராகும் போதே பல உரிமைகளை இழக்கும் நிலைக்கு தள்ளப் படுகிறாள். கல்வி பெறுவது தடைபடுதல், வேலைக்கு செல்லுதல், தன்னுடைய விருப்பங்கள் மற்றும் தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ள தடை போன்றவைகளை எதிர்கொள்கிறாள்.

ஆண்களைப் போலவே பெண்ணுக்கும் விரும்பிய கணவனை தெரிவு செய்ய உரிமை உண்டு. திருமண வாழ்வில் அல்லது திருமண முறிவில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் சம உரிமை உண்டு. குழந்தை வளர்ப்பிலும் இருவருக்கும் சமவுரிமை உண்டு. ஆனால் எதார்த்தத்தில் அப்படி உள்ளதா?

### விடை சொல்லுங்கள்

- கவிதையை மாணவர்கள் புரியும் வண்ணம் ஆசிரியர் வாசித்துப் பொருள் சொல்லவும்.
- இக்கவிதைகளில் பெண்ணடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள் யாவை?
- சந்தையில் நடக்கும் வியாபாரத்திற்கும் திருமணச் சந்தையில் நடக்கும் வியாபாரத்திற்கும் என்ன வேறுபாடு?



எங்கள் சந்தைகள்
சந்தைக்குப் போன மாடுகள்
பல்பிடித்து சுழி சுத்தம் பார்த்துப்
பணம் நிர்ணயிக்கப்படும் !
இந்தச் சந்தையில்
எங்கள் நடை பார்த்து
சடை பார்த்து விலை
நிர்ப்பந்திக்கப்படும் !



எப்பொருள் யார் யார் கேட்டாலும்
அப்பொருள் விலையும்
அவரே தருதல் நியதி .......
எங்கள் சந்தையிலோ
எல்லாமே ஏறுமாறு !
விலைகள் ..... தொகையாக
பணமாக இல்லாமல்
கார்கள் ..... கல் நகைகள்
பங்களாக்கள் .... என்ற
பண்டமாற்று நடப்பதுண்டு !
இவை எங்கள் சந்தையில்
சரித்திரம் தொட்டுவரும்
சம்பிரதாயங்கள் ....
சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிய
இங்கே எவருக்கும் சக்தியில்லை !
காசு பணம் மட்டும்
கழுதைகளும் தர முடிந்தால் .......
அவற்றுக்கும் கண் நிறைந்த
கணவன்மார் கிடைக்கக்கூடும்!

– இரா. வேலுச்சாமி

### பெற்றோர் பயிற்சி

உங்கள் பெற்றோரிடம் திருமணத்தின் போது ஏன் வரதட்சணை வாங்கப்படுகிறது என்பதை கேட்கவும். தகவல்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

திருமணத்தின் போது எம்மாதிரியான பொருட்கள் இரு வீட்டார் சார்பிலும் வழங்கப்படுகின்றன என்பதை தங்கள் பெற்றோரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

### 7. மனைவி நிலையில்

மனைவியாகும் பெண் ஒருவனின் சரி பாதியாகிறாளா? பாகுபடுத்தப்படுகிறாளா? அவள் அவளாக இருக்கிறாளா? ஆணின் வெறும் துணையாக அல்லது அடிமையாக அல்லது சமத்துவ அந்தஸ்தோடு இருக்கிறாளா? பத்திரிக்கையில் வெளிவந்த சில உண்மை நிகழ்வுகள் இங்கு வாசிக்கப்படுகின்றன.

### 1. அஞ்சனாவின் கதை

என் பெயர் அஞ்சனா, எனக்கு வயது 30. ஒரிசாவில் வசதியான குடும்பத்தில் 4 குழந்தைகளில் ஒருத்தியாகப் பிறந்தேன். மிகவும் கட்டுப்பாடான குடும்பத்தில் பிறந்த நான் ஆங்கில இலக்கியத்தில் ஒரிசா மாநிலத்திலேயே முதலிடத்தில் தேர்வு பெற்றேன். இலட்சக்கணக்கில் வரதட்சணை கொடுத்து ஒரு வனத்துறை அதிகாரிக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டேன்.

முதல் நாளன்றே, சித்திரவதை துவங்கியது. மேலும், அதிக வரதட்சணை கேட்டு சிகரெட் சூடு வைத்தும், சித்திரவதை செய்யப்பட்டேன். அன்றிரவே என் கணவர் போதை மருந்துகளுக்கும் அடிமையானவர்



என்பதையும் தெரிந்து கொண்டேன். கணவரின் தவறுகள் எனக்குத் தெரிய வரவே, கணவரால் துன்புறுத்தப்பட்டேன்.

எனது மாமனார், மாமியார் மற்றும் குடும்பத்தினர் அனைவருமே சேர்ந்து அடிப்பது, உதைப்பது சில நேரங்களில் கயிற்றையும், பூச்சி மருந்தையும் சுட்டிக் காண்பித்து, வெட்கமாக இல்லை, இன்னுமா சாகாமல் இருக்கிறாய்? என்று உளவியல் ரீதியாக என்னைத் தற்கொலைக்குத் தூண்டினார்கள்.

அவரை நிரந்தரமாகத் தலைமுழுகி விடுவதற்கு வசதியாக விவாகரத்து செய்து விடுவதற்குச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினர். என்னை மனநோயாளியாகச் சித்தரித்து ஆரோக்கியமான எனக்கு முற்றிய மனநோயாளிகளுக்குப் போடும் ஊசிகளைப் பலவந்தமாகப் போட்டனர். இதற்கிடையில்

எனக்கு ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு குழந்தைகள் பிறந்தன. என்னை அரைமயக்க நிலையிலேயே கூட்டிச் சென்று ஒரு மனநோய் மருத்துவ மனையில் சேர்த்தனர். இப்பூமியில் பெண்ணாய் பிறந்தது தவறா?

## 2. மாதவியின் இயந்திர வாழ்வு

நான் தினமும் பரபரக்க எந்திரிச்சு காலை உணவு செய்து, மத்தியானத்துக்கும் சாப்பாடு செய்து புள்ளய குளிப்பாட்டச் செய்து பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு, வீட்டுக்காரருக்கும் சாப்பாடு கட்டி கொடுத்து விட்டு, குளிச்சிட்டுப் பாதிய வாயில, மீதிய டப்பாவில் போட்டுக் கொண்டு, ஓடி, அடித்துப் புடித்து இடித்து ஏறி பேருந்தில் இடம் பிடித்து, வேலைக்குச் சென்று நாள் முழுவதும் வேலை செய்து வீட்டுக்குப் போக, மீண்டும் பேருந்து நிலையத்தில் காத்துக்கிடந்து கூட்ட நெரிசலில் சிக்கி, விடுதலை பெற்று... அக்கடான்னு வீட்டில் காலாற உட்காரலாம்னா... முடியுதா? மீண்டும் வேலை! ஒரே வேலைதான்!

தீக்கதிர் - 05.08.2003

### சிந்தனைக்கு

- மனைவியைத் தமிழ்நாட்டில் 'இல்லாள்', 'வாழ்க்கைத் துணைவி', 'தலைவி' என்றெல்லாம் அழைக்கிறோம். இந்தச் சொற்கள் தரும் பொருளுக்கேற்ப மனைவி நடத்தப் பெறுகிறாளா?
- மனைவி எனும் பெண் ஏன் உரிமைகளோடு வாழ முடியவில்லை?
- மனைவியைச் சமத்துவமாக நடத்தும் குடும்பம் ஒன்றினை நீ அறிந்திருக்கலாம். அக்குடும்பம் பற்றி வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

## 8. மருமகள் நிலையில்

திருமணமான ஒரு பெண் இல்லத் தலைவி எனவும், மனைவி எனவும் அழைக்கப்படுகிறாள். அதேவேளை அவளுக்கு மருமகள் என்ற பெயரும் உண்டு. ஆணின் மனைவி, கணவனின் பெற்றோர்க்கு மருமகள். மனைவி மருமகளாகின்ற போது, இவள் அந்தஸ்து உயர்ந்ததா? மகனுக்கு மனைவி என்பதால் போற்றப்படுகிறாளா? பாகுபடுத்தப்படுகிறாளா? ஒரே நேரத்தில், இதுவரை பெற்றோர்க்கு மகளாய், சகோதரர்க்கு சகோதரியாய் வாழ்ந்த வந்த இப்பெண் இப்புதிய அந்தஸ்தில் இல்வாழ்க்கைத் துணைவியாய், மனைவியாய், மாறுகிறாள். தம் பெற்றோர்க்கு மகளாய் இருந்தவள், இன்னொரு பெற்றோர்க்கு மருமகளாகிறாள். ஒரு மருமகளின் அனுபவத்தைக் கேளுங்கள்.




**கோமதி :**

ஒரு செடி மண்ணில் முளைக்கிறது. இந்தச் செடியைப் பிடுங்கி, இன்னொரு இடத்தில் நட விரும்புகிறோம். பக்குவமாய்ச் செடிக்கு எந்தவித பாதகமும் வராமல் பிடுங்கி, நாம் விரும்பும் இடத்தில் நடுகிறோம். நட்ட செடிக்கு மண்ணணைத்து, நீரூற்றி, முள் வேலியிட்டு ஏன் பாதுகாக்கிறோம்? பிடுங்கி நட்ட செடி. வேர்விட நாள் வேண்டாமா? தினமும் கவனிக்கிறோம்; பொறுமை யாகக் கவனிக்கிறோம். முளைத்த இடத்திலிருந்து பிடுங்கப்பட்ட செடி இன்னொரு இடத்தில் நடுகின்றபோது துளிர்விட கொடுக்கின்ற வாய்ப்பைக் கூட இருபது ஆண்டுகளுக்கு மேலாக, பிறந்த வீட்டில் வாழ்ந்து, புதியசூழலில் புகுந்த மருமகளுக்குக் கொடுக்கின்றோமா?

இடம் புதிது, ஆட்கள் புதிது, சூழல் புதிது, பழக்கவழக்கம் வித்தியாசமானது, சமையல் சுவைகூட வித்தியாசமாக இருக்கலாம். இவையனைத்தும் புரியும் வரை பொறுமை காக்க வேண்டாமா?'இவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. சமைக்கத் தெரியவில்லை. சமயோசிதம் தெரியவில்லை.' என்று சொல்வது சரியா?

கணவரோ எதையும் கண்டுக்காதே, ஒத்துப்போ என்று அறிவுரை. குழந்தை பெறுவதும் இவள் விருப்பமல்ல. குழந்தைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு இவளுக்கல்ல.

சத்தமாகப் பேசக் கூடாது. உணர்வுகளை வெளியே காட்டக் கூடாது. கணவன் சொல்வதை அப்படியே கேட்க வேண்டும். நிறைய சீர் கொண்டு வர வேண்டும். முணு முணுக்காமல் வேலை செய்ய வேண்டும். தாய் வீட்டின் பெருமை பற்றிப் பேசக் கூடாது. கணவன் சம்பாதிக்கலாம். கணவனுக்கு மனைவி சம்பாதித்துக் கொடுக்கலாம். ஆனால் செலவு செய்கின்ற உரிமை மனைவிக்கில்லை.

வீட்டிலிருக்கின்ற மருமகள் மட்டுமல்ல. வெளியே சென்று வேலை செய்யும் பெண்ணாக இருந்தால், இன்னும் மோசம், இரட்டிப்பு வேலை. கணவன் வெளி வேலை மட்டுந்தான், மருமகளுக்கோ இரட்டைச் சுமை.

தொழிலாளர்க்கு எட்டுமணி நேர வேலை தான். மனைவியாகும் மருமகளுக்கோ இவ்வளவு நேரம் தான் வேலையென்றில்லை, மனைவியான மருமகள்கள் வெறும் சோளக்காட்டுப் பொம்மைகளாகத்தான் உள்ளனர். ஒன்றிற்கு மேற்பட்ட மருமகளிருந்தால் அதிக வரதட்சணை கொண்டு வந்த மருமகளுக்கு அதிக மதிப்பு. ஒவ்வொரு நாளும் நடுங்கியே வாழ வேண்டியுள்ளது.

## சிந்தனைக்கு

- மருமகள் யார்? மனைவி தான் மருமகளாகின்றாள்?
- மனைவியோ மருமகளோ இவர்களை நாம் ஓர் ஆள் (Person) என்று நடத்துகிறோமா?
- குடும்ப நிர்வாகத்தில் இவள் பங்கு என்ன?
- குழந்தை பெறுவதில் வளர்ப்பில் பங்கு என்ன?
- குழந்தை வளர்ந்த நிலையில் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் பொறுப்பு என்ன?
- பெண் எனும் அடையாளத்தைக் காக்கும் உரிமையுள்ளதா?

## 9. தாய் நிலையில்

இளம்பெண், மணமகளாகி, மனைவியாகி, மருமகளானதோடு, தாய்மைப் பேறும் அடைகிறாள். தாய்மை ஒரு 'பேறு' - இப்பேற்றினைப் பெற்றதால் தாயிற் சிறந்த கோவிலும் இல்லை என்று தாயைக் கோவிலாகவும்; அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று தாயைத் தெய்வமாகவும்; இயற்கையைத் தாயோடும் ஒப்பிட்டு மதிக்கின்றோம். எனினும், இன்றைய உலகியல் மதிப்பீடுகள் தாய்மையை அப்படிப் பார்க்கின்றனவா? தாய்மை பெண்ணின் உரிமை எனப் போற்றுகின்றனவா?

தாய்மை நிலையைக் கூட மனித உரிமைக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய கால கட்டத்தில் இருப்பதுதான் இன்றைய அவலம். அனுபவப் பகிர்வுகளைப் பார்ப்போமா.

சுமதி : என் வயிற்றில் கரு உண்டானது முதல் நான் மிகவும் எச்சரிக்கையாக இருந்தேன். ஏழாவது மாதத்தில் என் தாய் வீட்டுக்குச் சென்றேன். அனைவரும் என்னைக் கவனித்துக் கொண்டார்கள். அழகான குழந்தையைப் பெற்றெடுத்தேன். நான் மிக்க மகிழ்வடைந்தேன். ஆனால், குழந்தையோ பெண் குழந்தை. என் கணவர் வீட்டிலிருந்து மூன்று மாதம் வரை யாரும் எங்களைப் பார்க்க வரவில்லை. இது பிள்ளையைப் பெற்றெடுத்த வேதனையைக் காட்டிலும் அதிக வேதனையைத் தந்தது.

வனிதா : ஏன்? ஒரு பெண், குழந்தையே பெறாவிட்டால் 'மலடி' என்கின்றனர். குழந்தை பிறவாமைக்கு ஆண் காரணம் என்று யாரும் சொல்வதில்லையே ஏன்? பெண் மட்டுமே மலடியாகின்ற போது, கணவன் 'மலடன்' ஆவதில்லையே ஏன்?

ராஜி : குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் நியாயமானது; இயற்கையானது; குழந்தை இல்லாதிருந்தால் 'பேர் சொல்ல' ஆளில்லாமல் போய் விடும். 'கொள்ளி வைக்க' ஆளில்லாமல் போய் விடும். 'சொத்துக்கு வாரிசு' இல்லாது போய் விடும் என்று கூறி, கட்டிய மனைவி பக்கத்திலிருக்கும் போது இன்னொரு மனைவியைக் கட்டிக் கொள்கின்றனர். இது நியாயமா?

- குழந்தை இல்லையென்றால், மனைவிதான் காரணமாகக் காட்டப்படுகின்றாளே தவிர, ஆணிடம் உடல்ரீதியாகப் பிரச்சினை இருக்கும் என்பதை வெளியே சொல்வதே இல்லை. ஏன்?
- தாய்மை பற்றிச் சமூகம் கூறும் பழமொழிகள், கவிதைகளைத் தொகுத்து வரவும்.
- உன் தாய் காலை முதல் இரவு வரை செய்கின்ற வேலைகளைப் பட்டியலிடுக.
- உன் அப்பாவின் வேலைக்குக் கூலியுண்டு; சம்பளம் உண்டு. நாள் முழுவதும் வீட்டில் வேலை செய்யும் அம்மாவுக்கு ஏன் சம்பளம் இல்லை. அம்மா செய்வதும் வேலை தானே! வீட்டைக் கவனிக்கும் அம்மாவை சும்மா இருப்பதாகக் கூறுகிறோமே ஏன்?

## 10. விதவை நிலையில்

விதவை நிலை எல்லாப் பெண்களுக்கும் உரியது அல்ல ; ஒரு சிலருக்கே ஆயினும் ஒரு பெண் விதவை நிலையில் எவ்வாறெல்லாம் சிதைக்கப்படுகிறாள் என்பதைக் காண்போம்.

**பேட்டி :1**

என் பெயர் பிரபா. 1990 ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடந்தது.

1999ம் ஆண்டு திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் என் கணவர் இறந்தார். எனக்கு ஏழு வயதில் ஒரே ஒரு குழந்தை இருக்கிறது. நான் என் பெற்றோர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என் அப்பா ஏற்கனவே இறந்திருந்ததால் என் அம்மா மட்டும் தனியாக ஊரில் இருந்தார்கள். ஒரு நாள் நான் தண்ணீர் எடுக்கக்



குடத்தை எடுத்தேன். உடனே என் தாய் கூறினார். ''இன்னும் சிறிது நேரம் கழித்துச் செல். காலை நேரமாக இருப்பதால் இப்போது ஊரார் எல்லோரும் குளத்திற்கு வருவர். நம்மைப் பார்த்தால் அபசகுனம் எனக் கூறுவர் ; நான் சொல்வதைக் கேளம்மா'' என்றாள்.

**பேட்டி : 2**

கமலா: விதவைக்குத் தனி அடையாளம் வேண்டும் என்று ஏன் சமூகம் விதித்துள்ளது. வெள்ளையுடை உடுக்க வேண்டும். பொட்டு வைக்கக் கூடாது, பூ வைத்தல் தடை, சுதந்திரமாக நடமாடக்கூடாது, மங்கல நிகழ்ச்சிகளில் கலந்துக்க கூடாது, மறுமணம் செய்யக் கூடாது இவையெல்லாம் பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு இல்லையா?

யாராவது ஒரு விதவை மறுமணம் செய்தால் அவளுக்கு பெண் என்ற மரியாதை காட்டப்படுவதில்லை. இரக்கத்தின் அடிப்படையில் எவனோ கிடைப்பவனுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அவள் புகுந்த வீட்டில், உரிய மரியாதை கொடுப்பதில்லை. ஏளனமாக நடத்துவது, இரக்கத்தோடு நடத்துவது பெண்களின் மாண்பையும், உரிமையையும் மறுப்பதாகும். அதுவும் விதவைக்கும் மறுமணத்துக்கு சிலவேளை ஏற்றுக் கொள்ளும் சமூகம் அவளுக்குக் குழந்தை இருந்தாலோ தீண்டுவதே இல்லை.

- உங்கள் ஊரில் விதவை நிலையில் உள்ளவர்கள் மீது எவ்வகையான பாகுபாடுகள் காட்டப் படுகின்றன. தெரிந்தவர்களிடம் கேட்டு தகவல்களைத் திரட்டவும்.

## 11. முதுமை நிலையில்

பெண் முதிய நிலையிலாவது சமத்துவமாக நடத்தப்படுகிறாளா என்று பார்ப்போம். முதியோர் சிலரையே கேட்போமே?

பட்டம்மாள் : வயது 70. எனக்கு ஒரே மகன். நன்றாகப் படிக்க வைத்தோம். அவன் இன்று ரயில்வே அதிகாரியாக இருக்கிறார். என் மகனோடு வாழ வேண்டுமென்ற ஆசை எங்கள் இருவருக்கும் உண்டு. நாங்கள் படுகின்ற கஷ்டங்களையெல்லாம் பார்த்தும் இதுவரை ஒருநாள்கூட எங்கள் வீட்டில் நிரந்தரமாகத் தங்குங்கள் என்று அழைத்ததில்லை. மாதம், மாதம் எங்கள் இருவரின் செலவுக்குப் பணம் தருவான். போதுமான அளவு தருவான். அதில் எந்தக் குறையுமில்லை.

- பணமிருந்தால் போதுமா? சொந்தம், உறவு, சேர்ந்து வாழ்தல் உண்ணுதல் போன்றவை யெல்லாம் தேவையில்லையா?

முதியவர்கள் நம்மைப் போன்ற மனிதர்கள். அவர்களுக்கும் ஆசைகள், உணர்வுகள் இருக்கின்றன. அவர்களும் குடும்பத்தோடு இணைந்து வாழ உரிமையுடையவர்கள். குழந்தைகளுடைய அன்பையும், பாசத்தையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ உரிமையுடையவர்கள். அவர்களது கருத்தையும், எண்ணத்தையும் வெளிப்படுத்த உரிமையுடையவர். அவர்களை வேண்டாம் என்று ஒதுக்குவது உரிமை மீறல். அவர்கள் இல்லாமல் நாமில்லை. அவர்களது அறிவும், ஞானமும், போதனையும், கண்டிப்பும் இல்லாமல் நாம் இவ்வளவு நலமுடன் இருக்க முடியுமா? அவர்களின் உரிமைகளைக் காப்பது நம் கடமையில்லையா?



**சிந்தனைக்கு**

- உன் வீட்டில் தாத்தா, பாட்டி இருக்கின்றனரா? உன் அம்மா, அப்பா அவர்களை மதிக்கின்றனரா? மதித்தால் எப்படியென்றும், மதிக்கவில்லை யென்றால் எப்படி யென்றும் நினைத்துப் பார்.
- முதியோர் பலரைச் சாலைகளில், பொதுவிடங்களில், தனித்து விடப்பட்ட நிலைகளில் பார்த்திருப்பீர்கள். அவர்களின் வாழ்வுரிமைகள் குறித்து வருந்தியுள்ளீர்களா?

## 12. குடிமகளாம் பெண்

- குடிமக்கள் சமத்துவ உரிமை உடையவர்கள் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?
- குடிமக்களில் ஆண், பெண் வித்தியாசம் கிடையாது
- உயர்சாதி, தாழ்ந்த சாதி வேறுபாடு கிடையாது.
- எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் சமமாக உண்டு.
- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- குடிமக்களை இனம், பால், சாதி, இடம், சமய அடிப்படையில் பாகுபடுத்தக் கூடாது.




ஒரு பெண் வீட்டில் பெற்றோர்க்கு மகளாக இருக்கலாம், கணவனுக்கு மனைவியாக இருக்கலாம், குழந்தைக்கு தாயாக இருக்கலாம், பேரப்பிள்ளை களுக்குப் பாட்டியாக இருக்கலாம். இப்படி ஒரு பெண்ணுக்கு உறவுமுறையில் பல பெயரிருக்கலாம். அவர்கள் பங்கும் பணியும் வேறு வேறாகஇருக்கலாம். சனநாயக நாட்டுல ஒரே ஒரு பெயர் தான். அப்பெயர்தான் ‘குடிமகள்’.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம். உங்க அம்மா ஓட்டுப் போட போனாங்களா? ஆளுக்கு ஒரு ஓட்டு தானே! அம்மாவுக்கு ஒன்று, அப்பாவுக்கு ஒன்று இப்ப பார்த்தீங்களா! ஓட்டுல இரண்டு பேருக்கும்

சமத்துவம் இருக்கா! ஏன் அப்படி? இருவரும் குடிமக்கள் என்பதனால்தான் இப்படி. ஓட்டுல மட்டும் இருந்தா போதுமா! போதாது! ஓட்டுல மட்டுமல்ல, குடும்பத்துல, சமூகத்துல, கல்வியில எல்லாத்துலயும் சமத்துவம் வேணும். இந்தச் சமத்துவத்தைப் பெற பெண்கள் தங்களை குடி மகளாக, குடிமக்களாகக் கருதி போராடணும். சமத்துவத்துக்காகப் போராடணும். ஓட்டு இரண்டு பேரும் போடுறாங்க. ஆனா ஆண்கள் தான் ஆட்சி செய்றாங்க. உண்மை தான். இதைத்தான் பாகுபாடு என்கிறோம்.

பெண்கள், சனநாயக நாட்டில் தான் ஒரு குடிமகள் என்பதை அறிய வேண்டும். அரசியலில் சமத்துவம், பொருளாதார, சமூக வாழ்வில் சமத்துவம் என்பன அடிப்படை உரிமைகள் என்பதனால் பெண்கள் குடிமக்களாய் ஒன்றிணைந்து பாகுபாடு களைய போராட வேண்டும். பெண்கள் குடிமக்கள், உரிமை குடிமக்கள்; கருணையினால் வாழ வேண்டியவர்களல்லர் என்ற விழிப்புணர்வு உருவாகட்டும்.

1. வீட்டில் உனது பெற்றோர் கீழ்க்கண்ட நிலைகளில் ஆண் பெண்ணென்று பாகுபாடு காட்டுகிறார்களா? எப்படி?

| நிலை | பாகுபாடு | எப்படி |
|---|---|---|
| கல்வியில் | ஆம் / இல்லை | |
| விளையாட்டில் | | |
| உணவில் | | |
| மருத்துவத்தில் | | |
| உடையில் | | |

2. பெண்களை தாழ்த்தியும், ஆண்களை உயர்த்தியும் சமூகத்தில் சொல்லாடல்கள் உள்ளன. அவைகள்மூலம் மீறப்பெறும் உரிமைகள் யாவை?

**பழமொழி உரிமை மீறல்கள்**

1. ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாய் பிறந்தால் எருமை
2. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
3. அஞ்சு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டி
4. பெண் புத்தி பின்புத்தி
5. பெண்ணை அடிச்சு வளர்க்கணும் முருங்கை மரத்தை ஒடிச்சு வளர்க்கணும்
6. சீறும் பாம்பை நம்பு சிரிக்கும் பெண்ணை நம்பாதே
7. சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை.

3. வகுப்பறையில் பாலியல் சமத்துவத்தை எப்படி வளர்க்கலாம்?

அ. பெண்ணை தாயாக மட்டுமின்றி ஆசிரியை / மருத்துவர், பேராசிரியை, நிர்வாகி, அரசியல்வாதி, சமூக சேவகி, விடுதலை வீரர் இப்படி பல்வேறு கோணங்களில் படங்களைத் தயார் செய்து வகுப்பறையில் மாணவர்களுக்கு காட்டுதல்.

ஆ. பெண்களும், ஆண்களைப் போலவே அனைத்துத் துறைகளிலும் வேலை செய்ய முடியும் என்பதை பத்திரிகைகளிலிருந்து கத்தரித்த படங்கள், சினிமா படங்கள் போன்றவற்றை காட்டுதல்.

(எ.கா.) வயல்களில் ஆண்களைப் போல வேலை செய்யும் பெண்களாக

மருத்துவராக

விறகு வெட்டுபவராக

வாகன ஓட்டுனராக

இ. பள்ளிகளில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு பெண் எழுத்தாளர்களை, பெண் கலைஞர்களை, பெண் பாடகர்களை மற்றும் பல துறைகளில் திறமையுடைய பெண்களை அழைத்து வந்து மாணவர்களோடு பேச வைத்தல்.

ஈ. பாடப் புத்தகங்களில் காணப்படும் பெண்கள் பற்றிய கருத்துக்களை விமர்சன கண்ணோட்டத்துடன் பார்க்க வைத்தல்.

உ. ஆரம்பப் பள்ளிகளில் ஆண், பெண் குழந்தைகளைப் பிரித்து வைக்காமல் இருத்தல்.

### 4. வகுப்பறையுள் கீழ்க்கண்ட வழிமுறைகளையும் பின்பற்றலாம்

- ஆரம்பப் பள்ளிகளில் இருபால் குழந்தைகளைச் சேர்ந்து அமர செய்தல்
- குழு நடவடிக்கைகளில் இருபால் குழந்தைகளையும் இணைத்தல்.
- கூச்சப்படும் பெண் குழந்தைகளுக்கு தைரியம் வரும் வகையில் அவர்களுக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து பாடங்களை வாசிக்கச் சொல்லுதல், கேள்விகளைக் கேட்டல் முதலியன.
- துணிச்சலற்ற மாணவனைப் பார்த்து (பெண் குழந்தை) போன்று அழாதே என்பதும், துணிச்சலான பெண் குழந்தைகளைப் பார்த்து (ஆம்பள மாதிரி) நடக்காதே என்பதும் போன்ற சொற்களைத் தவிர்த்தல்.

### பெண்கள் மீதான வன்முறை வடிவங்கள்

| | | |
|---|---|---|
| பிறக்குமுன் | – | கருக்கலைப்பு, கருவுற்ற நிலையில் அடித்தல், பாலியல் பலாத்காரம் |
| குழந்தை | – | சிசுக்கொலை, திட்டுதல், உணவு, மருத்துவத்தில் காட்டப்படும் பாகுபாடு. |
| பெண் குழந்தை | – | குழந்தைத் திருமணம், அந்நியராலும், குடும்பத்தாராலும் பாலியல் பலாத்காரம், குழந்தை விபசாரம். |
| இளம்பெண் | – | காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றல் –பொருளாதார ரீதியாகச் சுரண்டல். பணியிடங்களில் வன்முறை, பாலியல் பலாத்காரம், கட்டாய விபசாரம், கடத்தல். |
| மனைவி | – | நெருக்கமான ஆண்களால் ஏமாற்றப்படல், பலாத்காரம், வரதட்சணை, கொலை, உளரீதியான வன்முறை, பணியிடங்களில் பாலியல் வன்முறை, உடல் ஊனமுற்றோர் மீது காட்டப்படும் பாலியல் வன்முறை. |
| முதுமை | – | விதவைகள் மீது காட்டப்பெறும் அவதூறு மற்றும் பாகுபாடு. |

ஹியூமன் ஸ்கேப் – ஜுலை 16, 2003.

# 7. குழந்தைப் பருவமும் அவர்தம் உரிமைகளும்

**நோக்கம்:**

குழந்தைக்கான வரையறை மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து எளிமையாக விளக்கமளித்து குழந்தைகளை உள்வாங்கச் செய்தல்.

**யாரெல்லாம் குழந்தைகள்:**

ஆசிரியர்: குழந்தைகளே!! உங்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதை தெரிந்து கொள்வதற்கு முன்பு யாரெல்லாம் குழந்தைகள் என்பதை தெரிந்து கொள்வோம். முதலில் நீங்களே விவாதியுங்கள்; யாரெல்லாம் குழந்தைகள்?குழந்தைக்கான வரையறை என்ன? நீங்களேகலந்து பேசி விடை காணுங்கள் பார்ப்போம்.

**மாணவர்களின் விவாதம்**

இலக்கியா : எங்க வீட்டுல குட்டிப் பாப்பா இருக்கு அது தான் குழந்தை... பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருக்கிற பிள்ளைகள் எல்லோருமே குழந்தைகள் தான்...

இளங்கோவன் : இல்லை நீ தப்பா சொல்கிறாய். எங்க வீட்டுல இருக்கிற மருந்து குப்பியில், "குழந்தைகளுக்கு எட்டாத இடத்துல இந்த மருந்தை வைக்கவும்" என்று எழுதி இருக்கு. அதனால எங்க அம்மா எனக்கு எட்டாத இடத்துல வைச்சுட்டு அத எடுக்கக்கூடாதுன்னு சொன்னாங்க. அப்படின்னா நானும் குழந்தை தான்.

அமுதன் : டேய் நாம எல்லாருமே குழந்தைகள் தாண்டா...

சங்கமித்திரன் : இல்லை நீங்க எல்லோரும் தப்பா சொல்கிறீர்கள். இந்த கோடைவிடுமுறைக்கு நான், எங்க அம்மா, அப்பா, எல்.கே.ஜி படிக்கிற எங்க பாப்பா, பத்தாவது படிக்கிற எங்க அண்ணன், காலேஜ் படிக்கிற எங்க அக்கா எல்லோரும் அரசு பேருந்துல குற்றாலம் போனோம். அப்போது நடத்துனர் பயணச்சீட்டு கொடுக்க வந்த போது, எங்க அம்மா எங்க எல்லாருக்கும் பயணசீட்டு எடுக்க காசு கொடுத்தாங்க. அப்போது நடத்துனர், மூன்று வயதுக்கு கீழே இருக்கிற கை குழந்தைகளுக்கு பயணசீட்டு வேண்டாம் என்றார். 3 வயசு முதல் 12 வயசுக்கு கீழ இருக்கிற குழந்தைகளுக்கு பாதி பயணச்சீட்டு வாங்கணும் என்றார். 12 வயசுக்கு மேல இருக்கிறவங்களுக்கு முழு பயணச்சீட்டு வாங்கணும் என்றார். அப்படின்னா 12 வயசு வரைக்கும் உள்ளவங்க எல்லோரும் குழந்தைகள்தான்.

மங்கையர்க்கரசி : இல்லை நீயும் தப்பா தான் சொல்கிறாய். இப்ப நடந்த சட்டமன்ற தேர்தலில் எங்க அக்கா முதல்முறையாக வாக்களித்தார். நானும் வாக்களிக்க வருகிறேன் என்று அடம் பிடித்த போது, எனது அம்மா சொன்னார் "அக்காவுக்கு 18 வயது நிறைவடைந்ததால் வாக்காளர் அடையாள அட்டை கிடைத்தது அதனால் அவள் வாக்களிக்கலாம்" நீ இன்னும் குழந்தை தான் என்று கூறினார். அப்படின்னா வாக்களிக்கிற வயசு வரைக்கும் நாம குழந்தைகள் தான்.

ஆசிரியர் : எல்லோரும் சற்று அமைதியாக இருங்கள். நம்ம நாட்டுல குழந்தைகளுக்காக பல சட்டங்கள் வந்திருக்கிறது. உதாரணமாக குழந்தை தொழிலாளர் ஒழிப்புச் சட்டம், கட்டாய கல்வி உரிமைச் சட்டம், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமையில் இருந்து காப்பதற்கான சட்டம், இளம் சிறார் நீதிச் சட்டம் ஆகிய சட்டங்களைச் சொல்லலாம். அதில் ஒவ்வொரு சட்டமும் குழந்தைகள் வயதை வேறு வேறாக சொல்கிறது.

உலகத்தில் இருக்கிற எல்லா நாடுகளும் அங்கமாக இருக்கிற ஐக்கிய நாடுகள் அவையில் 1989ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட "குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையில்" 18 வயது நிறைவடையாதவர்கள் அனைவரும் குழந்தைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் 18 வயது நிறைவடையாதவர்கள் அனைவரும் குழந்தைகள் தான்.

ஆசிரியர்: எல்லோரும் நான் சொல்வதை திரும்ப சொல்லுங்கள், "18 வயது நிறைவடையாதவர்கள் அனைவரும் குழந்தைகளே".

மாணவர்கள் : 18 வயது நிறைவடையாதவர்கள் அனைவரும் குழந்தைகளே.......

## பகிர்ந்து கொள்வோம் 1

1. யாரெல்லாம் குழந்தைகள் ?
2. எந்த உடன்படிக்கையின் படி குழந்தைக்கான வயது 18?
3. நீங்கள் இதற்கு முன்பு, எந்த வயது வரை உள்ளவர்கள் குழந்தை என்று நினைத்தீர்கள்?
4. குழந்தைக்கான வயது 18 என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? (ஆம் எனில் / இல்லை எனில் ஏன்?)

## குழந்தைகளுக்கான உரிமைகள்

(உரையாடல் வழியில்)

ஆசிரியர் : குழந்தைகளே!! உங்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பது தெரியுமா? தெரிந்தவர்கள் வலது கையை உயர்த்துங்கள்.பரவாயில்லையே நான்கு குழந்தைகள் கைகளை உயர்த்தி இருக்கிறார்கள். பாராட்டுக்கள் குழந்தைகளே!!!. நீங்கள் ஒவ்வொருவராக எழுந்து குழந்தைகளுக்கு என்ன உரிமைகள் உள்ளன எனச் சொல்லுங்கள் பார்க்கலாம்!.

மங்கையர்க்கரசி : ஆசிரியரே, எங்களுக்கு கல்வி கற்பதற்கான உரிமை உள்ளது.

செந்தாமரை : ஆசிரியரே, எங்களுக்கு விளையாடுவதற்கான உரிமை உள்ளது.

அமுதன் : ஆசிரியரே, எங்களுக்கு சாப்பிடுவதற்கான உரிமை இருக்கிறது.

(மாணவர்கள் அனைவரும் சிரித்துக்கொண்டே அமுதனை உட்காருடா என்கிறார்கள்)

மணிமேகலை : ஆசிரியரே, எங்களுக்கு ஓட்டுப்போடும் உரிமையைத் தவிர எல்லா உரிமைகளும் உள்ளது.

ஆசிரியர் : பாராட்டுக்கள் மணிமேகலை.... எல்லோரும் மணிமேகலைக்கு கைதட்டி பாராட்டுங்கள்.

குழந்தைகள் எல்லோரும் கைத்தட்டுகிறார்கள்.......

ஆசிரியர் : மணிமேகலை நீ சொன்னதை இன்னும் கொஞ்சம் விரிவாக சொல்ல முடியுமா?

மணிமேகலை : ஆசிரியரே, எங்களுக்கு விளையாடுவதற்கு, கல்வி கற்பதற்கு, சத்தான உணவினை பெறுவதற்கு, உடல் நலத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு, விழாக்களில் பங்கேற்பதற்கு, எங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு என நிறைய உரிமைகள் உள்ளது.

ஆசிரியர் : மணிமேகலை நீ சொன்னது அனைத்தும் சரிதான். குழந்தைகளுக்கு இந்த உரிமைகளெல்லாம் உள்ளது என உனக்கு எப்படி தெரியும்?

மணிமேகலை : ஆசிரியரே, எங்க அப்பா மனித உரிமை கல்வி நிறுவனத்தில் வேலை செய்கிறார். அங்கு நடந்த கோடைமுகாம் நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டேன். அப்போது தான் இதை தெரிந்து கொண்டேன்.

ஆசிரியர் : மணிமேகலை போல எல்லோரும் விடுமுறை தினத்தை பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். மணிமேகலைக்கு இன்னொரு முறை எல்லோரும் கை தட்டுங்கள்

(எல்லோரும் கைத்தட்டுகிறார்கள்)

எல்லோரும் அமைதியாக இருங்கள். நன்றாக நான் சொல்வதை கவனியுங்கள் மணிமேகலை சொன்ன உரிமைகள் போக இன்னும் சில முக்கியமான உரிமைகள் உள்ளன. எல்லா உரிமைகளையும் ஒன்றாக சேர்த்து பார்க்கலாம்.



- உயிர் வாழ்வதற்கான உரிமை
- சத்தான உணவு மற்றும் ஆரோக்கியமான உடல் நலத்திற்கான உரிமை
- பாதுகாப்பு மற்றும் குழந்தை தொழிலாளர் முறைக்கெதிரான உரிமை
- சமமான, தரமான கல்விக்கான உரிமை
- ஓய்விற்கான உரிமை, விளையாடுவதற்கான உரிமை, கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான உரிமை
- அவமதிப்பிற்கு, பாகுபாட்டிற்கு எதிரான உரிமை
- கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை

இந்த உரிமைகள் குழந்தைகளுக்கான மிக முக்கிய உரிமைகளாகும். இந்த உரிமைகள் ஒவ்வொன்றும் குழந்தைகளுக்கு மிக முக்கியமானவை. இந்த உரிமைகள் நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாக உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டு வரப்பட்ட குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையிலும் இந்த உரிமைகள் இடம்பெற்றுள்ளன. குழந்தைகளின் நலனையும் உரிமைகளையும் காப்பது அரசின் கடமையாகும். இவற்றை நாம் ஒவ்வொன்றாக அடுத்த வகுப்புகளில் விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

## பகிர்ந்து கொள்வோம் - 2

- உங்களுக்கு மிகவும் பிடித்த உரிமை எது? ஏன் இந்த உரிமை உங்களுக்கு பிடிக்கிறது?
- இந்த பட்டியலில் உள்ள உரிமைகளைத் தவிர வேறு ஏதாவது உரிமைகள் உங்களுக்கு உள்ளனவா? அவை என்ன?
- நீங்கள் அனுபவிக்க முடியாத உரிமைகள் ஏதேனும் உள்ளனவா? அவை என்ன?

## 1. உயிர் வாழ்வதற்கான உரிமை

ஆசிரியர் : மனிதர் அனைவருக்கும் உயிர் வாழ்வதற்கான உரிமை உண்டு. நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் – பிரிவு 21, நம் எல்லோருக்கும் உயிர் வாழ்வதற்கான உரிமையை அளித்துள்ளது. நாம் மாண்போடும், சுதந்திரத் தோடும் வாழ்வதற்கான உரிமையை அளித்துள்ளது. நான் சொல்வதை கவனமாக கேளுங்கள்!! ஒரு குழந்தை உயிர் வாழ்வதற்கு தேவையான அனைத்து சூழல்களும் உருவாக்கப்பட

வேண்டும். இது தான் உயிர் வாழும் உரிமையாகும். குழந்தைகளே! இந்த உரிமை உங்களுக்கு புரிகிறதா? ஏதாவது கேள்விகள் இருக்கிறதா?

சங்கமித்திரன் : ஆசிரியரே, நீங்கள் சொல்வது எனக்கு குழப்பமாக இருக்கிறது. கடந்த வாரம் தொலைக்காட்சி செய்தியில் கருக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தை பற்றி சொன்னார்கள். நான் கருக்கொலைன்னா என்ன என்று என் அம்மாவிடம் கேட்டேன். கருவில் இருப்பது பெண் குழந்தை என்பதை அறிந்து அந்த குழந்தை தேவையில்லை என்று அதை சட்டத்திற்கு புறம்பாக அந்தக் கருவை கலைத்து விடுவார்கள், என்று என் அம்மா சொன்னார்கள். குழந்தைக்கு உயிர் வாழ உரிமை உள்ளது என்றால், ஏன் பிறக்கும் முன்பாகவே கருக்கொலை செய்கிறார்கள்?

ஆசிரியர் : நீ சொல்வது சரி தான், கருக்கொலையை தடுப்பதற்காக அரசு சட்டம் இயற்றியிருக்கிறது, தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இது சமூகம் சார்ந்த பிரச்சனையாக இருப்பதால் நாம் எல்லோரும் ஒன்றாக சேர்ந்தால் தான் இதை தடுக்க முடியும். பெண்ணும் ஆணும் சமம் என்பதை நாம் உணர வேண்டும். நம் குடும்பங்களில் நாம் வாழும் இடங்களில் இது போன்ற சம்பவம் நிகழாமல் பார்ப்பது நமது கடமை. உயிர்வாழ்வதற்கான உரிமை நம் எல்லோருக்கும் உள்ளது. இதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். நாம் அடுத்த பொருள் குறித்து பார்க்கலாம்.

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

– கவிமணி

### பகிர்ந்து கொள்வோம்

- உனது பகுதியில் கருக்கொலை நடந்துள்ளதா?
- கருக்கொலை ஏன் நடக்கிறது?

குறிப்பு: மேற்கண்ட வாழ்வுரிமை குறித்து கருத்தினை நாடக வழியில் குழந்தைகளை நடிக்க வைத்து உள்வாங்கச் செய்யவும்.

## 2. சத்தான உணவு மற்றும் ஆரோக்கியமான உடல்நலத்திற்கான உரிமை



ஆசிரியர் : குழந்தைகளுக்கு இந்த உரிமை மிக முக்கியமானது. நாமும் நமது குடும்பத்தினரும் போதுமான அளவு சத்தான உணவு, உடை, வீடு, மருத்துவக் கவனிப்பு மற்றும் தேவையான சமுதாய சேவைகளைப் பெற்று ஆரோக்கியமாக, பாதுகாப்பாக வாழ உரிமை உண்டு. இந்த உரிமை உங்களுக்கு புரிகிறதா?

அமுதன் : ஆசிரியரே, எது சத்தான உணவு?

சங்கமித்திரன் : ஆசிரியரே, குழந்தைகள் சாப்பிடுகிற உணவு களில் கலப்படம் இருக்குனு சொல்றாங்க, கொஞ்ச நாளைக்கு முன்னால கூட குழந்தைக சாப்பிடுகிற நூடுல்ஸ் உணவில் எந்த சத்தும் இல்லைன்னு அதை தடை செய்தாங்க. அப்புறம் எப்படி எங்களுக்கு சத்தான உணவு கிடைக்கும்?

ஆசிரியர் : வேறு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா?

**இலக்கியா** : ஆசிரியரே, நாம் சாப்பிடுற சாப்பாட்டுல கூட கெமிக்கல்ஸ் அதிகமா இருக்குன்னு சொல்றாங்க. அது உண்மையா ஆசிரியரே?

**மணிமேகலை** : ஆசிரியரே, எங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டில் இருந்த ஒரு குட்டி பாப்பா மிக ஒல்லியாக மெலிந்து இருந்தாள். அவளுக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போகும்.ஒரு நாள் அவளுக்கு உடல்நிலை சரியில்லாமல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவளை பார்க்க என் அம்மாவுடன் நானும் மருத்துவமனைக்கு சென்றேன். அந்த மருத்துவமனையின் நிலையை கண்டு வேதனை அடைந்தேன். அசுத்தமாகவும், துர்நாற்றம் வீசிய நிலையும், கவனிப்பு அற்ற நிலையும் இருந்தது.

**செந்தாமரை** : அப்படின்னா சாதாரண நோய்க்கு வைத்தியம் பார்க்க போனா நோய் முற்றிய நிலையில் தான் திரும்பி வருவாங்கன்னு சொல்லு !!

**மணிமேகலை** : ஆசிரியரே, பாவம் அந்த குட்டிப்பாப்பா அங்கேயே இறந்துவிட்டாள். அங்கிருந்த எல்லோரும் அழுதார்கள். அந்த குட்டிப்பாப்பாவின் அண்ணன் ஏங்கி ஏங்கி அழுதான்.

(மணிமேகலை கண் கலங்கி அழுகிறாள்.... அழுகிறாள்...)

**ஆசிரியர்** : மணிமேகலை நீ அழக்கூடாது. நீ எவ்வளவு தைரியமான பொண்ணு. எவ்வளவு அழகாக உன் அனுபவத்தைச் சொன்னாய். நீ நன்றாக பேசினாய்.எல்லோரும் மணிமேகலையை பாராட்டி கைத்தட்டுங்கள்.......

(எல்லா குழந்தைகளும் கைத்தட்டுகிறார்கள்)

நீங்கள் சொன்னது அனைத்தும் சரிதான்.மணிமேகலை சொன்னதும் சரிதான். ஏழை மக்களுக்கு ஆரோக்கியமான வைத்தியம் கிடைக்க வேண்டும். இது அடிப்படை உரிமை. இதற்காக நம்ம அரசு பல கோடி ரூபாய் செலவு செய்கிறது. புதிய புதிய திட்டங்களை செயல்படுத்துகிறது. இதை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களின் கவனக்குறைவால் இது போன்ற அவல நிலையில் மருத்துவமனை இருக்கிறது. எல்லாவற்றையும் அரசு தான் செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கக்கூடாது. நமக்கான அடிப்படைக் கடமையை நாம் தான் செய்ய வேண்டும். இது ஒரு கூட்டு முயற்சி. நம் சமூகத்திற்கான பங்களிப்பை நாம் தான் செய்யவேண்டும். நீங்கள் எல்லாம் செய்வீர்களா???

**குழந்தைகள் :** செய்வோம் டீச்சர்.......

## பகிர்ந்து கொள்வோம்

- நீ விரும்பும் உணவு எது?
- உங்கள் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை சுகாதாரமாக உள்ளதா?
- உங்கள் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை பற்றி உனது கருத்து?
- நீ விரும்புவது அரசு மருத்துவமனையையா? தனியார் மருத்துவமனையையா? ஏன்?

## 3. பாதுகாப்பு மற்றும் குழந்தை தொழிலாளர் முறைக்கெதிரான உரிமை

**ஆசிரியர்** : எல்லா குந்தைகளுக்கும் பாதுகாப்பு உரிமை உண்டு. பொதுவாக குழந்தைகள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆங்கிலத்தில் “Childrens are Vulnerable” என்று சொல்வார்கள். அதனால் தான்



குழந்தைகளைக் காப்பதற்காக அரசு பல புதிய சட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. முக்கியமாக குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக அரசு தனிச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதன்படி 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எந்த தொழிலிலும் ஈடுபடுத்தக் கூடாது. 14 வயது முதல் 16 வயது வரையிலான குழந்தைகளை ஆபத்தான தொழிலில் ஈடுபடுத்தக்கூடாது. அதுமட்டுமல்ல இன்றைக்கு குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள். நீங்கள் ஏற்கனவே உடலியல் பற்றியும் பாலினம் பற்றியும் படித்து இருக்கிறீர்கள். பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தினை 2012 ஆம் ஆண்டு நமது அரசு கொண்டு வந்தது. அதுபோல பெற்றோர் – உறவினர் இல்லா குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிட குழந்தைகள் இல்லங்களை அரசு ஏற்படுத்தி அவர்களுக்கு தேவையான கல்விக்கு நிதியை அளித்து வருகிறது. இந்த உரிமை உங்களுக்கு புரிகிறதா? ஏதாவது கேள்விகள் உண்டா?

சிந்தாமணி : ஆசிரியரே, விடுமுறை நாளில் எனது குடும்பத்தினரோடு உணவு விடுதிக்கு சென்றோம். அப்போது, அங்கிருந்த மேஜையை துடைப்பதற்காக ஒரு சிறுவன் வந்தான். அவனிடம் ஏனப்பா, நீ பள்ளிக்கு போகவில்லையா? என்று கேட்டார்கள். அவன் இல்லை என்றும் இங்கு தான் வேலை செய்கிறேன் என்றும் கூறினான். அவனுக்கு 12 வயதிற்குள் தான் இருக்கும்.நீங்கள் சொல்வது போல சட்டம் இருந்தால் இது போன்ற குழந்தைகளை வேலையில் வைத்திருக்கக் கூடாதல்லவா!

இளங்கோவன் : ஆசிரியரே, சிந்தாமணி சொல்வது போல நானும் எனது அனுபவத்தை கூற விரும்புகிறேன். காலாண்டு விடுமுறைக்கு சிவகாசி ஊருக்கு எனது பாட்டியின் வீட்டிற்கு நான் சென்றேன். அங்கு என்கூட விளையாட யாருமே இல்லை. நான் வீட்டிலேயே தனியாக இருந்தேன். என் பாட்டியிடம் இந்த ஊரில் குழந்தைகளே இல்லையா என்றேன். இங்கு உள்ள குழந்தைகள் அவர்கள் வீட்டில் இருந்தபடியே பட்டாசு செய்வதற்கான குப்பிகளை தயாரித்து கொடுப்பார்கள் என என் பாட்டி சொன்னார். தாங்கள் கூறிய குழந்தை தொழிலாளர் ஒழிப்புச் சட்டம், குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வேலை செய்வதை அனுமதிக்கிறதா ஆசிரியரே?

ஆசிரியர் : நீங்கள் எல்லாம் அறிவாளி குழந்தைகள். உங்களிடம் பேசுவதற்கு எனக்கே பயமாக உள்ளது. சிந்தாமணியும் இளங்கோவனும் சொன்னது அப்பட்டமான உண்மை. இது

போன்ற நிகழ்வுகள் சட்டப்படி குற்றம் தான். இது போன்ற நிகழ்வுகளை நாம் பார்த்தால் தைரியமாக புகார் அளிக்க வேண்டும். அப்போது தான் குற்றங்கள் குறையும். நம் சமுதாயத்தில் உள்ள அநீதிகளை கண்டு அவநம்பிக்கை கொள்ளாதீர்கள். நல்லதை பார்த்து நம்பிக்கை கொள்ளுங்கள்!.


மூன்று வயதில் விபத்து
பார்வையை இழந்தான் சிறுவன்....
ஆனால் நானும் சாதிப்பேன் என்று முயற்சி செய்தான்........
பார்வையற்றோர் படிப்பதற்கேற்ற புதிய எழுத்து முறையை உருவாக்கினான்.

– அவன்தான் "லூயிஸ் பிரெய்லி"

### பகிர்ந்து கொள்வோம் - 5

- எந்தெந்த தொழில்களில் குழந்தைகள் பணி செய்கிறார்கள்?
- குழந்தைக்கு எந்த தொழில் ஆபத்தானது?
- குழந்தை பள்ளிக்கு செல்லாமல் வேலைக்கு செல்வதற்கு யார் காரணம்
- குழந்தை தொழிலாளர்களுக்கு என்னென்ன உரிமைகள் மறுக்கப்படுகின்றன?
- பள்ளிப்படிப்பை இழந்து தொழிலாளியாக மாறிய குழந்தை மீண்டும் பள்ளிக்கு செல்ல யார் முயற்சி எடுக்க வேண்டும்?

### 4. சமமான, தரமான கல்விக்கான உரிமை




எல்லோருக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு. நமது அரசு"குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தினை" 2009 ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி உள்ளது. இதன்படி 6 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு கட்டாய கல்வி அளிப்பது அரசின் கடமையாகும். அதே நேரத்தில் இந்த கல்வி தரமான கல்வியாகவும் சமமான கல்வி முறையாகவும் இருக்க வேண்டும்.

இந்த சட்டத்தின்படி, தனியார் பள்ளிகளில் ஆரம்ப வகுப்பில் இருந்து 14 வயது வரையிலான கல்வியை 25% விளிம்பு நிலையில் உள்ள பெற்றோரின் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவசமாக அளிக்க வேண்டும். குழந்தைகள் நேசிக்கும் அளவிற்கு பள்ளிகள் உருவாக்கப்பட வேண்டும். பிரம்படி இல்லா வகுப்பறை உருவாக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி தண்டனை முறைகள் குற்றமாக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கு செல்லாமல் உள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட குழந்தைகளை அவர்களின் வயதிற்கேற்ற வகுப்பில் சேர்க்கப்பட்டு சிறப்பு பயிற்சியை அளிக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக்கல்வியை முடிப்பதற்கு ஏற்ற வகையில் அரசு அருகமைப்பள்ளியை அமைக்க வேண்டும்.

அரசுப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் இலவச கல்வியை கட்டாயம் அளிக்கவேண்டும். தனியார் பள்ளிகளில் படிக்கின்ற நலிந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகள் ஆகியோருக்கு 25% இடஒதுக்கீடு மூலம் இலவசக் கல்வியை அளிக்க வேண்டும் என்பன போன்ற மிக முக்கிய அம்சங்கள் இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பகிர்ந்து கொள்வோம்

- எது தரமான கல்வி?
- எந்த வயது முதல் எந்த வயது வரை கட்டாயக் கல்வி?
- இலவச கட்டாய கல்வியை அளிப்பது யார் கடமை?
- நீங்கள் பிரம்படி வாங்கியதுண்டா?
- தண்டனை முறைகள் அவசியமா?
- தனியார் பள்ளிகளில் எந்த பிரிவினருக்கு 25% இடஒதுக்கீடு மூலம் இலவச கல்வி உரிமை அளிக்கப்பட்டுள்ளது?

## 5. ஓய்விற்கான உரிமை, விளையாடுவதற்கான உரிமை, கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான உரிமை

இந்த உரிமை குழந்தைக்கு மிக முக்கியமானதாகும். ஒரு குழந்தைக்கு பத்து மணி நேரம் உறக்கம் தேவை என்று கூறப்படுகிறது. கல்வி கற்பதை தவிர்த்து அந்த குழந்தைக்கு விளையாடுவதற்கான உரிமையும் தனக்கு விருப்பம் உள்ளவற்றில் கவனம் செலுத்தவும் உரிமை உண்டு. அதன் விளைவாக தான் பள்ளிகளில் கூட விளையாடுவதற்கு தனி நேரம் ஒதுக்கப்படுகிறது. பள்ளியில் விளையாட்டு மைதானம் கட்டாயமாகும். விளையாட்டு உபகரணம் கண்டிப்பாக மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இருக்க வேண்டும். நாம் குடியிருக்கும் பகுதிகளிலும் பூங்காக்கள், விளையாடுவதற்கான இடங்கள் அவசியமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான், அந்த குழந்தை தனக்கான முழுவளர்ச்சியை அடைய முடியும். குழந்தைகள் தாம் சார்ந்த கலாச்சார விழாக்களில் பங்கு கொள்ளவும் பல்வேறு கலைகளை கற்கவும் அனுபவிக்கவும் அறிவியல் வளர்ச்சி தரும் பயனை அனுபவிக்கவும் உரிமை உண்டு.

### பகிர்ந்து கொள்வோம்

- உங்களுக்கு விளையாடுவதற்கான உரிமை வேண்டுமா?
- உங்களுக்கு ஓய்வுக்கான உரிமை வேண்டுமா?
- உங்களுக்கு பிடித்த விளையாட்டு எது?
- நீங்கள் மறந்துபோன விளையாட்டு எது?
- நீங்கள் விரும்பும் கலாச்சார நிகழ்வு எது?

## 6. அவமதிப்பிற்கு, பாகுபாட்டிற்கு எதிரான உரிமை

எந்த ஒரு குழந்தையும் அவமதிப்பிற்கு உள்ளாக்கப்படக் கூடாது. சாதி ரீதியாக, மத ரீதியாக, மொழி ரீதியாக, பாலினம் ரீதியாக எந்த குழந்தையும் பாகுபடுத்தவோ, அவமதிப்பிற்கு உள்ளாக்கவோ, ஒதுக்கி வைக்கவோ கூடாது.

குறிப்பாக பள்ளிகளில் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் பெருமளவில் நடந்து வருகின்றன. கீழ்க்கண்ட வன்கொடுமைகளால் குழந்தை பெரிதும் பாதிக்கப்படுகிறது.




- சாதியை சுட்டிக்காட்டி இழிவுபடுத்துவது
- பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, கட்டாயப்படுத்துவது, சீண்டுவது
- ஏழ்மையை வைத்து அவமானப்படுத்துவது
- பெயரை வைத்து, உருவத்தை வைத்து கேலி செய்வது
- தகாத சொற்களால் அவமானப்படுத்துவது
- இருப்பிடத்தை வைத்து கிண்டல் செய்வது
- மத ரீதியாக வேறுபடுத்தி பேசுவது
- அடிப்பது
- தண்டனை கொடுப்பது
- மன ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவது
- இயலாமையை வைத்து அவமானப்படுத்துவது

இதுபோல இன்னும் பிற...

இதுபோன்ற பாகுபடுத்தல்களால் குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மன ரீதியான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

### உண்மைச்சம்பவம் 1

சேலம் மாவட்டத்தில் 6 வயது பெண் குழந்தை ஒரு தனியார் பள்ளியில் 1-ம் வகுப்பு படித்து வருகிறார். தினமும் பள்ளிக்கு வேனில் சென்று விட்டு வீடு திரும்புவது வழக்கம். ஒரு நாள் பள்ளி சென்று

மாலை வீடு திரும்பிய சிறுமி மிகவும் சோகத்துடன் காணப்பட்டார். இரவு நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்துள்ளார். இது குறித்து அவரது பெற்றோர்கள் மாணவியிடம் விசாரித்துள்ளனர். அப்போது அந்த மாணவி, பள்ளியில் புதிதாக சேர்ந்துள்ள ஆசிரியர் தன்னிடம் மதிய உணவு இடைவேளையின்போது பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறி இருக்கிறார். இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர்கள் இந்த சம்பவம் குறித்து வாழப்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். புகாரின்பேரில் காவல் ஆய்வாளர் விசாரணை நடத்தினார். விசாரணையில் அந்த பள்ளியில் வேலை செய்த திருமணமாகாத 27 வயதான ஆசிரியர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தது உண்மை என கண்டறியப்பட்டது. இந்த ஆசிரியர் மீது பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர். பாலியல் தொல்லைக்கு ஆளான பள்ளி மாணவி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### உண்மைச்சம்பவம் 2

ஈரோடு மாவட்டம், பவானி அருகே 3 வயது குழந்தை 30.06.2016 அன்று அவருடைய வீட்டுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த போது தனியார் ஆஸ்பத்திரி ஊழியர் அங்குராஜ் (வயது 40) குழந்தையை அழைத்து சாக்லேட் கொடுத்து தன்மையாக பேசி தன்னுடைய வீட்டுக்கு தூக்கி சென்று குழந்தையிடம் பாலியல் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது குழந்தை சத்தம் போட்டு அழுதுள்ளது. வீட்டின் அருகில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை காணவில்லையே என்று குழந்தையின் தாய் அந்த பகுதியில் தேடியுள்ளார். அப்போது அவருடைய குழந்தையின் அழுகுரல் சத்தம் அங்குராஜின் வீட்டில் இருந்து வந்ததைக் கேட்டு வீட்டுக்குள் சென்றபோது அங்குராஜ் குழந்தையிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டு கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். குழந்தையின் தாயைக் கண்டதும், அங்குராஜ் தப்பி ஓட முயன்றார். உடனே குழந்தையின் தாய் அங்கிருந்தவர்கள் உதவியுடன் அங்குராஜ் தப்பித்து ஓடிவிடாமல் தடுத்து பிடித்து மகளிர் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்.

### உண்மைச்சம்பவம் 3

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே வள்ளி என்பவரின் மகள் தர்ஷிணி அரசு பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வந்தாள். அப்பகுதியை சேர்ந்த திருமூர்த்தி 30.07.2016 அன்று மாலை 5 மணியளவில் தனது வீடு வழியாக சென்ற குழந்தை தர்ஷிணியை பிஸ்கட் தருவதாக கூறி, தன் வீட்டுக்குள் அழைத்து சென்றுள்ளான். பின், 'டிவி'யை மிக சத்தமாக வைத்துவிட்டு, பூஜை அறையில் வைத்து, சிறுமியை பலாத்காரம் செய்துள்ளான். இதனால், சிறுமியின் அலறல் யாருக்கும் கேட்கவில்லை.

மயங்கிய சிறுமியை வெளியில் தூக்கி செல்ல திட்டமிட்டான். ஆனால், வெளியில் இரவு முழுவதும் ஊர் மக்கள், சிறுமியை தேடிக்கொண்டிருந்தனர்.அதனால், வெளியில் தூக்கி சென்றால் மாட்டி கொள்வோம் என நினைத்து, வீட்டினுள் குழி தோண்டி புதைக்க, முடிவு செய்துள்ளான்.

சிறிது குழி தோண்டிய நிலையில், அது முடியாததால், புதைக்கும் திட்டத்தை கைவிட்டு பின், சிறுமிக்கு மயக்கம் தெளிந்தால் பிரச்னையாகி விடும் என்பதால், அவளது கன்னத்தில் இருந்து வயிறு வரை பிளேடால் கீறி, கொடூரமாக கொலை செய்து, பூஜை அறையில் இருந்த பாத்திரத்தில் போட்டு மூடி விட்டான்.

தர்ஷிணியை காணவில்லை என அவரது பெற்றோர் தேடியுள்ளனர். சந்தேகம் ஏற்பட்டு திருமூர்த்தி வீட்டில் காவலர்கள் சோதனை செய்தனர். இதில், வீட்டின் ஒரு மூலையில் இருந்த ஈய பாத்திரத்தில், குழந்தை தர்ஷிணி உடல் திணித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

குற்றவாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

### பகிர்ந்து கொள்வோம்

- எந்த விதமான வன்கொடுமைகளால் குழந்தை பெரிதும் பாதிக்கப்படுகிறது?
- நீங்கள் சாதி ரீதியிலான வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளீர்களா?
- குழந்தை பாலியல் துன்புறுத்தலில் இருந்து உங்களை எப்படி காத்துக்கொள்வீர்கள்?
- உங்கள் பெயர் உங்களுக்கு பிடித்திருக்கிறதா? இல்லை எனில் ஏன்?

## 7. கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை



ஒவ்வொருவருக்கும் கருத்து சுதந்திரமும் அதை வெளிப்படுத்துவதற்கான உரிமையும் உண்டு. விரும்பிய கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளவும், தேடவும், பெறவும், விரும்பிய வழியில் பிறருக்கு எடுத்துச் சொல்லவும் உரிமையுண்டு. வீடுகளிலும் பள்ளிகளிலும் குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். பேச்சுச் சுதந்திரம் என்னும் தொடர் பல சமயங்களில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது, வாய்ப்பேச்சை மட்டும் குறிப்பது அல்ல. கருத்து வெளிப்பாடு வேறு பல வழிகளிலும் இடம்பெற முடியும். என்ன குழந்தைகளா உங்களுக்கு புரிகிறதா?இல்லையா?

**தமிழ்செல்வி** : ஆசிரியரே, நன்றாக புரிகிறது. நீங்கள் சொல்வதை பார்த்தால் குழந்தைகளாகிய எங்களுக்கு எங்களின் கருத்தை வெளிப்படுத்துவதற்கு, சிந்திப்பதற்கு, பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், எங்கள் வீட்டில் நீங்கள் சொல்வதற்கு நேர் மாறாக இருக்கிறதே.வீட்டில் உள்ள பெரியவர்கள் ஏதாவது பேசிக்கொண்டு இருக்கும் போது நான் ஏதாவது சொல்ல முற்பட்டால் உடனே, “பொட்டப் புள்ளைக்கு என்ன பேச்சு பேசாம போய் படி” என்று சொல்கிறார்கள். எங்களுக்கு பேச்சுரிமையே கிடையாது, அப்புறம் எங்கிட்டு கருத்த சொல்லமுடியும்.

**தமிழ்வாணன்** : ஆசிரியரே, செல்வி சொல்லுவது தான் சரி எங்கவீட்டிலேயும் இதே நிலைமை தான், என்னுடைய பெற்றோர் எப்போதும் என்னிடம் சொல்வது “படிக்கிற பிள்ளைக்கு இங்க என்ன வேலை? போய் படி” என்பார்கள். என்னை பேசவிடுவதே இல்லை.

**இலக்கியா** : ஆசிரியரே, எங்கள் வீட்டில் நடந்த சம்பவத்தை கூற விரும்புகிறேன். இதே பள்ளியில் தான் என் மூத்த அக்கா பத்தாவது வகுப்புவரை படித்தாள். அதன்பிறகு என் அக்காவிற்கு திருமணம் செய்ய என் பெற்றோரே முடிவு செய்தார்கள். என் அக்காவிடம் இதை பற்றி எதுவும் கேட்கவில்லை. திருமணம் ஆகும் போது என் அக்காவிற்கு 15 வயது. இந்த வகுப்பில்தான் என் அக்காவிற்கு நடந்தது குழந்தை திருமணம் என்று தெரிந்தது. ஆனால் அவளின் சம்மதத்தை யாரும் கேட்கவில்லை. என் அக்காவிற்கு நீங்கள் சொல்லித்தரும் எந்த விசயமும் தெரியாது.அப்போதெல்லாம் இந்த மாதிரியான வகுப்பு ஏன் நடத்தப்படவில்லை?

மணிமேகலை : ஆசிரியரே, எங்கவீட்டில் இவர்கள் சொல்வது போல இல்லை. என் கருத்தையும் பத்தாவது படிக்கும் என் அண்ணனின் கருத்தையும் என் அம்மாவும் அப்பாவும் கேட்பார்கள். குறிப்பாக உணவு, உடை, பொருள் வாங்குவது, வெளியே செல்வது, உறவினர்கள் முன் நடத்தும் விதம், கலாச்சார நிகழ்வுகளில் பங்கெடுப்பது போன்றவற்றில் எங்களுடன் கலந்து பேசி முடிவெடுப்பார்கள். சில சமயங்களில் என் பெற்றோர் என்னை அடிக்க முற்படும்போது நான் அவர்களிடம் இவ்வாறு சொல்வேன், “நான் 1098க்கு போன் பண்ணி நீங்க என்னை அடிக்கிறீர்கள் என்று சொல்கிறேன் பாருங்கள்” என்பேன். ஆனால் பிற இடங்களில் குழந்தைகளை கண்டுகொள்ளாத, மதிக்காத, ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாத போக்கு இருக்கிறது. பள்ளிக்கூடங்களிலும் கூட குழந்தைகளின் கருத்துக்களை கேட்பதில்லை. நம் பள்ளியிலும் இதே நிலைமை தான். ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தைகளின் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு “கருத்துரிமை பெட்டி” ஒன்றை பள்ளி வளாகத்தில் வைக்க வேண்டும். தங்கள் கருத்துக்களை தைரியமாக எழுதி இந்த பெட்டியில் போடுவதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த கருத்துரிமையை வெளிப்படுத்தும் சூழல் சாத்தியமாகும்

ஆசிரியர் : குழந்தைச் செல்வங்களே, பலவிதமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டீர்கள். உண்மையாகவே நீங்கள் பகிர்ந்து கொண்ட அனுபவங்கள் மூலமாக நான் புதிய விசயங்களை தெரிந்து கொண்டிருக்கிறேன்.நான் உங்களுக்கு தான் நன்றி சொல்லவேண்டும். இன்னும் குறிப்பாக நடைமுறையில், “குழந்தைகள் தங்கள் குரல்களை உயர்த்துவது கூட இங்கே அனுமதிக்கப்படுவதில்லை”. மாறாக நீங்கள் சொல்வது போல் குழந்தைகளின் குரல்கள் நெரிக்கப்படுகின்றன, நசுக்கப்படுகின்றன. ஆயினும், நான் சொல்லிய கருத்துக்களை உங்கள் குடும்பத்தில் உரையாடுங்கள் மாற்றம் ஒருநாளில் வந்துவிடாது.அதற்காக நீங்கள் மனம் தளர்ந்து விடாதீர்கள். தொடர் முயற்சி தான் பலன் தரும். ஒரு போதும் முயற்சியை கைவிடாதீர்கள். உங்களுக்கான உரிமைகளை உன்னிடத்தில், உன்குடும்பத்தில், உறவினர்கள் மத்தியில், பள்ளியில், சமூகத்தில், வழிபாட்டுத்தலங்களில் மற்றும் பொது இடங்களில் பயன்படுத்த தொடங்குங்கள். மாற்றம் காண்பீர்கள்.மணிமேகலை சொன்னது போல நம் பள்ளியில் “கருத்துரிமை பெட்டி” யை வைப்பதற்கு நான் பள்ளி தலைமை ஆசிரியரிடம் அனுமதி பெற்று வைக்கிறேன். நம் பள்ளியில் இருந்து மாற்றத்தை துவக்குவோம்.

## பகிர்ந்து கொள்வோம்

- குழந்தைகளுக்கு கருத்துரிமை அவசியம் என்று கருதுகிறீர்களா?
- பேச்சுரிமைக்கும் கருத்துரிமைக்கும் வேறுபாடு உள்ளதா?
- எதற்காக உங்களுக்கு கருத்துரிமை வேண்டும்?
- கருத்துரிமையால் குழந்தைகளுக்கு பலன் இருக்கிறதா?

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்பதால் குடும்ப சொத்துக்களைப் பெறவும், நிர்வகிக்கவும், அனுபவிக்கவும் உரிமை உண்டு.

பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை, பிரிவு 6

# 8. பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள்

## 1. கருக் கொலை மற்றும் சிசுக் கொலை

### ஒரு கரு பேசுகிறது



அக்டோபர் 5

இன்று என் வாழ்க்கை துவங்கிவிட்டது. என் அம்மா, அப்பாவுக்கு இது இன்னும் தெரியாது. நான் ரொம்பச் சின்னதாக இருக்கிறேன். ஆனாலும் எனக்கு உயிரும், வடிவமும் இருக்கிறது.

நான் ஒரு பெண் கரு. எனக்கு அழகான கண்கள் இருக்கின்றன. நான் பிற்காலத்தில் எப்படியெல்லாம் இருப்பேன் என்பதெல்லாம் இப்போதே முடிவாயிடுச்சு.

அக்டோபர் 19

நான் இன்னும் கொஞ்சம் வளர்ந்துட்டேன். ஆனால் என்னால் எதுவுமே செய்ய முடியலை. என் அம்மாதான் எனக்கு எல்லாமே செய்யுறாங்க. அவங்க வயித்துக்குள்ள நான் இருக்கிறேன் என்பதோ அவங்க ரத்தம் தான் எனக்கு உணவு என்பதோ அவங்களுக்குத் தெரியாது. என் அம்மா ரொம்ப நல்லவங்க.

அக்டோபர் 23

என் வாய் மெல்லத் திறக்க ஆரம்பிக்கிறது.

அச்சோ ! இன்னும் ஒரு வருஷம் கழித்து நான் அழகா சிரிப்பேன். பிறகு அழகா பேசுவேன். நான் முதன் முதல்ல அம்மான்னுதான் கூப்பிடுவேன்.

அக்டோபர் 26

என் இதயத்துடிப்பு துடிக்க ஆரம்பிச்சிடுச்சு. இப்போதிருந்து ஓய்வேயில்லாமல் என் வாழ்நாள் முழுவதும் இது துடிச்சிக்கிட்டேயிருக்கும். ரொம்ப வருஷம் கழித்து அது களைத்துப் போய்ப் பிறகு நின்னுடும். அப்புறம் நான் செத்துப் போயிடுவேன்.

நவம்பர் 2 : இன்னிக்கு என் அம்மாவைப் பரிசோதிக்க வந்த அந்த டாக்டர் நான் அவங்க வயித்துல இருக்கிறத சொன்னாங்க. அம்மா ! உங்களுக்குச் சந்தோஷமா?

நவம்பர் 23 : என் அம்மா, அப்பா எனக்கு என்ன பெயர் வைக்கலாம்னு யோசிச்சிட்டு இருக்காங்கன்னு நினைக்கிறேன். எனக்குச் சாந்தின்னு பேர் வைச்சுக்கணும்ன்னு ஆசை.

நவம்பர் 28 : என் ஆசையெல்லாம் வெறும் கனவாப் போச்சு, என் அம்மா அப்பா என்னைக் கொல்லப் போறாங்க

பிறக்காத ஒரு பெண் குழந்தையின் நாட்குறிப்பு

–‘*The Girl Child in Crisis*’ (பக்கம் 18)

## மாணவர்களோடு கருத்துப் பகிர்வு

குழந்தைகளே! மேற்கண்ட 'ஒரு கரு பேசுகிறது' என்ற பகுதியை வாசித்த பின்பு கீழ்க்கண்ட கேள்விகள் எழுகின்றன.

பெண் ! கருவிலேயே கலைக்கப்படுவதைப் பற்றிப் படித்தீர்கள்

பெண் குழந்தை கருவில் மட்டுமல்ல.

பிறந்த பின்னும் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்பதை நீங்கள் அறிந் திருக்கலாம். பெண் குழந்தைகள் வேறு என்னென்ன முறைகளிலெல்லாம் பாகுபடுத்தப் படுகின்றனர்? வன்முறைக்கு உள்ளாக்கப் படுகின்றனர்? என்பதனை நீங்கள் உங்களுக்குத் தெரிந்த வகையில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

முதல் மாணவன் : எங்க ஊர்ல பெண் குழந்தை பிறந்தா கொன்னுடுறாங்கய்யா !

இரண்டாம் மாணவன் : நான் கேள்விப்பட்டிருக்கேன். எங்க ஊர் ஆஸ்பத்திரியில பிறந்த பெண் குழந்தைய அங்கேயே விட்டுட்டுப் போய்ட்டாங்களாம். அதுமட்டுமில்லாம குப்பைத் தொட்டியிலேயுங்கூட சில குழந்தைகள வீசிட்டுப் போயிருக்காங்க.

மூன்றாம் மாணவன் : எங்க வீட்டில, என்ன மட்டும் படிக்க வைக்கிறாங்க. ஆனா என் தங்கச்சிய படிக்க வேண்டாங்கறாங்க ! காரணம் கேட்டா பொம்பளைப் புள்ளைக்குப் படிப்பு எதுக்குன்னு கேக்கறாங்க.

நான்காம் மாணவி : ஆமா டீச்சர், எங்க வீட்ல கூட ஆம்பளைங்க எல்லாம் சாப்பிட்ட பிறகு தான் நானும் எங்கம்மாவும் சாப்பிடணும்னு பாட்டி சொல்லு வாங்க.

ஐந்தாம் மாணவி : டீச்சர் ! எங்கவீட்ல என் அண்ணனை வெளியில விளையாட விடுவாங்க. ஆனால் என்ன மட்டும் விடமாட்டாங்க.

ஆறாம் மாணவன் : டீச்சர் ! நம்ம கிளாஸ்ல படிச்ச கீதா ஏன் ஸ்கூலுக்கு வர்றதில்ல தெரியுமா? அவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க.

ஏழாம் மாணவி : டீச்சர் ! எங்க வீட்ல காலைல எழுந்தவுடனே என்னைப் பாத்திரம் கழுவ, தண்ணீர். பிடிக்கச் சொல்வாங்க! என் அண்ணன மட்டும் படிக்கச் சொல்வாங்க.

மேற்கண்ட விவாதத்தைக் கேட்ட ஆசிரியர் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைக் கரும்பலகையில் வரிசைப்படுத்துகிறார்.

1. கருக்கொலை
2. சிசுக்கொலை
3. கல்வி மறுப்பு
4. ஊட்டச் சத்தின்மை
5. ஆரோக்கிய மறுப்பு
6. குழந்தைத் திருமணம்
7. விளையாட்டு மறுப்பு

ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும், உயிரையும் பறிக்கக்கூடாது.

இந்திய அரசியல் சாசனம் பிரிவு 21

மேற்கண்ட வன்முறைகளில் பெண்குழந்தைகள் இழக்கும் உரிமைகள் யாவை?

1. கருக்கொலை இழக்கும் உரிமைகள்

______________________________

2. சிசுக்கொலை இழக்கும் உரிமைகள்

3. கல்வி மறுப்பு இழக்கும் உரிமைகள்

4. ஊட்டச் சத்தின்மையால் இழக்கும் உரிமைகள்

5. ஆரோக்கிய மறுப்பால் இழக்கும் உரிமைகள்

6. குழந்தைத் திருமணத்தால் இழக்கும் உரிமைகள்

7. விளையாட்டு மறுப்பால் இழக்கும் உரிமைகள்

## 1. பாடக்கேள்விகள்

அ. பெண்குழந்தை பிறந்தால் எங்கே வீசுவதாக இரண்டாம் மாணவன் கூறினான்?

ஆ. நான்காம் மாணவியின் வீட்டில் பெண்கள் எப்போது சாப்பிட வேண்டும்?

இ. படித்துக் கொண்டிருந்த கீதா ஏன் பள்ளிக்கு வரவில்லை?

ஈ. ஏழாம் மாணவி காலையில் எழுந்ததும் செய்ய வேண்டிய வேலைகள் என்ன?

உ. புகழ்பெற்ற பெண்கள் சிலரின் பெயர்களைக் கூறுக.

## 2. சமூக ஆய்வுக் கேள்விகள்

(ஆம், இல்லை, சரி, தவறு என்ற நான்கு பதில்களில் ஏதாவது ஒரு பதிலை எழுதுக.)

அ. ஒரு தாய் தொடர்ந்து இரு பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டால் குடும்பத்தில் உள்ளவர்கள் முகம் சுளிக்கிறார்களா?

ஆ. ஆண் குழந்தை பிறந்தால் தங்களைக் காப்பாற்றுவான் என்று பெற்றோர் நம்புகிறார்கள். இது சரியா? தவறா?

இ. பள்ளியில் படிக்கும்போதே திருமணம் இது பெண்ணுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதா?

ஈ. ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் சேர்ந்து விளையாடலாமா? அது சரியா? தவறா?

உ. ஆணைப் படிக்க வைக்க ஆர்வம், பெண்ணைப் படிக்க வைக்கத் தயக்கம். இதுதான் பல குடும்பங்களின் நிலை சரியா? சிந்திப்பீர்.



## 2. குழந்தைத் தொழிலாளர்கள்

அரும்புகளின் மீது அமிலத்தை ஊற்றலாமா?
வேர்களின் மீது வெந்நீரை ஊற்றலாமா?

இந்தக் கேள்விகள் இரண்டுமே உங்களின் இதயத்தை என்னவோ செய்வதுபோல் இருக்கிறது அல்லவா? ஆனால் இதற்கு நிகரான செயலை நமது சமூகம் எந்தவிதமான சங்கடமும் இன்றித் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டே வருகிறது என்பதைக் கீழ்கண்ட பகுதிகளில் படிக்கலாம்.

### குழந்தைத் தொழிலாளி-1

நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று !

அந்தச் சிறுவனுக்குப் பத்து வயதிருக்கலாம். கணக்குப் பாடம் என்றால் அவனுக்குக் கொள்ளைப் பிரியம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என எல்லா வகைக் கணக்கும் அவனுக்கு அத்துப்படி. ஆனால் குடும்பத்தின் வறுமைக் கணக்கு அவனை திசைமாற்றியது. புத்தகப் பையைத் தூக்கிய கைகளில் பழைய சோத்துக் கூடையை தூக்கினான். படிப்பு அவனைவிட்டு விலகிப் போனது. பள்ளிக்கூடம் தவறிப் போனதிலும் கணக்கு வகுப்பு கிடைக்காமல் போனதிலும் அவன் துயரம் கொண்டான். தீப்பெட்டித் தொழிற்சாலையில் குச்சிகளை எண்ணிப் பெட்டிகளில் அடைக்கின்ற வேலைக்கு அனுப்பப்பட்டான்.

-புதிய காற்று, ஜனவரி 2003

### குழந்தைத் தொழிலாளி-2

குடும்பத் தலைவனான குழந்தை

என் பெயர் ராமன். நான் ஒரு ஹோட்டலில் வேலை பார்க்கிறேன். பரோட்டா, சப்பாத்தியெல்லாம் நன்றாகச் செய்வேன். என் குடும்பத்தின் வறுமைதான் என் சொந்த மாநிலமான பீகாரிலிருந்து டில்லிக்கு வரச் செய்தது. நான் இங்கு வரும்போது ஒன்பது வயது.

என் சின்ன தவறுகளுக்கும் என் முதலாளி என்னை அடிப்பார். காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வேலை செய்கிறேன். எனக்கு இப்போது வயது 13. எனக்கு மாதம் 500 ரூபாய் சம்பளம்.

ஆண்டிற்கு ஒரு முறை அல்லது இருமுறை ஊருக்குச் செல்வேன். எனக்கு இரு சகோதரர்களும் சகோதரிகளும் உண்டு. என் பெற்றோர் விவசாயக் கூலிகள். நான் சம்பாதிப்பதை என் குடும்பத்திற்குத்தான் செலவிடுகிறேன். எனக்கு எழுதவோ, படிக்கவே தெரியாது.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். பள்ளி வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரியாது. வேலை செய்யாமல் பள்ளிக்குப் போன்னு சொல்றவங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது.

நான் பள்ளிக்கூடம் போனால் என் குடும்பத்தை கவனிப்பது யார்?

குழந்தைத் தொழிலாளி-3

### வன்முறையில் வன்முறை

பதினொரு வயசு ஆயிஷா நான்காம் வகுப்போடு வறுமை காரணமாகப் படிப்பை நிறுத்திக் கொண்டாள். வீதியில் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தவளுக்கு 'வீட்டு வேலை' ரூபத்தில் துன்பம் வந்தது. இரண்டு மஞ்சள் பையோடு சென்னைக்கு அழைத்து வரப்பட்டாள். இங்கே வேலைக்கு வந்து ஆறுமாசம்தான் ஆச்சு. வீட்டில் ரொம்பக் கஷ்டம். ரொம்ப நல்லா வச்சு சோறு போடுவாங்க. ஐந்நூறு ரூபா தருவாங்கன்னு சொன்னாங்க. ஆனா அப்படி செய்யல. ரொம்ப அடிச்சாங்க. ரப்பர் பைப்பால விளாசுவாங்க. அப்படியே வீங்கிவிடும். ரத்தமா வரும். மருந்துகூட கிடையாது. துணியிலயே துடைச்சிடுவேன். வலியோட படுத்துத் தூங்குவேன். அப்படித்தான் போனவாரம் புதன் கிழமை (20.11.2002) ரப்பர் பைப்பால் அடிச்சாங்க. கண்ணுமேலேயே அடிச்சதால ரெண்டு கண்ணும் தெரியல. வெளியில ஓடவும் முடியல. ஆசிட்டை எடுத்தாந்து கையில் ஊத்தினாங்க. நெருப்பால சுட்டாங்க. அங்கே இருந்தா செத்துப் போயிடுவேன்னு பயந்து வெளியிலே ஓடிவந்துட்டேன். திரும்பவும் அழைச்சிட்டுப்போய் ரூம்ல அடைச்சிட்டாங்க.

– குமுதம் ரிப்போர்டர் 01.12.2002

நாங்களே
எண்ணிலடங்கா தீக்குச்சிகளைத் தயாரிப்பதும் நாங்களே
எங்கள் நோய் நொடிகள் படைக்கும் வளையல்களால்
புதிய மணப்பெண்களின்
அழகிய சிவந்த மணிக்கட்டினை அலங்கரிப்பதும் நாங்களே!
சிலிக்கான் துகள்களை எங்கள் நுரையீரல் முழுதும் நிரப்பி
பொறுக்க முடியா வேதனை மரணங்களுக்கு ஆளாக்கும்
உங்கள் சுரங்கங்களில் வேலை செய்யும் குழந்தைகளும் நாங்களே!
ஒய்யார வீடுகளில் குடியிருக்கும்
மென்மை, அழகு, தூய்மை படைத்த உங்கள் பாதங்கள் பதியும்
கம்பளங்களையெல்லாம்
எங்கள் குழந்தைப்பருவ இழைகளால் நெய்தவர்கள் நாங்களே

– வர்தனாசிங், கால் தடங்கல்

## சிந்திப்போம்

### கேள்விகள்

அ. கணக்கில் ஆர்வம் உள்ள சிறுவனுக்கு (குழந்தைத் தொழிலாளர்-1) தீப்பெட்டித் தொழிற் சாலையில் எதுவரை எண்ணுவதற்கு வாய்ப்பு கிடைத்தது?

______________________________

ஆ. பள்ளிக்குச் செல்லப்பிடிக்கவில்லை என்று சொல்லும் சிறுவன் யார்? அவன் எங்கு வேலை பார்க்கிறான்? (குழந்தைத் தொழிலாளர் -5)

______________________________

இ. ஆயிஷா (குழந்தைத் தொழிலாளர் 6) மஞ்சள் பையோடு வீட்டு வேலை செய்ய வந்தது எந்த ஊருக்கு?

______________________________

### சமூக ஆய்வுக் கேள்விகள்

ஆசிரியர்க்குக் குறிப்பு:

மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து பின்வரும் கேள்விகளை விவாதித்துப் பதில் எழுத அவர்களைப் பழக்கிடுங்கள்.

1. குழந்தைத் தொழிலாளிகள் செய்யும் பின்வரும் வேலைகளைக் கவனிக்க.

   அ. தீக்குச்சி அடுக்கும் வேலை  ஆ. பீடி சுற்றும் வேலை

   இ. ஹோட்டல் வேலை  ஈ. வீட்டு வேலை

   உ. செருப்பு தைக்கும் வேலை

2. ராமன், ஆயிஷா போன்ற குழந்தைத் தொழிலாளிகள் அடிபடுவதை படிக்கும் போது உங்களுக்கு என்ன மாதிரியான உணர்வுகள் ஏற்படுகின்றன?

   ______________________________

3. தொழிலாளியாக மாறிய குழந்தைகள் இழந்தவை எவை? எவை?

   அ. படிப்பு  ஆ. ....................

   இ. ....................  ஈ. ....................

   உ. ....................  ஊ. ....................

4. பள்ளிப்படிப்பை இழந்து தொழிலாளிகளாக மாறிய குழந்தைகள் மீண்டும் பள்ளிக்குத் திரும்ப வேண்டும். இதில் யார் யாருக்குக் கடமை இருக்கிறது?

   அ. அரசாங்கம்  ஆ. ...................

   இ. ....................  ஈ. ....................

   உ. ....................  ஊ. ....................

### 3. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக்கு நீங்கள் என்ன செய்யலாம்?

1. 18 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, தரமான, கட்டாயக் கல்வி கிடைத்திட உறுதி செய்ய வேண்டும்.
2. உங்கள் பள்ளியில், பகுதிகளில் குழந்தைத் தொழிலாளர் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கல்.
3. குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய தகவல் கிடைத்தால் உடனடியாக 1098 என்ற தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.
4. நீங்களோ உங்கள் குடும்பங்களிலோ குழந்தைகளை வேலைக்கு அனுப்பினால் அதனை தடுத்து பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.
5. குடும்பத்தில் பெற்றோர் வேலை நிமித்தமாக வெளியூர் செல்ல நேர்ந்தால் குழந்தைகளை மாணவர் தங்கும் விடுதியில் தங்கி பள்ளியில் பயில சொல்லலாம்.



## 3. கடத்தப்படும் குழந்தைகள்

குழந்தைகளே !

கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளை நிதானமாக வாசித்துப் பாருங்கள்.

### 1. விற்கப்படும் குழந்தைகள்

அ) பெத்த குழந்தையை இங்கே பகிரங்கமாகவே விக்கிறாங்க. ரெண்டு மாசத்துக்கு முன்னாடி இங்கே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த பெண், போற வர்றவங்ககிட்டயெல்லாம் விலை பேசிக்கிட்டிருந்தார். கடைசில, பக்கத்திலுள்ள மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு ஆயிரம் ரூபாய்க்கு வித்துட்டுப் போனார். பேரமெல்லாம் எங்க கண்முன்னால்தான் நடந்தது. – நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் ஒரு ஊழியர் இப்படிச் சொன்னார்.

– 'ஜுனியர் விகடன்', 25.12.02

ஆ) ஒரிசாவில் தியோகர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் வசித்து வருபவர் பிஜய். இவரது மனைவி கனகாவிற்கு எட்டு மாதங்களுக்கு முன் அழகிய பெண் குழந்தை பிறந்தது. இக்குழந்தை பிறப்பிற்குப் பின்னர் கனகாவிற்கு உடல்நிலை பாதிப்படைந்தது. மருத்துவச் செலவுகள் அதிகமானதால் அதனைச் சமாளிக்க முடியாத நிலையிலிருந்த பிஜய் தனது பெண் குழந்தையை விற்றுவிட தீர்மானித்தார். இந்நிலையில் குழந்தையில்லா தம்பதி ஒன்றிற்கு பிஜயின் பெண் குழந்தை ரூபாய் 800 க்கு விற்கப்பட்டது.

– தினமலர் 26.03.2006

## 2. பிச்சை எடுப்பதற்காகக் கடத்தப்படும் குழந்தைகள்

நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும் போது சுரேசும் லட்சுமியும் எங்கிட்ட வந்து நீ சென்னைக்கு வர்றியா? உனக்கு துணி, கம்மல் எல்லாம் வாங்கித் தர்றேன்னு ஆசைகாட்டினாங்க. நானும் ஆசைப்பட்டு அவங்கக்கூட சென்னைக்குப் போனேன்.

அங்க போன பிறகுதான் என்னை ஏமாத்திட்டாங்கன்னு தெரிஞ்சது. பகல் பூராவும் என்னைத் தெருவுல பிச்சை எடுக்கச் சொன்னாங்க. நானும் காலையிலிருந்து சாயங்காலம் வரைக்கும் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவிலேயே பிச்சை எடுப்பேன்.

அந்தக் காசையெல்லாம் எங்கிட்டேயிருந்து பிடுங்கிக்குவாங்க. காசு கொஞ்சமா இருந்தா, ஏன் நிறையப் பிச்சை எடுக்கலைன்னு கொள்ளிக் கட்டையால என் உடம்புல சுடுவாங்க.

நான் அழுதுக்கிட்டே இருப்பேன்.

சில நேரம் வெயில்ல வெட்ட வெளியில முட்டி போடச் சொல்லுவாங்க . ."

உடம்பு முழுக்க இருக்கும் தீக்காயத் தழும்புகளைக் காட்டிக் கண் கலங்குகிறாள் சூர்யகலா.

– 'குமுதம் ரிப்போர்ட்டர்'

## 3. வணிகப் பொருளாகும் குழந்தைகள்

பெங்களூரில் அமைந்துள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் குழந்தைகள் விற்பனை நடைபெறுகிறதாம்.

குழந்தைப் பேறு இல்லாத தம்பதியினருக்கு ரூ. 80,000 முதல் ரூ.2 லட்சம் வரை பணம் பெற்றுக் கொண்டு குழந்தைகளை விற்று விடுகின்றனர்.

குழந்தை விற்பனைக்காக சென்னை, மங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து குழந்தைகள் கொண்டு வரப்படுகின்றன. இந்த ஊர்களில் உள்ள ஏழைத் தாய்மார்களிடமிருந்து குழந்தைகள் குறைந்த விலைக்கு வாங்கப்படுகின்றன. இப்படிக் கொண்டு செல்லும் குழந்தைகளை, தரத்துக்கு ஏற்ப விலை நிர்ணயித்து விற்கிறார்கள்.

பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளுக்கு 80 சதவீதம் விலை அதிகம்.

– மாலை முரசு 30.7.2003

இத்தகைய நிகழ்வுகள் உங்கள் உள்ளத்தில் என்னென்ன உணர்வுகளை உருவாக்கியிருக்கும் என்பதனை உணர முடிகிறது.

ஏற்கனவே கருவிலேயே அழிக்கப்படும் குழந்தைகளைப் பார்த்தீர்கள்.

சிசுவாக வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட சூழ்நிலையைப் பார்த்தீர்கள்.

இப்பாடத்தில் 10 மாதம் சுமந்து பெற்ற குழந்தைகளை அவர் தம் பெற்றோரே விற்பதையும், லாபம் கருதி குழந்தைகளைக் கடத்துகின்ற அவலத்தையும் கண்டீர்கள்!

ஏன் கடத்தப்படுகின்றனர்?

எதற்கு விற்கப்படுகின்றனர்?

| | | |
|---|---|---|
| கொத்தடிமைக்கு | வீட்டு வேலைக்கு | விவசாயத் தொழிலுக்கு |
| கட்டடத் தொழிலுக்கு | பிச்சையெடுப்பதற்கு | போதைப் பொருள் கடத்தலுக்கு |

## சிந்திப்போம்

### 1. கேள்விகள்

i குழந்தையை பகிரங்கமாக விலைபேசி விற்ற சம்பவம் எந்த மாநிலத்தில் நடந்தது?

______________________________

ii பிஜய் தன் குழந்தையை விற்றுவிடத் தீர்மானித்தது எதனால்?

______________________________

iii ஆசை காட்டிச் சென்னைக்கு அழைத்துச் சென்ற சூர்யகலாவை எதற்குப் பயன்படுத்தினார்கள்?

______________________________

iv பெங்களூர் தனியார் மருத்துவமனையில் பெண் குழந்தையின் விலை என்ன?

______________________________

2. கற்பனை நீதிமன்றம் அமைத்து வழக்கு நடத்துக. வாதாடுக. தீர்ப்பு வழங்குக.

சூர்யகலா, சூர்யகலாவின் பெற்றோர், ஆசைகாட்டிச் சென்னைக்கு அழைத்து வந்தோர், அவளைத் தீயால் சுட்டவர்கள் அனைவரையும் நீதிமன்றம் போல் விவாதித்து வகுப்பறையில் ஒரு தீர்ப்பு வழங்குக.

# 4. குழந்தையின் கல்வியுரிமை



கல்வி பெற்ற மனிதன்தான் முழுமையான மனிதன் என்கிறோம். கல்வி தான் அறியாமையைப் போக்கும் மருந்து என்கிறோம். கல்விதான் செல்வத்துள் செல்வம் என்கிறோம். இத்தகைய சிறப்புடைய கல்வியைச் சமூகத்தில் எல்லோரும் பெற்றிருக்கிறார்களா? எல்லோரும் கல்வி பெறுவது நம்முடைய அடிப்படை உரிமை இல்லையா?

இவ்விவாதத்தை இங்கு குழந்தைகளே விவாதிப்பது பொருத்தமாக இருக்கும்.

**மாணவி கீதா**

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, கல்வி வளர்ச்சியில் மிகப் பெரிய அளவில் வெற்றி கண்டிருக்கிறது என்பது உண்மை. பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் அதிகரித்துள்ளன. தொழிற்கல்வி நிறுவனங்கள் வளர்ந்துள்ளன. இந்திய அரசியல் சாசனம், இலவச, கட்டாயக் கல்வியை 6 முதல் 14 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் அளிக்கச் சொல்கிறது குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009.இவை யெல்லாம் உண்மைதான்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மத்திய மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைவருக்கும் கல்வி இயக்கத்தால் (சர்வ சிக்ஷா அபியான்) பெருமளவிலான குழந்தைகள் பள்ளியை அடைந்திருக்கின்றனர் என்பதும் உண்மை. ஆனாலும் மாற்றம் முழுமையாக இல்லை.

இந்நிலையில் கல்வி வியாபாரம் ஆக்கப்படுவதையும் பார்க்கிறோம். ஏழைக்கு வசதியற்ற பள்ளிகள், பணக்காரர்களுக்கு எல்லா வசதிகளுமுடைய பள்ளிகள். இன்னும் கல்வி ஏன் அனைவர்க்கும் உரித்தானதாக இல்லை. இந்தக் கல்விச் சூழல் மக்களின் அடிப்படைக் கல்விக்கான உரிமையை மறுக்கவில்லையா?

## மாணவன் அழகன்

அருமை நண்பர்களே, மாணவி கீதா அவர்கள் கல்வி பெறுகின்ற உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். கல்வி மறுக்கப்படுகின்ற நிலைமை பள்ளிக்கூடங்கள் இல்லாமையால் மட்டும் இல்லை. இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டாலும் கல்வியுரிமை மீறல்தான். அண்மையில் நான் ஒரு பத்திரிக்கையில் படித்த நிகழ்வை உங்களிடம் படித்துக் காட்டுகிறேன்.

“அந்தப் பள்ளி 50 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. கூரை ஓடுகள் காற்றில் பறக்கின்றன. ஓடுகள் மாற்றப்படவில்லை. கம்புகளும் இற்றுப்போய் விட்டதால் போர்டில் எழுதிப் போடுவதையே ஆசிரியர்கள் மறந்து விட்டார்களாம்.

எல்லாவற்றையும் விடக் கொடுமை என்னவென்றால் ஓட்டில் பாம்புத்தோல் தொங்குகிறதாம். மழைக்காலம் தொடங்கிடுச்சுன்னா மையப் பகுதியில்தான் ஒழுகாது என்பதனால் மொத்தமாக ஆசிரியைகள் அங்கே போய் இருந்து விடுவார்கள். பலமாக மழை பெய்தால் உடனே லீவு விட்டுவிடுவார்களாம். இப்பள்ளியில் எழுபது பிள்ளைகளுக்கு 2 ஆசிரியைகள். இந்தப் பள்ளி மட்டும் இல்லாவிட்டால் இப்பகுதியில் வாழும் தலித் மக்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க மாட்டார்களாம்.

– ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ – 12.12.2002

## மாணவன் அறிவன்

நம் நாட்டில் நிறைய ஊர்களில் பள்ளிக்கூடங்கள் இல்லை என்பதும் உண்மை. பள்ளிக்கூடங்களில் போதிய வசதி இல்லை என்பதும் உண்மை.

இங்கு நம் கேள்வி இருக்கிற கல்விக்கூடங்களில் கற்பிக்கப்படும் கல்வி தரமானதாக இருக்கிறதா?

“ஐந்தாம் பகுப்பு வரை படித்து முடித்த எத்தனை குழந்தைகளுக்கு தாய் மொழியில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரியும்?

சாதாரணக் கூட்டல், கழித்தல் கணக்குக்கூட பல மாணவர்களுக்குத் தெரியவில்லை.

தரமான கல்விக்கு அடிப்படைத் தேவைகளாகிய சோதனைக்கூடங்களும், உபகரணங்களும் எத்தனைப் பள்ளிகளில் இருக்கின்றன?

பல பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கைக் கேற்ப ஆசிரியர்கள் இல்லை. நம் நாட்டில் இன்னும் ஓராசிரியர் பள்ளிகள் உள்ளன; ஈராசிரியர் பள்ளிகளும் உள்ளன. அப்படியே தேவையான ஆசிரியர்கள் இருந்தாலும் எத்தனை ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஆசிரியர்களாக உள்ளனர்? இந்தப் பள்ளிகளில் மாணவர்களை வளர்க்கும் தரமான கல்வியை எப்படி எதிர்பார்க்க முடியும்.

அப்போது கூட்டத்தில் இருந்த சித்ரா எனும் மாணவி தான் ஒரு கருத்தை சொல்ல விரும்புவதாய் தலைவரிடம் அனுமதி கேட்கிறாா். தலைவரும் அனுமதிக்கவே சித்ரா பேசுகிறாா்.

ஆசிரியர் அடிப்பதால் பயந்து பள்ளியைவிட்டு நின்றுவிடும் குழந்தைகள் கூட கல்வி உரிமை பாதிக்கப்பட்டவர்கள்தான்.

இதற்கு ஆதாரமாக ஒரு பத்திரிக்கை செய்தியைச் சொல்கிறேன் கேளுங்க.

## எட்டு வயது ஜீனத் குமார் சொல்கிறான் . . .

நான் படிக்கும் பள்ளியில் கடந்த 19–ந் தேதி ஆங்கிலத் தேர்வு நடைபெற்றது. வினாத்தாளை படித்து பார்த்துவிட்டு விடை எழுதிக் கொண்டிருந்தேன். ஒரு சில கேள்விக்கு எனக்கு பதில் தெரியவில்லை. எனவே பதில் எழுதுவதற்காக யோசித்தேன். அப்போது ஆசிரியை எனது அருகில் வந்து ஏன் யோசிக்கிறாய்? என்று

மற்றொரு மாணவன் தேர்வு எழுதுவதற்காக பயன்படுத்தும் அட்டையை எடுத்து (பேடு) எனது தலையில் ஓங்கி அடித்தார்.

இதனால் ரத்தம் பீறிட்டு அடித்தது. என்னால் வலியைத் தாங்க முடியவில்லை.

நான் பரீட்சை எழுதிய விடைத்தாள், மற்றும் எனது சட்டை முழுவதும் ரத்தமானது. உடனே வேறு பேப்பரை கொண்டு வந்து என்னை தேர்வு எழுதச் சொன்னார்கள். நான் ஒரு கையினால் தலையில் ரத்தம் வருவதை பொத்திக்கொண்டு மறுகையினால் தேர்வை எழுதினேன்.

மேலும் மிஸ் அடித்ததாக வீட்டில் சொல்லக்கூடாது. அப்படி சொன்னால் மீண்டும் உன்னை அடிப்பேன். மற்ற மாணவர்கள் தள்ளி விட்டதில் தலையில் காயம் பட்டதாக சொல்ல வேண்டும் என்று சொல்லச் சொன்னார்கள். இவ்வாறு மாணவன் ஜீனத் குமார் அழுதுகொண்டே கூறினான். மாணவன் சொல்வதைக் கேட்ட அவனது பெற்றோர்களும் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

– தினத்தந்தி, 25.03.08

சில பள்ளிகளில் அடிக்கிறதோட நிறுத்தாமக் கடுமையாகத் திட்டுறாங்க. குழந்தைகளோட பிரச்சனைகளை நேரடியாகக் கேட்டு வழிகாட்டுறதுக்கு பதிலா கேவலமாகத் திட்டுறது மற்றும் அவமானப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் தினந்தோறும் நடைபெற்றுதான் வருகின்றன.

இது சரியா? விவாதிப்போம்

## பகிர்ந்து கொள்வோம்

1. நீ பள்ளிக்கு வருவதில் சந்தோசப்படுகிறாயா? ஏன்? காரணங்களைத் தருக.

   1. ____________________________

   2. ____________________________

2. உங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறதா? உண்டு/இல்லை ✓ செய்யவும்

   அ தனித்தனி வகுப்பறைகள் உள்ளனவா?

   ஆ. எல்லா வகுப்பிற்கும் ஆசிரியர்கள் இருக்கின்றனரா?

   இ. கழிப்பறை இருக்கிறதா?

   ஈ. விளையாட்டு மைதானம் இருக்கிறதா?

   உ. கரும்பலகை இருக்கிறதா?

   ஊ. முதலுதவி அளிக்கப்படுகிறதா?

   எ. சத்துணவு வழங்கப்படுகிறதா?

   ஏ. ஓய்வறை உள்ளதா?

இல்லையெனில்

அ. உன் ஊருக்கும் பள்ளிக்கும் எவ்வளவு தூரம்?

____________________________

ஆ. பள்ளிக்கு நீ நடந்து செல்கிறாயா அல்லது பேருந்தில் செல்கிறாயா?

____________________________

இ. வீட்டிற்கு சென்ற பிறகு பாடம் படிப்பதற்கு நேரம் கிடைக்கிறதா?

________________________________________

3. உங்கள் பள்ளியில் ஆசிரியர்கள் உங்களை அடிக்கிறாரா? ✓ செய்யவும்

ஆம் / இல்லை

அ. வகுப்பில் அடிக்கப்படுதால் அந்தக் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?

1. ________________________________________

2. ________________________________________

4. உன் பள்ளியில் உன்னை விளையாட அனுமதிக்கின்றனரா? ஆம் எனில் எப்போது?

________________________________________

5. உங்கள் பள்ளிக்கூடத்தில் நடத்தப்படும் தேர்வுகள் உன்னைப் பயமுறுத்துகிறதா?

ஆம் எனில் எப்படி?

________________________________________

# 5. குழந்தைத் திருமணம்






குழந்தைகளே!

இந்த அத்தியாயத்தில் குழந்தை திருமணம் பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அதனை எவ்வாறு தடுக்கலாம் என்றும் பார்க்க போகிறோம். முதலில் குழந்தை திருமணம் என்றால் என்ன என்று பார்ப்போம். அதற்கு முன்பாக சில கேள்விகளை உங்கள் முன் வைக்கிறேன். அவை...

- எந்த வயதிற்குள் திருமணம் நடந்தால் அது குழந்தைத் திருமணம்?

- உங்கள் ஊரில் குழந்தைத் திருமணம் நடக்கிறதா?
- குழந்தை திருமணத்தால் எம்மாதிரியான பாதிப்புகள் ஏற்படும் என்று உனக்கு தெரியுமா?

நம் நாட்டில் சட்டப்படியான திருமண வயது என்பது பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 21 வயதும் உள்ளது. மேற்கண்ட வயதிற்கு குறைவான வயதில் திருமணம் செய்தால் அது குழந்தை திருமணம்.

18 வயதிற்குட்பட்ட ஒரு பெண் குழந்தை வளர்ந்த அல்லது முதிர்ந்த ஆண் ஒருவனுக்குத் திருமணம் செய்வதைக் குறிக்கும்.

குழந்தைத் திருமணம் என்பது இரு சிறுவர்களின் பெற்றோர் (ஒரு சிறுமி மற்றும் ஒரு சிறுவன்) வருங்காலத்தில், அச்சிறுவனுக்கும் சிறுமிக்கும் நடக்க இருக்கும் திருமணத்தைக் குறித்த உடன்படிக்கை செய்துக் கொள்வது.

## குழந்தைத் திருமணம் இந்தியாவில் மட்டும்தானா?

குழந்தைத் திருமணம் இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பல நாடுகளில் நடைபெறுகிறது. இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட ஆசிய ஆப்ரிக்கா நாடுகளில் குழந்தைத் திருமணங்கள் அதிகளவில் நடைபெறுகின்றன. ஐ.நா சபையின் குழந்தைகள் அமைப்பின் கூற்றுப்படி உலகெங்கும் நடக்கும் குழந்தைத் திருமணங்களில் 40 சதவீதம் இந்தியாவில்தான் நடக்கிறதாக கூறுகிறது.

## குழந்தை திருமணத்தால் என்ன பாதிப்பு ஏற்படுகிறது?

சிறுவயது திருமணத்தால் பெண்களின் உடல் ஆரோக்கியம் முக்கியமாக பாதிக்கப்படுகிறது.

குடும்பத்திலும் ஊரிலும் உரிய மரியாதை இல்லாமை, வீட்டில் அதிகாரம் இன்மை, அறிவு முதிர்ச்சியின்மை போன்ற காரணங்களால் வீட்டில் அதிக வன்முறை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

சிறு வயது திருமணத்தால் சிறுமியர்களுக்கு கல்வியும் பொருத்தமான வேலைவாய்ப்பும் மறுக்கப்படுகிறது. இதனால் அவர்கள் தொடர்ந்து வறுமையிலேயே வாட வேண்டிய சூழல் உருவாகிறது.

குழந்தைத் திருமணம் தொடர்ந்து மாறாத, பாலினச் சமமின்மையையும், கூடவே நோய் மற்றும் வறுமையினையும் தருகிறது.

சிறு வயதிலேயே முழு உடல் வளர்ச்சி பெறாத நிலையில், பெண்ணுக்கு நடைபெறும் திருமணத்தால், தாயும் சேயும் மகப்பேறின் போது இறக்கும் சதவீதம் மிக அதிகமாகவே உள்ளது.

குழந்தைகளே குழந்தைத் திருமணத்திற்கான காரணங்களாக கீழ்க்கண்டவைகள் கூறப்படுகின்றன.

- வறுமை
- போதிய கல்வி அறிவு இல்லாமை
- பெண் குழந்தைகளுக்குச் சமுதாயத்தில் உயர்நிலை தராமை
- பெண் குழந்தைகளைப் பொருளாதார சுமையாக நினைத்தல்.
- பெண் குழந்தைகளின் பாதுகாப்பு

சமுதாய பழக்க வழக்கங்கள் என பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

குழந்தைத் திருமணம் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவங்கள் சிலவற்றை பார்ப்போம்.

### பள்ளித் தோழிகள் தடுத்து நிறுத்திய குழந்தைத் திருமணம்...

திருவாரூர் மாவட்டத்தில் 15 வயது சிறுமிக்கு நடைபெற இருந்த குழந்தைத் திருமணத்தை பள்ளித் தோழிகள் அளித்த தகவலின் அடிப்படையில் தடுத்து நிறுத்தப்பட்டது. நேபாளத்தைச் சேர்ந்த கூர்கா ஒருவர் தனது குடும்பத்துடன் திருவாரூர் அருகே வசித்து வருகிறார். அவரது மகள் பள்ளங்கோவில் அரசுப் பள்ளியில் கடந்தாண்டு 8-ம் வகுப்பு படித்து வந்தார். வழக்கம் போல் பள்ளி திறக்கப்பட்டன. ஆனால் குறிப்பிட்ட அச்சிறுமி, இந்த ஆண்டு பள்ளிக்கு வரவில்லை. 15 வயதே ஆன இச்சிறுமிக்கு திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர் திட்டமிட்டுள்ளதாக பள்ளியில் படித்த தோழிகளுக்கு தகவல் வந்தது. தங்களுக்கு கிடைத்த தகவலை கிராம மக்களுக்கு சிறுமிகள் தெரிவித்து அவர்கள் மூலமாக சமூக நலத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு அடுத்த நாள் நடைபெற இருந்த திருமணத்தை தடுத்து நிறுத்தினர்.

- tamil.oneindia.com - 24.06.2016

### ஒன்பதாம் வகுப்பு மாணவியின் திருமணம் தடுத்து நிறுத்தம்

கோவை மாவட்டம் பல்லடம் அருகே உள்ள ஒரு கிராமத்தில் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கும் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவிக்கும் திருமணம் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். குழந்தைத் திருமணம் குறித்த தகவல் மாவட்ட சமூக நலத் துறைக்கு கிடைக்கவே நேரடியாக சென்று பெற்றோருடன் பேசி திருமணத்தை நிறுத்தி வைத்தனர். மேலும் உரிய வயது வரும் வரை திருமணம் செய்ய மாட்டோம் என்று எழுத்துப்பூர்வமாக உறுதியளித்தனர்.

- தமிழ் இந்து, 27.03.2016

### குழந்தைத் திருமணம் தடுப்பு ( திருத்த ) சட்டம்-2006இன்படி...

குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டத் திருத்தம் 2006இன்படி திருமணம் நடைபெறும் பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதும் இருக்க வேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் திருமணத்தை தடுத்து நிறுத்த அரசுக்கு உரிமை இருக்கு. இச்சட்டத்தின்படி திருமணத்தை ஏற்பாடு செய்தவர்கள், 21 வயது பூர்த்தியான மாப்பிள்ளையாக இருந்தால் அவர் மீதும், கல்யாணத்தை நடத்தி வைப்பவர்கள், கல்யாணத்தில் பார்வையாளர்களாகப் பங்கு பெற்றவர்கள் என அனைவரின் மீதும் வழக்கு பதிவு செய்யலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் இரண்டு வருட சிறை தண்டனையும் 1 இலட்ச ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

### உங்களுக்கு தெரியுமா?

நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் கடந்த 2016 ஜூன் மாத நிலவரப்படி கடந்த இரண்டு மாதத்தில் மட்டும் 17 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் மட்டும் சைல்டு லைன் அமைப்பின் மூலம் 123 குழந்தைத் திருமணங்கள் நிறுத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் 73 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 185 குழந்தைத் திருமணம் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 2015 ஆம் ஆண்டு மட்டும் 61 குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 378 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- தமிழ் இந்து நாளேடு-2016

**குழந்தைத் திருமணங்களை தடுக்க யாரை தொடர்பு கொள்ளலாம்?**

**1098 - சைல்டு லைன்**

**பயிற்சி**

### 1. குழு செயல்பாடு

1. வகுப்பில் குழந்தைகள் அனைவரும் இணைந்து குழந்தைத் திருமணத்தின் பாதிப்புகள் குறித்து நாடகமாக நடித்து காட்டுக.

### 2. கிராம ஆய்வு-குழு செயல்பாடு

குழந்தைகள் அனைவரும் தங்கள் வீடு மற்றும் அருகில் உள்ள இரண்டு வீடுகளில் எந்த வயதில் திருமணம் நடந்தது என்று கேட்டு வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

3. குழந்தைத் திருமணம் பற்றிய பத்திரிகை செய்திகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

4. குழந்தைத் திருமணத்தால் இழக்கும் உரிமைகள் என்னென்ன?

## 6. குடும்ப வன்முறைகள்

குழந்தைகளே!

குடும்பம் என்றால் என்ன?

குடும்பம் என்பது உலகெங்கிலும் சமூகத்தின் அடிப்படை அலகாக இருந்து வருகிறது. கணவன் மனைவி குழந்தைகள் மட்டும் சேர்ந்து ஒரு வீட்டில் வாழ்ந்தால் அது தனிக் குடும்பம் என்றும் அவர்களுடன் கணவன் அல்லது மனைவியின் தாய் தந்தையர் உடனிருந்தால் அது கூட்டுக் குடும்பம் என்றும் அழைக்கப்படுகிறது. இவர்கள் தனித் தனியாக வசித்தால் கூட குடும்பம் என்பது பெற்றோர் மற்றும் நெருங்கிய உற்றாரோடு இணைத்தே புரிந்து கொள்ளப்படுகிறது.

இதில் இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு வரை கணவன் மட்டுமே வெளியில் சென்று வேலை பார்த்து பொருளீட்டி மனைவி மற்றும் குழந்தைகளை காப்பாற்றும் முறை இருந்து வந்தது. ஆனால் இன்றைய நாள்களில் மனைவியும் பொருளீட்டி குடும்பத்தை இணைந்து நடத்தும் முறை வந்திருக்கிறது. எனினும் இரண்டு வகைக் குடும்பங்களும் கலந்தே காணப்படுகின்றன.

இவை தவிர தனியாகப் பிரிந்த தாயுடனோ தந்தையுனோ குழந்தைகள் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய குடும்பத்தை ஒற்றை பெற்றோர் குடும்பம் என்று அழைக்கின்றனர்.

அதே போல் மகனும் மகளும் தங்களுக்கான குடும்பங்களை அமைத்து சென்ற பின் முதியவரான தாய் தந்தையர் மட்டும் தனித்து வாழும் குடும்பங்களும் நிலவுகின்றன.

மேற்காட்டிய இந்த குடும்ப அமைப்புக்குள் மனிதர்கள் ஒருவரையொருவர் சார்ந்தும் நம்பியும் வாழ்ந்து வருகிறார்கள்.

**குடும்ப வன்முறை என்றால் என்ன?**

இந்த குடும்பத்தில் பிற உறுப்பினர்களை பொருளாதார ரீதியாக அல்லது சமூக ரீதியாக அல்லது உடல்நிலை காரணமாக பிறரை சார்ந்து அல்லது நம்பி வாழ்கின்ற நிலையில் உள்ள ஒருவரை அக்குடும்பத்தின் பிற உறுப்பினர்கள் துன்பத்துக்காளாக்குவதையே குடும்ப வன்முறை என்று சொல்கிறோம். குழந்தைகள் மீதான வன்முறையும் இதில் அடங்கும்.

## குடும்ப வன்முறை தடுப்பு:

குடும்ப வன்முறையை நாகரீக சமுதாயம் இழிவானதாகக் கருதுகிறது. மேலும் சர்வதேச மன்றங்கள் ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் இதனைத் தடுக்க போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கிறது.

அதன் அடிப்படையில் உலகில் பல்வேறு நாடுகளும் சட்டங்கள் வாயிலாகவும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன் வாயிலாகவும் இதனைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.



## குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் 2005

நமது நாட்டிலும் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் 2005-ல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி குடும்ப வன்முறை சட்டப்படி தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அதற்கு முன்பு ஒரு கணவன் மனைவியை அடித்தல் அது கணவன் மனைவி விசயம் ஒரு கணவனுக்கு மனைவியை அடிக்க உரிமை உண்டு என்பது போன்ற கருத்துக்கள் காவல் துறையினராலேயே கூட பேசப்பட்டு வந்த நிலை இப்போது மாற்றப்பட்டுள்ளது.

## எவையெல்லாம் குடும்ப வன்முறையாகக் கருதப்படுகின்றன?

உடல்ரீதியாகக்காயப்படுத்துதல், அவமானப்படுத்திப் பேசுதல், உணவு, உடை, உறைவிடம் தராமல் அல்லலுறச் செய்தல், பாலியல் ரீதியாகத் துன்பப்படுத்துதல் இவையெல்லாம் குடும்ப வன்முறைகளாகக் கருதப்படும்.

## குடும்ப வன்முறைகளுக்கு ஆளானோருக்கு சட்டம் தரும் பாதுகாப்புகள் எவை:

குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டோர் காவல்துறையின் உதவியை நாடலாம். புகார் அளிக்கலாம். அதன்பின் அதே வீட்டில் பாதுகாப்புடன் வாழ்வதற்கு வழிவகை செய்து தருமாறு கேட்கலாம்.

அடிபட்டிருந்தால் மருத்துவ உதவி கேட்கலாம்.

அந்த வீட்டில் இருக்க முடியாத பட்சத்தில் பாதுகாப்பிற்காக தங்கும் இல்லங்களில் சேர்த்து விடச் சொல்லி கேட்கலாம்.

## வினாக்கள்:

1. நீ பார்த்த வீடுகளில் குடும்ப வன்முறை இருக்கிறதா?
2. உன் பெற்றோரிடம் ஏன் குடும்ப வன்முறைக்கான காரணங்களில் ஏதேனும் ஒன்றினை கேட்டு வா.
3. ஏன் குடும்பத்தில் வன்முறை ஒழிய வேண்டும் என நீ விரும்புகிறாய் என்பதனை கவிதை அல்லது கட்டுரை அல்லது ஓர் ஓவியம் மூலமாக சொல்ல முயற்சி செய்.

# 7.இணைய குற்றம்

இணையதள குற்றத்தை அறிந்து கொள்வதற்கு முன்பாக இணையதளம் என்றால் என்ன என்பதை தெரிந்து கொள்வோம். இணையதளம் என்பது நாம் வலைப்பின்னல் மூலமாக ஒருவரைத் தொடர்பு கொள்ளவோ, இணையதளங்களை இணைக்கவோ, தகவல்களை சேமித்து வைக்கவோ மற்றும் திரைப்படங்கள், பாடல்கள் காணவோ மற்றும் விளையாட்டுக்களை விளையாடவோ உபயோகப்படுத்துகிறோம். இதற்கு நாம் கணிப்பொறி, அலைபேசி மற்றும் மின்னணு பொருள்களை உபயோகிக்கிறோம்.




**ஏன் இணையதளத்தை மிகச் சிறந்த கண்டுபிடிப்பு என்கிறோம்?.**

- கற்பனை செய்யக்கூடிய எந்த ஒரு விசயத்திற்கும் தகவல்கள் கிடைக்கும்
- சக்தி மிக்க தேடல் எந்திரங்கள்
- நூலகங்களில் சென்று ஆராய்ச்சி செய்வது போல் வீட்டிலிருந்தே உங்களது ஆராய்ச்சியைத் தொடலாம்.
- வெவ்வேறு படிநிலைகளில் உள்ள ஆய்வுகள் குறித்த தகவல்களும், குழந்தைகள் உபயோகிக்கக் கூடிய ஆய்வுக் கட்டுரைகளும் கிடைக்கும்.
- எந்த ஒரு தலைப்பிலும் தமது எண்ணங்களை/ கருத்துக்களை ஒருவர் விவாதிக்க முடியும். பரந்த அளவில் கருத்துக்களைப் பெற முடியும். நம்மைப்போல ஒத்த விருப்பம் உள்ள நண்பர்களை கண்டறிய முடியும்.
- உலகத்தின் எந்த மூலைக்கும் இலவசமாக மின்னஞ்சல் செய்யும் வசதி.

- கணிப்பொறி மூலமாக அல்லது அலைபேசி மூலமாக ஸ்கைப் எனப்படும் தொடர்பு தளத்தை உபயோகித்து உலகின் எந்த மூலையில் இருப்பவரிடமும் இலவசமாக பேசலாம். இதன் மூலமாக காணொளி மாநாட்டை உலகின் வெவ்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் நடத்திக் கொள்ள முடியும்
- தோழமை மற்றும் காதல் ஆகிய தொடர்புகளை ஒத்த கருத்துள்ளவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது.
- நமது கேள்விகளுக்கு விடையளிக்கும் இணையதள வசதிகள்
- உடனடியாக உலகமெங்கும் நடக்கும் செய்திகளை தெரிந்து கொள்ள வாய்ப்பு. செய்திகள் குறித்த விமர்சனங்களை தெரிவிக்கவும் வாய்ப்பு.

## இணையதள குற்றம் என்றால் என்ன?

கணிப்பொறி, இணையதள வாயிலாக நடைபெறும் குற்றங்களை இணையதள குற்றங்கள் என்று அழைக்கிறோம்.

ஒரு கணிப்பொறியிலிருந்து பல கணிப்பொறிகளை தாக்கும் வைரஸ் எனப்படும் தாக்குதல்களை அனுப்பி கணிப்பொறிகளில் உள்ள தகவல்களை அழித்தல் மற்றும் அடுத்தவர்களின் வங்கி கணக்கை திறந்து பணத்தைக் கொள்ளையடித்தல், ஆபாசபடங்களை அனுப்புதல், போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர்.

ஒரு வருங்கால இணையதள உபயோகிப்பாளராக நீங்கள் இருக்கின்றபடியால் உங்களுக்கு இணையதளத்தை எப்படி உபயோகிப்பது, எதைச் செய்யலாம், எதைக் செய்யக் கூடாது என்பதையும் அறிந்து கொள்வது மிக முக்கியம்.

## வரைமுறைகள்:

- இணையதளத்தில் ஏராளமான தவறான தகவல்கள் இருக்கின்றன. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பதிவு செய்யலாம் என்பதால் குப்பை போல ஏராளமான தவறான தகவல்களும் உள்ளன. உபயோகிப்பாளரர்களுக்கு எந்த சந்தேகமும் வராமல் அவர்களை வேட்டையாட விலங்குகள் போல் பலர் இணையதளத்தில் உலா வருகின்றனர்.
- ஒரு சிலர் இணையதளத்தை உபயோகிப்பதில் அடிமையாகிப் போகிறார்கள். அதனால் நட்பு மற்றும் காதல் என்ற பெயரில் ஏமாற்றப்படுகிறார்கள்.
- ஆபாச புகைப்படங்களை குழந்தைகள் கூட பார்க்கக் கூடிய வகையில் பதிவு செய்கிறார்கள்.
- இணையதளத்தில் நேரத்தை தேவையின்றி செலவிடுவது மிகவும் சுலபம் பின்னர் நினைத்துப் பார்க்கும் போது அது எவ்வளவு தவறு என்று உணர முடியும்.
- இணையதளமும் தொலைக்காட்சியும் மிகவும் சோம்பேறித்தனத்தை வளர்க்கின்றன. இதனால் நிறைய உடல் பருமன் ஆகி நிறைய நோய்களுடன் அவதிப்படுகின்றனர்.
- இணையதளத்தில் நிறைய ஏமாற்று இணையதளங்கள் உள்ளன. அவை மற்றவர்களின் கட்டுரைகளை தம்முடையது என்று பதிவு செய்து மக்களை ஏமாற்றுகின்றன.
- நேர்மையற்ற தொழில்கள் இணையதளத்தில் நிறைந்து காணப்படுகின்றன. இதில் நிறைய பேர் ஏமார்ந்து தமது பணத்தை இழக்கின்றனர்.
- கணிப்பொறி வைரஸ் மூலம் அடுத்தவர்களின் கணிப்பொறியில் உள்ள மதிப்பு மிக்க தகவல்களை அழித்து விடுகின்றனர்.

- அடுத்தவர்களின் அடையாளத்தை திருடி தமது அடையாளம் போல் காட்டி ஏமாற்றுகின்றனர்.
- இணையதள விளையாட்டுக்கள் பலவும் வன்முறை, போட்டி இயற்கைக்கு மாறான விசயங்களை கொண்ட கதாபாத்திரங்கள் மூலம் விளையாடுபவர்கள் மனதில் மாற்றங்கள் ஏற்படுத்துகின்றன.

## இணையதள குற்றத்தின் வகைகள்

### மின்னஞ்சல் மூலமாக தொந்தரவு

மின்னஞ்சல் மூலமாக ஒருவருக்கு மிக மோசமாக கடிதங்கள் அனுப்புதல், புகைப்படங்கள் அனுப்புவது முகநூல், ட்விட்டர் போன்றவற்றில் தற்போது சர்வசாதாரணமாக காணப்படும் தொந்தரவாகி விட்டது.

### இணையதள மிரட்டல்

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒருவருக்கு மின்னஞ்சல், இணையதளம், தொலைபேசி, குறுந்தகவல்கள், காணொளி போன்றவற்றின் மூலம் மிரட்டல் விடுப்பது.

ஆபாசமான புகைப்படங்களை பரவலாக்குவது: பாலியல் வக்கிரமான புகைப்படங்களை வெளியிடுவது. இதனால் சிறுவயதிலேயே வளரிளம் பருவத்தினர் பல்வேறு தீய பழக்கங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் ஆளாகின்றனர்.

### அவதூறு

மின்னஞ்சல், முகநூல் போன்றவற்றின் மூலம் ஒருவரைப் பற்றி அவதூறான செய்திகளைப் பரவவிடுவது, ஒருவருக்கு ஆபாச வார்த்தைகள் அடங்கிய கடிதத்தை அல்லது குறுஞ்செய்தியை அனுப்புவது.

### ஊடுறுவுதல்

நாம் அறியாமலேயே நமது கணிப்பொறிக்குள் உள்ள விசயங்களை ஊடுறுவி கண்டுபிடித்து அவற்றை திருடுதல் அல்லது அழித்தல்.

### ஏமாற்று மின்னஞ்சல்

வேறு ஒருவர் பெயரில் மின்னஞ்சல் அனுப்புவது. அடுத்தவர்களின் தொலைபேசி எண்ணை திருடி, இணையதளத்தில் மூலம் குறுஞ்செய்திகள் அனுப்பி ஏமாற்றுதல். இது இணையதள குற்றங்களில் மிக மோசமானது.

### ஏடிஎம் அட்டை திருட்டு

அடுத்தவர்களின் வங்கி சேமிப்பு தகவல்களைத் திருடி அதன் மூலம் புது ஏடிஎம் அட்டை உருவாக்கி அவர்களின் வங்கி கணக்கில் உள்ள பணத்தை திருடுவது.

### ஏமாற்றுதல் மற்றும் மோசடி செய்தல்

அடுத்தவர்களின் கணிப்பொறியில் உள்ள தகவல்களை காட்டி ஏமாற்றுதல், இது போன்று ஆபாச புகைப்படங்கள் காட்டுதல், அடுத்தவர்களை மிரட்டுதல் மற்றும் ஒருவரின் புகைப்படத்தை மாற்றங்கள் செய்து அவரை ஆபாச செயல்களை ஈடுபடுவதாக காட்டுதல், ஒருவரை அவருக்கு தெரியாமல் புகைப்படம் மற்றும் காணொளி எடுத்து பணம் கேட்டு மிரட்டுதல் என இணையதள குற்றங்கள் நிறைய உள்ளன.

## மலர்விழியின் முகநூல் அனுபவம்

மலர்விழி 8-ம் வகுப்பு படிக்கும் மாணவி. அவளும் அவளது தம்பியும் பெற்றோரின் அனுமதி வாங்கி பக்கத்தில் இருக்கும் கணிப்பொறி மையத்திற்கு விளையாடச் சென்றனர். அப்போது மலர்விழி முகநூல்

ஒன்றை ஆரம்பித்தாள். உடனேயே அவளுக்கு நிறைய குறுஞ்செய்தி அழைப்புகள் வர ஆரம்பித்தன. அவளும் மிக ஆர்வமாக இணையதளத்தில் உரையாட ஆரம்பித்தாள். அவளுக்கு அது மிகவும் பிடித்து இருந்தது. அதனால் அவள் அடிக்கடி ஏதாவது காரணம் சொல்லி பெற்றோரின் அனுமதி வாங்கி கணிப்பொறி மையம் சென்றாள். அதில் ஒருவன் அவளுக்கு அடிக்கடி கடிதம் எழுதினான். அவளும் பதிலுக்கு கடிதம் எழுதினாள். மிகவும் நல்லவனாக தெரிந்தான். அவளது கணக்கு பாடம் சம்பந்தமாக சந்தேகங்களை தெளிவுபடுத்தினான்.

ஒரு நாள் அவன் அவளை சந்திக்க வேண்டும் என்றான் மலர்விழியும் தனது தோழி தயாவுடன் அவன் குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு சந்திக்க சென்றாள். நேராக பார்த்த மலர்விழிக்கும் அவளது தோழி தயாவுக்கும் மிகப்பெரிய அதிர்ச்சி. அவன் அவளது தந்தையின் வயதை ஒத்தவனாக இருந்தான். மேலும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று உணர்ந்து இருவரும் அந்த இடத்தில் இருந்து ஓட்டம் பிடித்தனர். பூங்காவில் நிறைய பேர் இருந்ததால் அவனால் அவர்களை பின் தொடர முடியவில்லை. நல்லவேளை மலர் தோழியுடன் சென்றதால் வரவிருந்த ஆபத்திலிருந்து தப்பித்தாள்.

- மலர்விழியின் கதையிலிருந்து நீங்கள் எதை செய்யக் கூடாது மற்றும் எதைச் செய்யலாம் என்று கற்றுக் கொண்டீர்கள்?

## நீங்கள் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

- தங்கள் பெற்றோர் மொபைல், மடிக்கணினி வாயிலாக இணையதள உபயோகம் குறித்து கூறும் அறிவுரைகளை ஏற்று அதன்படி ஒரு வரைமுறைக்குள் உபயோகிக்க வேண்டும்.
- பெற்றோருடைய உதவியுடன் இணையதளத்தை அவர்கள் அருகில் இருக்கும் போது உபயோகிக்க வேண்டும்.
- உங்கள் சம்பந்தப்பட்ட தகவல்கள், புகைப்படங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டியிருந்தால் அதனை பெற்றோருக்கு தெரிவித்து அவர்களின் அனுமதியுடன் வெளியிட வேண்டும்.
- தங்களை பற்றிய தகவல்களை மொபைல் மற்றும் மடிக்கணினி மூலம் இணையத்தில் வெளியிடும் போது அது பாதுகாப்பான குழுவா என்று உறுதி படுத்திக் கொள்ள வேண்டும்.
- நீங்கள் செல்லும் கணிப்பொறி மையம் பலர் இருந்து உபயோகிக்கும் அறையாக இருக்க வேண்டும். தனியே செல்லும் குழந்தைகளுக்கு ஆபாச புகைப்படங்களை காட்டி அவர்களை துன்புறுத்தும் வாய்ப்பு உள்ளதால் தனியே செல்வதை தவிர்க்க வேண்டும்.
- எந்த ஒரு பிரச்சனையை நீங்கள் வலைதளத்தை உபயோகிக்கும் பொழுதும் கண்டறிந்தால் அதனை உடனே பெற்றோர் அல்லது ஆசிரியர்களிடம் தெரியப்படுத்த வேண்டும்.
- தவறானது என கண்டு பிடித்தால் உடனே இணையதளத்தினை மூட வேண்டும்.
- உங்களது மின்னஞ்சல் மற்றும் இதர இணையம் தொடர்பான ரகசிய வார்த்தைகயை (பாஸ்வொர்ட்) உங்களது நண்பரிகளிடம் கூட தெரிவிக்கக் கூடாது.
- நீங்கள் இணையதளத்தில் அல்லது கணிப்பொறியில் விளையாடும் போது ஏதேனும் வித்தியாசமாக உணர்ந்தால், உங்கள் அலைபேசிக்கு ஏதேனும் தேவையற்ற அழைப்புகள் வந்தால் உடனடியாக ஆசிரியர், பெற்றோர் அல்லது உங்கள் பாதுகாவலரிடம் தெரிவிக்க வேண்டும்.
- நீங்கள் அறியாதவர் அலைபேசியில் குறுந்தகவல் அனுப்பினால் அவருக்கு பதில் அனுப்ப வேண்டாம்.

- இணையதளத்தில் ஏதாவது விண்ணப்பம் நிரப்ப வேண்டியிருந்தால் அதை தங்களது பெற்றோரின் உதவியுடன் செய்ய வேண்டும். உங்களது தகவல்கள் பாதுகாப்பான இணைதளத்தில்தான் பதிவு செய்கிறீர்களா என்பது பெற்றோர் உறுதி செய்ய முடியும்.
- தேவையற்ற மின்னஞ்சல் தகவல்கள் அவற்றுடன் வரும் இணைப்புகளை பதிவீடு செய்வது. திறந்து பார்ப்பது கூடாது. தேவையற்ற பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக உங்களது பெற்றோரிடம் எதையும் மறைக்காமல் உண்மை சொல்ல வேண்டும்.

**பெற்றோரின் சிந்தனைக்கு:**

குழந்தைகள் இணையதளம். அலைபேசி போன்றவற்றை முறையாக உபயோகிக்க கற்றுக் கொடுக்கலாம். அவர்கள் பயன்படுத்தும் நேரத்தை வரையறுக்க வேண்டும். குழந்தைககள் இணையதளத்தை உபயோகிப்பதை கண்காணிப்பது அவசியம்.

**பயிற்சி:**

மாணவர்கள் தங்களது இணையதளம் குறித்து தங்கள் பெற்றோரிடம் கலந்துரையாடவும், அதனை வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

## 8. நேர்மறை பாகுபாடு

### பாகுபாடு

அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்று பல பெரியோர்கள் காலந்தோறும் எடுத்தியம்பி வந்திருக்கிறார்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிய நமது வள்ளுவப் பெருந்தகையோ அனைத்து மனிதர்களையும் என்ற நிலையைக் கடந்து அனைத்து உயிர்களையும் சமமாக நடத்தச் சொல்லி சென்றிருக்கிறார்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற உயிரற்ற பயிரின் வாட்டத்தில் கூட மனம் நொந்தார் வள்ளலார். அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி என்ற பாடலை முகப்பு பாடலாக வைத்தே நம் தமிழ்ச் சமுதாயம் சமத்துவம் பெற வேண்டும் என்று பாடுபட்ட தந்தை பெரியாரும் தனது குடியரசு நாளிதழைத் துவங்கினார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே நமது இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கருதுகோளாகும். ஆனால் நாம் காண்பது என்ன இங்கு சாதியின் பேரால் ஆண், பெண் என்ற பாலினப் பாகுபாட்டின் பேரால் நாம் எத்தனையோ இடங்களில் பிரிந்து கிடக்கிறோம். இது போல் நீங்கள் அன்றாடம் சந்திக்கும் பாகுபடுத்தும் நிகழ்வுகள் சிலவற்றைப் பட்டியிலிடுங்கள்

**உங்கள் வீட்டில் மற்றும் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்வுகளிலிருந்து சில கேள்விகள்**

- உங்கள் வீட்டில் இருபால் சிறுவர்களும் இருக்கிறார்களா?
- எனில் யார் சாப்பிட்ட தட்டை யார் கழுவுகிறார்கள்?
- யார் யார் துணிகளை யார் துவைக்கிறார்கள். சிறுவர்கள் மத்தியிலான வேலைகளை மட்டும் குறிப்பிடவும். அம்மா, அப்பா செய்வதைக் கூற வேண்டாம்.
- உங்கள் வீட்டில் நீங்கள் ஏதாவதொரு வேலையை நீங்கள் பெண்ணாக அல்லது ஆணாக இருப்பதால் செய்தே தீர வேண்டும் என்று வலியுறுத்துகிறார்களா?

- உங்கள் ஊரில் வாடகைக்கு கொடுக்கும் வீடுகளை சாதி, மதம் கேட்காமல் வாடகைக்கு விடுகிறார்களா?
- இன்று பத்திரிகையில் வந்திருக்கும் மணமேடை விளம்பரங்களில் சாதியில்லாத விளம்பரங்கள் எத்தனை சதவீதம் வந்திருக்கிறது என்று கூறு.

இப்போது மேற்காணும் அனுபவ உண்மைகளிலிருந்து நாம் என்ன புரிந்து கொண்டோம். நாம் சமத்துவத்தை பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர நடைமுறையில் அது உண்மையாக இல்லை.. அல்லவா?

இதனை மாற்றி உண்மையாகவே சமத்துவ சமுதாயத்தைப் படைக்க என்ன செய்வது என்று யோசித்துப் பாருங்களேன்.

இப்படிதான் நமது தலைவர்கள் பெரியார், அம்பேத்கார், பூலே, நாராயணகுரு இன்னும் எண்ணற்ற தலைவர்கள் நமக்காக பாடுபட்டவர்கள் சிந்தித்தார்கள். பிறகு அரசாங்கத்திடம் சொன்னார்கள். சமமற்றவர் களாக சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்களை சமமாக ஆக்குவதற்கு சட்டத்தில் ஆவணம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் பிறந்ததுதான் நேர்மறையான பாகுபாடு என்ற கருத்து. அதாவது எதிர்மறையான பாகுபாட்டை சமுதாயத்தில் ஒழிப்பதற்காக நேர்மறையான பாகுபாடு வருகிறது. இது என்ன சொல்கிறது.

நீண்ட காலம் சாதியின் பேரால் பல்லாயிரக்கணக்கான மக்கள் படிப்பதிலிருந்து தடுக்கப்பட்டிருந் தார்கள். மேலும் குறிப்பிட்ட ஏவல் பணிகளை மட்டுமே செய்ய அனுமதிக்கப் பட்டிருந்தார்கள்.

எனவே அவ்வாறு நீண்ட காலமாக படிக்காமலே இருந்து வருகின்ற மக்களுக்கு படிப்பதற்கான வாய்ப்புகளில் அனைத்து வேலைகளையும் செய்வதற்கான வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் இருக்கிறார்களோ அத்தனை சதவீதம் கல்வி வேலை வாய்ப்பில் அவர்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

இதைத்தான் சாதிவாரி இட ஒதுக்கீடு என்று சொல்கிறோம்.

1. மாநில அரசில் மக்கள் தொகை அடிப்படையில் எந்தெந்தப் பிரிவினருக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு தரப் பட்டிருக்கிறது என்று அறிந்து கூறு.
2. மத்திய அரசில் மக்கள் தொகை அடிப்படையில் எந்தெந்தப் பிரிவினருக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது என்று அறிந்து கூறு.

**பெண்கள்:**

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கேட்ட சமுதாயத்தினால் பெண்கள் கல்வியிலும் உடற் திறன்களிலும் வலிமையிலும் மிகவும் பலவீனமானவர்களாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் உணவுக்கு தடை, கல்விக்குத்தடை வெளியில் சுதந்திரமாக உலாவதற்கு தடை, என்று தடைகளே அவர்களுக்கு வாழ்க்கையாகிப் போயின.

ஆகையால் 50 சதவீத மக்கள் தொகையாக இருக்கும் பெண்கள் நாடாளுமன்றத்தில் சட்டமன்றத்தில் வெறும் எட்டு சதவீதமே உள்ளனர். அவர்களை ஓரளவாவது கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் தான் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு கேட்கப் படுகிறது.

பஞ்சாயத்துகளில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு தரப்பட்டு அதனால் பெண்கள் பல இடங்களில் வெற்றி பெற்ற பஞ்சாயத்துத் தலைவியராக வந்து கொண்டிருக்கின்றனர்.

- இயற்கையில் காணப்படும் நேர்மறைப் பாகுபாட்டிற்கு உதாரணம் கூறு.
- நீ பார்க்கும் மக்கள் சமமாக இருக்கிறார்களா? யார் யார் சமமாக இல்லை என்று நீ நினைக்கிறாய் யாருக்கு நீ உதவ நினைக்கிறாய்.
- நீ கைக் கொள்ள நினைக்கும் நேர்மறைப் பாகுபாடு ஒன்று கூறு.
- ஒரு முதியவர் பேருந்தில் ஏறினால் நீ எழுந்து இடம் தருகிறாய். இதை நேர்மறைப் பாகுபாடு என்று கூறலாமா?

### வரதட்சணை ஒரு சமூக கொடுமை

- வரதட்சணை கேட்பதும் குற்றம், வரதட்சணை கொடுப்பதும் குற்றம்
- வரதட்சணை கொடுக்கவோ, வாங்கவோ உதவி செய்வது குற்றம்.
- ஒருவர் தனக்கோ, தமது மகனுக்கோ அல்லது உறவினரின் திருமணத்திலோ வரதட்சணை பெறுவது குற்றமாகும்.

### தண்டனைகள்

- ஐந்து வருடம் வரை சிறை
- ரூபாய் 15,000 வரை அபராதம்
- வரதட்சணை தொகையானது ரூ.15,000 க்கு அதிகமாக இருந்தால் அதைக் கொடுப்பவரும் பெறுபவரும் அதைப் போன்ற தொகையை (தண்டனைத் தொகை) செலுத்த வேண்டும். வரதட்சணையை முடிவு செய்யும் தரகர்களும், உறவினர்களும் சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகள் ஆவார்.

# 9. பெண் குழந்தைகளுக்கான திறன்கள்

## 1. முடிவு எடுத்தல் மற்றும் பிரச்சனைகளை எதிர் கொள்ளல்



மாணவர்கள் மத்தியில் பிரச்சனைகளைக் கையாளுவது எப்படி என்பதையும், முடிவு எடுக்கும் திறனைப் பற்றியும் தெளிவுப் படுத்துதல்.

### முடிவு எடுத்தலும் பிரச்சனைகளை எதிர்கொள்ளலும்

குழந்தைகளே! நாம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் முடிவுகளை எடுத்துக் கொண்டேதான் இருக்கிறோம். சின்ன சின்ன விஷயங்களில் இருந்து வாழ்க்கையைப் புரட்டி போடுகிற பெரிய காரியம் வரைக்கும் நமக்கு முடிவு எடுக்க உரிமை உண்டு. அதற்கான வாய்ப்புகளும் உண்டு.

உ.ம்: அம்மா, குழந்தைக்கு குடிக்க பால் கொடுக்க முன்வரும் பொழுது அந்த குழந்தை பால் வேண்டும், வேண்டாம் என்று சொல்வது கூட அந்த குழந்தையின் முடிவு. குழந்தையின் முடிவை தாய் ஏற்றுக் கொள்ளும் பொழுது தாய் குழந்தையின் கருத்து சுதந்திரத்தை ஏற்றுக் கொண்டதாக மாறுகிறது.

திருவிழா மற்றும் சில நேரங்களில் கடைகளுக்கு செல்லும் பொழுது குழந்தைகள் பெற்றோர்களிடம் அடம் பிடித்து பொம்மைகள் மற்றும் உடைகளை வாங்கச் செய்வது குழந்தைகளின் முடிவு தானே.

ஒவ்வொரு நாள் காலையும் எப்போ எழுந்திருக்கணும் என்ன காலை உணவு சாப்பிடணும் மற்றும் உடை அணியணும் என்பது கூட குழந்தையின் முடிவுதானே, மாறாக எத்தனையோ குழந்தைகள் தன்னுடைய பெற்றோர்களிடம் எந்த விருப்பத்தையும் சொல்ல முடியாமல் பயந்த நிலையில் இருப்பதும் நாம் அறிந்ததே.

இன்னும் பெரியவனான பின்பு அல்லது கல்லூரி படிப்பதற்கான வயது வரும் பொழுது என்ன பாடத்திட்டம் படிக்கணும் என்று நாம்தான் முடிவு எடுக்கிறோம்.

அது மட்டுமின்றி என்ன வேலைக்கு செல்ல வேண்டும், யாரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நாம் முடிவுகளை எடுத்துக் கொண்டேதான் இருக்கிறோம்.

நாம் எடுக்கிற முடிவு நமக்கு மகிழ்ச்சியையும், சுய மதிப்பையும் கொடுக்கிறதாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் மற்றவர்ளையும் பாதிக்கக் கூடாது.

மற்றவர்கள் நமக்காக முடிவு எடுத்தால், பெரும்பாலும் அது நமக்கு சாதகமாக இல்லை.

## சிறு சம்பவம்

ஒரு நாள், நண்பர்கள் குழுவில், எந்த முடிவையும் கலந்தாலோசிக்காமல் ஐஸ்கிரிம் சாப்பிட எல்லோரும் 50 ரூபாய் கொண்டு வந்திருங்கனு சொல்லிவிட்டார்கள். ஆனால் குழுவில் உள்ள ஒரு தம்பி 50 ரூபாய் புரட்ட முடியாம ரொம்ப கஷ்டப்பட்டான். அதுவே அவனுக்கு போராட்டமாக அமைந்தது. ஆக கலந்து முடிவு எடுக்காமல் மற்றவர்களின் நிலை என்ன என்று தெரியாமல் முடிவு எடுப்பது என்பது பொதுவாக இப்படிதான் இருக்கும்.

நமக்காக எல்லா முடிவுகளையும் நாம் எடுக்கிறது இல்லை. சின்ன வயசுல நாம் எந்த பள்ளியில் படிக்கணும்னு அப்பா, அம்மா தான் முடிவு எடுத்தாங்க , ஒரு சில முடிவுகளை நாம் கூட்டாகத்தான் எடுக்க வேண்டும்.

உ.ம்: நாம் ஒரு பொருட்காட்சிக்கு போக வேண்டும் என்றால் கூட நாம் கலந்து ஆலோசனை செய்து முடிவு எடுத்துதான் போக வேண்டும்.

## முடிவுகளை எப்பொழுது எடுக்க வேண்டும்? எப்படி எடுக்க வேண்டும்?

அமைதியான மனநிலையில் தெளிவாக இருக்கும் போது தான் சரியான முடிவை எடுக்க முடியும். அப்படி நாம் எடுக்கும் முடிவுகள் மகிழ்ச்சியையும் சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும். எப்பொழுதும் கவலையில் இருக்கும் பொழுதோ அல்லது குழப்பத்தில் இருக்கும் போதோ முடிவுகளை எடுக்கக் கூடாது.

### சம்பவம் : 1

பள்ளித் தேர்வில் தோல்வி அடைந்ததால் வெற்றிச்செல்வனை அவன் அப்பா அடித்துவிட்டார். யாருக்கும் தெரியாமல் வெளியூர் சென்று விட்டான். அங்கு குழந்தை தொழிலாளியாக வேலை செய்து கஷ்டப்பட்டு இப்பொழுதுதான் திரும்பி வந்துள்ளான். அவன் அவசரத்தில் எடுத்த முடிவு அவன் பள்ளி படிப்பையே பறித்துவிட்டது.

“கவலை மற்றும் குழப்பத்தில் இருக்கும் போது எப்படி முடிவு எடுக்கக் கூடாதோ அது போல ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும்போது கூட முடிவுகளை எடுக்கக் கூடாது”

### சம்பவம் : 2

ஒரு நாள் ஒரு இராஜா தன்னுடைய பிறந்த நாளுக்கு புலவர்களை அழைத்து தன்னை பாராட்டி கவிதைகளைப் படைக்க சொன்னார்.

கவிதைகளைக் கேட்ட இராஜா மிகவும் சந்தோசப்பட்டு தன்னிடம் இருந்த அனைத்து விலை மதிப்பில்லாத ஆபரணங்களையும் புலவர்களுக்கு அவசரப்பட்டு பரிசாக கொடுத்து விட்டார்.

மறுநாள் இராஜாவிடம் ஒண்ணும் இல்லாம போயிடுச்சு. இப்படியும் முடிவு எடுக்கக் கூடாது. நாம் கூட முடிவு எடுக்கிறதைப் பற்றி நல்லா தெரிஞ்சிக்கணும்.

மனோதத்துவ நிபுணருக்கு படிக்கிற எங்க அக்கா சொன்னாங்க.

நாம் வளர் இளம் பருவத்தினராம். இந்த வயசுல தான் நமக்கும் உடல்ரீதியான வளர்ச்சியும் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியும் ஏற்படும். அப்போது நாம் உடனடியாக முடிவு எடுத்து விடுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நிறைய பிள்ளைகள் தவறான பழக்கத்திற்கு அடிமையாகின்றனர்.

உ.ம்: புகை மற்றும் மது பழக்கத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். கொஞ்ச நேர சந்தோசத்திற்கு ஆசைப்பட்டு வாழ்க்கையில் பல இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறோம். மனரீதியான வளர்ச்சியில் நாம் குழந்தை பருவத்தை தாண்டி வரும் பொழுது நம் அப்பா, அம்மா சொல்வதை கேட்பதில்லை. நண்பர்கள் சொல்லும் காரியங்களுக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம். அது நமக்கு பல சூழ்நிலைகளில் பாதகமாக அமைகிறது. நண்பர்கள் சொல்வது எல்லா நேரத்திலும் சரியாக இருக்குமா என்று யோசிப்பது இல்லை.

## எப்படி முடிவு எடுக்கலாம்?

கிருஷ்ணகிரி அருகில் நடுப்பட்டி என்ற சிறிய கிராமம் உள்ளது. அதில் செல்வம் என்கிற கூலி தொழிலாளி இருந்தார். அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள். அவருடைய மனைவி வீட்டு வேலைகளையும், பெண் குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு இல்லத்தரசியாக இருந்தார். இவருடைய மூத்த மகள் கவிதா எட்டாம் வகுப்பும் இரண்டாவது மகள் காவியா ஐந்தாம் வகுப்பும் கடைசி மகள் இனிதா மூன்றாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் திடீரென்று செல்வம் மாரடைப்பால் இறந்துவிட்டார். அதுவரை செல்வத்தின் உழைப்பை மட்டுமே நம்பியிருந்த குடும்பம் செல்வத்தின் இறப்பிற்கு பிறகு குடும்பம் வறுமையில் வாட ஆரம்பித்தது. இதனால் செல்வத்தின் மனைவி ஒரு முடிவிற்கு வந்தார். தனது பிள்ளைகளின் படிப்பை தனி ஒரு ஆளாக சமாளிக்க முடியாது. எனவே தனது பெரிய மகள் கவிதாவை தனது கணவரின் அக்காவின் மகனுக்கு மணம் முடித்து கொடுத்து விட்டால் என்ன? என்று யோசித்து திருமணத்திற்கு ஏற்பாடுகளை செய்தார்.

## கேள்விகள்

கவிதாவின் சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?

இதனால் கவிதாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

கவிதாவின் அந்த வயது திருமணத்திற்கு ஏற்றதா?

## பயிற்சி

1. எந்தெந்த சூழ்நிலையில் உங்களுடைய கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை?

பெற்றோர்கள் ______________________

______________________

______________________

உறவினர்கள் ______________________

______________________

______________________

நண்பர்கள் ______________________

______________________

______________________

(குழந்தைகள் தனித்தனியாக சுய ஆய்வு செய்யவும்)

## 2. விமர்சன சிந்தனை திறன்

விமர்சன சிந்தனையின் தேவை, குழந்தைகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் அவர்களின் விமர்சன சிந்தனையை மேம்படுத்துதல்.

### வரையறை

ஒரு நபர் தனது அனுபவத்தின் அடிப்படையில் எந்த ஒரு விசயத்தையும் தெளிவாகவும் பகுத்தறிவோடும் சிந்தித்தலே விமர்சன சிந்தனைத் திறனாகும்.

### விமர்சன சிந்தனையைப் புரிந்து கொள்ளுதல்

மாணவன் : விமர்சன சிந்தனை என்றால் என்ன?

ஆசிரியர் : நான் விளக்குகிறேன். விமர்சன சிந்தனை என்றால்...... சரி அன்பு நீ கூட்ட வளாகம் வரை ஓடிச் சென்று விட்டு திரும்பிவா.

அன்பு உடனடியாக கூட்ட வளாகம் வரை ஓடிச் சென்றான். மாணவர்களுக்கு ஆசிரியர் அன்பை ஏன் ஓடச் சொன்னார் என்று தெரியவில்லை.

ஆசிரியர் : நிலா நீ அலுவலக அறை வரை ஓடிச் சென்று விட்டு திரும்பிவா.

நிலா : சார் நான் ஏன் அலுவலக அறை வரை ஓட வேண்டும். என்ன காரணம். எல்லோரும் இருக்கும் போது நான் மட்டும் ஏன் ஓட வேண்டும்?

ஆசிரியரைப் பார்த்து நிலா கேட்டு விட்டு அவள் இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். அதே நேரம் அன்பு மூச்சிரைக்க ஓடி வந்து நின்றான். ஆசிரியர் நிலாவையும் அன்பையும் அவர்களது இருக்கையில் அமரும்படி கூறினார்.

ஆசிரியர் : நான் எட்டாம் வகுப்பு இதே பள்ளியில் படித்தேன். அப்போது ஒரு நாள் எங்கள்ஆசிரியர் வகுப்பறையை சுத்தம் செய்யும்படி கூறினார். உடனே மாணவிகளாகிய நாங்கள் சுத்தம் செய்ய ஆரம்பித்தோம். அப்போது மாணவர்களை சுத்தம் செய்யச் சொன்னபோதுஅவர்கள் எங்களை கேலி செய்தனர். இதெல்லாம் பெண் பிள்ளைகள் செய்யும் வேலை என்றனர். நாங்கள் அனைவரும் தாழ்வாக உணர்ந்தோம். கவலையடைந்தோம். நாம் ஏன் பையனாக பிறக்கவில்லை என்று வருந்தினோம்.

நான் இதை என் அம்மாவிடம் கூறியதற்கு அவரும் வீட்டு வேலையெல்லாம் பெண்கள் செய்யும் வேலை என்றார். எனக்கு அப்போதிருந்தே பெண்கள் மட்டும் ஏன் இந்த வேலைகள் செய்ய வேண்டும்? என்ற சிந்தனை இருந்து வந்தது. பின்னர் நான் கல்லூரிக்கு படிக்கச் சென்றேன். அப்போது இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்து படித்தேன். அதில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையும் சமத்துவம் என்றால் என்ன என்பதையும் அறிந்து கொண்டேன். அப்போது விமர்சன சிந்தனையை வளர்த்து கொள்ள எனது வகுப்புகள் உதவியது.

### எதையெல்லாம் விமர்சன சிந்தனைக்கு உட்படுத்த வேண்டும்?

மற்ற உயிரினங்களை, சுற்றுப்புற சூழ்நிலையை அவமானப்படுத்தும், தரம் தாழ்த்தும் எந்த ஒரு செயலையும் விமர்சன சிந்தனைக்கு உட்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு, மரங்களை தேவையின்றி வெட்டுதல், விவசாய நிலங்களை விற்பனை நிலங்களாக்குதல், பெண்களை கேலிசெய்தல்,

ஆசிரியர்களையும் பெரியோர்களையும் அவமதித்தல், மதம், சாதியைக் குறிப்பிட்டு ஒருவரை அவமானம் செய்தல் போன்றவற்றைக் குறித்த விமர்சன சிந்தனை நமக்கு இருக்க வேண்டும். நாம் விமர்சன சிந்தனை செய்யும்போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது என்னவென்றால் சாதிகள், பிரிவுகள் போன்றவைகளுக்குள் நுழைந்து பிளவை ஏற்படுத்த கூடிய சிந்தனையை கொள்ள வேண்டியதில்லை.

விமர்சன சிந்தனையின் முதல் படி என்னவென்றால் ஏன், என்ன, எப்போது, எங்கே, எப்படி என்ற ஐந்து கேள்விகள் கேட்பது. இவ்வளவு வருடங்களில் நான் புரிந்து கொண்டது நாம் ஏன் பாகுபாட்டிற்கு உட்படுத்தப்படுகிறோம் என்பதை நாம் எதிர்த்து கேள்வி கேட்டதேயில்லை.

அதன் பின் நான் பெண்கள், ஏழைகள் மற்றும் தலித் பிரிவு மக்கள்ஆகியோருக்கு எதிராக உள்ள பாகுபாடு குறித்து சிந்திக்க ஆரம்பித்தேன். பிறகு விமர்சன சிந்தனை செய்ய மாணவர்களுக்கு உதவ ஆரம்பித்தேன்.

விமர்சன சிந்தனை செய்யும் போது நமது எண்ணங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை முறைப்படி வெளிப்படுத்தவும் மேலும் இந்த எண்ணங்கள் நம்பிக்கைகளுக்கான காரணங்கள் என்ன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு, நிலாவின் செய்கை அவள் தான் செய்யும் காரியத்திற்கு காரணம் அறியாமல் அவள் அதில் ஈடுபடமாட்டாள் என்பதை நமக்கு உணர்த்தியது. அவளது அந்த சிந்தனையே என்னிடம் கேள்வி கேட்க வைத்தது. எல்லோர் முன்பு தைரியமாக பேசவைத்தது.

### நமக்கு ஏன் விமர்சன சிந்தனை வேண்டும் என்பதை பார்ப்போம்.

- விமர்சன சிந்தனை இல்லையென்றால் அந்த இடத்தில் பாகுபாடும் வன்கொடுமைகளும் பெருகி விடும். விமர்சன சிந்தனையே சமத்துவத்தை அடைய சுதந்திரத்தை தக்கவைக்கும் முதல் படி.
- அரசியலமைப்பு சட்டம் சமத்துவ உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் போது, நாம் அனைவரும் மனிதகுலம் எனும் போது பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே ஏன் பாகுபாடு உள்ளது என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.
- விமர்சன சிந்தனை என்பது எதையும் கண்மூடித்தனமாக பின்பற்றாது.
- நம் வாழ்க்கையில் விமர்சன சிந்தனை இல்லாதவர்களாக இருப்பின் சுரண்டலுக்கு உள்ளாவோம்.
- விமர்சன சிந்தனை என்பது அறிவியல்பூர்வமாக சிந்திப்பது. அது நமக்கு எந்த ஒரு விசயத்தையும் மதிப்பீடு செய்யவும் மற்றும் ஆராயவும் தேவையான திறனை மேம்படுத்த உதவுகிறது.
- நாம் எல்லோரும் விமர்சன சிந்தனை உள்ளவர்களாக இருக்க முடியும். அதற்கு நமக்கு எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கவேண்டும்.
- ஆக்கபூர்வமான கேள்விகள் கேட்பதற்கு அதாவது ஏன்? என்ன? எப்படி? எப்போது? எதற்கு? என்ற கேள்விகளை நம் மனதில் கேட்க பழகி கொள்ள வேண்டும். அதற்கான பதில்களை தொடர்புள்ளஆதாரங்களில் இருந்தும், பல்வேறுபட்ட கோணங்களிலிருந்தும் புது தகவல்களிலிருந்து ஆராயவும், அனுபவம் போன்றவற்றிலிருந்து விளக்கம் பெற வேண்டும். எப்போதும் ஒருவிசயம் குறித்து மென் மேலும் விளக்கங்களுக்கும் விவாதங்களுக்கும் தயாராக இருக்கவேண்டும்.
- அதே சமயத்தில் நாம் ஒருதலைபட்சமாக இருக்கக் கூடாது. உண்மையை திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் யார் சொல்வதையும் தகுந்த ஆதாரங்கள் இல்லாமல் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது.

- நமக்கு ஒரு விசயம் குறித்து இருக்கும் அறிவின் அளவு குறித்தும் தெரிய வேண்டும். மற்றவர்களின் நம்பிக்கையை பாதிக்கும் எந்த ஒரு விமர்சனத்தையும் முன் வைக்கக் கூடாது மற்றும் பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் எதையும் செய்யக்கூடாது.
- உண்மையை பணிவோடு ஏற்றுக் கொண்டு நமது கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.
- விமர்சன சிந்தனை என்பது தர்க்க சிந்தனை கொண்டதாக இருக்க வேண்டும்.

### விவாதத்திற்கான கேள்விகள்

- பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஸ்வாதி / நிருபயா போன்ற பெண்களின் கதிக்கு ஆளாவர்.
- பாம்புகள் பால் குடிக்கும் என்று நம்பப்படுகிறது. பல்லிகள் நாம் சொல்வதை ஆமோதித்தே ஒலி எழுப்புகின்றன.
- விதவைகள் துரதிர்ஷ்டசாலிகள்.

### பயிற்சி

ஒரு சில பழக்க வழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை எடுத்துக் கொண்டு அவற்றை விமர்சன சிந்தனைக்குள்ளாக்குக.

ஒரு சூழ்நிலையை எடுத்துக் கூறி அதனை மாணவர்களின் விமர்சன சிந்தனைக்கு விடவும்.

உ.ம்: தாய்மார்கள் மட்டுமே குழந்தையை வளர்க்க முடியும்.

ஆண் பிள்ளைகள் அழக் கூடாது. அப்படி அழுதால்அவர்கள் பெண் பிள்ளைகள்.

### பெற்றோருக்கு

மாணவர்கள் தமது பெற்றோரிடம் அவர்கள் தமது முழு ஈடுபாட்டோடு கூடிய விமர்சன சிந்தனையால் மாற்றிய வழக்கத்தை அல்லது ஒரு சம்பவத்தை கேட்டு அறிந்து வந்து வகுப்பில் பகிர்ந்து கொள்ள செய்ய வேண்டும்.

## 3. மறுத்தல் திறன்

நட்பு என்ற பெயரிலும், உறவு என்ற பெயரிலும், பழகியவர் என்ற பெயரிலும் வரும் வற்புறுத்தல் களுக்கும், தகாத செயல்களுக்கும் துணை போகாமல் மறுப்பதற்கு குழந்தைகளை பழக்க வேண்டும். அவ்வாறு மறுக்கும் போது உறுதியாகவும் அழுத்தமாகவும் மறுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். பெண் குழந்தைகளுக்கு மறுத்தல் திறன் மிகவும் தேவைப்படும் திறனாகும்.

நமக்கு பிடிக்காத விசயங்களில் நம்மை கட்டாயப்படுத்தும் போது நமக்கு பிடிக்கவில்லை என்பதை உறுதியாக தெரிவிக்க வேண்டும். பல நேரங்களில் பெண் குழந்தைகளுக்கு பாலியல் ரீதியாகவும் தொடுதல், கட்டி பிடித்தல், உள்ளங்கையில் சுரண்டுதல், வக்கிரமான படங்களை காண்பித்து பார்க்கச் சொல்லுதல், தனிமையில் சந்திக்கும்படி தூண்டுதல் போன்ற செயல்களும் ஆண் குழந்தைகளுக்கு போதை மருந்துகளை பழக தூண்டுதலும், பாலியல் ரீதியான தூண்டுதல்களும் இன்ன பிற வகையில் தேவையற்ற வகையில் தகாத செயல்களுக்கு துணை போகவும் கட்டாயப் படுத்தப்படுவர். மேலும் நாம் பணம் செலவழித்து வாங்கும் போது சிறுவர்கள் என்று நம்மை அலட்சியப்படுத்தி உபயோகமற்ற நிலையில் இருக்கும் பொருட்களை நம் மீது திணிப்பதை மறுப்பதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.




- முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது நம் உடலை நம் விருப்பம் இல்லாமல் தொடுவதற்கு யாருக்கும் உரிமையோ அதிகாரமோ கிடையாது.
- நம்மிடம் அருவருப்பாக நடந்து கொள்பவர்களிடம். இது எனக்கு பிடிக்கவில்லை. இது மாதிரி செய்தால் நான் எல்லோரிடமும் சொல்லுவேன் என்று உறுதியாக கூற வேண்டும்.
- இது மாதிரி நடக்கிற போது நாம் பயப்படக் கூடாது. தப்பு செய்கிற மாதிரி நினைத்து வருத்தப்படக் கூடாது.
- உடனே அம்மா, அப்பா கிட்ட சொல்ல வேண்டும். நண்பர்களிடம் சொல்ல வேண்டும்,
- பள்ளிக்கூடத்தில் அல்லது பள்ளிக்கு பக்கத்தில் நடந்தால் உங்கள் ஆசிரியரிடம் கூற வேண்டும்.
- ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத இடத்தில் நடந்தால் ஆள் நடமாட்டம் உள்ள இடத்திற்கு ஓடி போய் உதவி கேட்க வேண்டும்

### அனுபவம்

முல்லை எட்டாவது படிக்கும் மாணவி. மிக நன்றாக படிப்பாள். அவளது தோழி கல்யாணியோ அவ்வளவு நன்றாக படிக்க மாட்டாள். படிப்பின் மீது அக்கறை இன்றி இருந்தாள். ஒரு நாள் தேர்வின் போது

இருவரும் அருகருகில் அமர்ந்து எழுதினர். கல்யாணிக்கு எந்த பதிலுமே தெரியவில்லை. எனவே அவள் முல்லையிடம் தனக்கு அவளின் தேர்வுத்தாளை காண்பிக்கும்படி கூறினாள். இல்லாவிட்டால் அவளது நட்பு முறிந்து விடும் என்று எச்சரித்தாள்.

### சரியான விடையை தேர்ந்தெடு

1. பள்ளியில் படிக்கும் போது நட்பு மிகவும் முக்கியம். அதனால் இப்படிப்பட்ட தவறுகளுக்கு துணை போவதில் தவறில்லை.
2. காப்பியடிப்பது மிகவும் தவறான செயல். எனவே அதனை உடனே ஆசிரியரிடம் தெரிவிக்க வேண்டும்
3. முல்லை கல்யாணியின் நட்பை முறித்துக் கொள்ள வேண்டும்
4. முல்லை தனது தேர்வுத் தாளை காட்ட வேண்டிய அவசியம் இல்லை. தேர்வுக்கு பின்னர் கல்யாணியிடம் காப்பியடிப்பதால் வரும் பின் விளைவுகளை எடுத்துக் கூறி அவளை நல்வழிப்படுத்த வேண்டும்.

### அனுபவம்

கலா : என்ன அமுதன்? ஏதோ பேசணும் என்று சொன்னியே? தினசரி பேசிக் கொண்டுதானே இருக்கிறோம்.

அமுதன் : ஆமா, ஆனா ரொம்ப நாளா சொல்லணும் என்று நினைச்சத இன்னைக்கி சொல்லிடலாம் என்று உன்னை வரச் சொன்னேன்.

கலா : என்ன நினைச்ச? ஏதோ வித்தியாசமா சொல்லப் போறியா?

அமுதன் : இந்த கடிதத்தைப் படித்து பார் புரியும்

கலா : என்ன? கடிதமா? வேடிக்கையா இருக்கு உன் செயல். சரி குடு (வாங்கி படிக்கிறாள்)

அமுதன் : நான் உன்னைக் காதலிக்கிறேன். உன் முடிவு என்ன?

கலா : அமுதன் உன் கிட்ட நான் சொல்றத பொறுமையா கவனமா கேள். என்னுடைய தோழன் நீ. உன் நலனில் எனக்கு மிகவும் அக்கறை உண்டு. நாம் இப்போ படித்துச் கொண்டிருக்கும் சிறுவர்கள். என் அத்தை கதை சொல்லியிருக்கார். இந்த மாதிரி எண்ணமெல்லாம் இந்த வயதில் ஏற்படுவது இயல்பு. ஆனால் அது உண்மையான காதல் ஆகாது. இது இனக்கவர்ச்சியே. ஆண் மீது பெண்ணுக்கும் பெண் மீது ஆணுக்கும் ஏற்படும் கவர்ச்சிதான் இனக்கவர்ச்சி என்று என் அத்தை விளக்கமாகக் கூறியுள்ளார். உலகத்தைப் புரிந்து வாழ்க்கையைப் புரிந்து நடந்து கொள்ள குறைந்தது 25 வயது ஆக வேண்டும்.

அமுதன் : நான் பொய் சொல்லவில்லை. உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்.

கலா : பொறு பொறு எனக்கு என் அம்மாவை பிடிக்கும். அப்பாவைப் பிடிக்கும். என் பாட்டி தாத்தாவைப் பிடிக்கும். நம் கணக்கு ஆசிரியரைப் பிடிக்கும், நம்முடன் படிக்கும் ஸ்வேதாவை பிடிக்கும், பாலாவை பிடிக்கும், முருகனைப் பிடிக்கும். இதெல்லாம் என்ன? அவர்களின் குணங்கள், நடவடிக்கைகள், அவர்கள் நம் மீது காட்டும் அக்கறை இவையெல்லாம் நம்மை கவருகின்றது. நம் அம்மா, அப்பா நம்மீது மிகவும் பாசம் வைத்திருக்கிறார்கள். நம்மை நன்றாக கவனித்து பராமரிக்கின்றனர். அதனால் அவர்களை நாம் நேசிக்கிறோம். எனவே நீயும் நானும் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பும் நட்பின் அடிப்படையில் தான்.

ஆணும், பெண்ணும் நல்ல தோழர்களாக இருக்க முடியும். எனவே பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் நமக்கு இது தேவையற்றது. நாம் நண்பர்கள் என்று எல்லோருக்கும் உறுதிப் படுத்த வேண்டும். இப்போ சொல்லு உனது கருத்தை.

அமுதன் : என்னை மன்னித்து விடு கலா. நான் தெரியாமல் தப்பு பண்ணிட்டேன். நன்றாக படிப்பது ஒன்றே நமது கடமை. இப்படிப்பட்ட எண்ணங்கள் மிகவும் தவறானது. நாம் வளரிளம் பருவத்தினர். அதனால் எல்லாம் தெரிந்து கொண்டு விட்டோம் என்று அர்த்தமில்லை. நாம் இப்போது தான் உலகத்தினை புரிந்து கொள்ள ஆரம்பித்து இருக்கிறோம். நாம் இருவரும் நல்ல நண்பர்கள். நான் அதை கெடுத்துக் கொள்ள மாட்டேன். இனி நான் நன்றாக படித்து நல்ல வேலைக்கு செல்வேன். நீ எனக்கு தோழியாக கிடைத்ததற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நீ தொடர்ந்து எனது தோழியாக இருக்க வேண்டும். செய்வாயா?

கலா : நிச்சயமா. நான் கூறியதை புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டுவிட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி சரி சரி வா. நாளைக்கு நமக்கு மாதத் தேர்வு தொடங்குகிறது அதற்கு தயாராவோம்.

### அனுபவம்

சௌம்யா பத்தாவது படிக்கும் மாணவி. அவள் தினமும் நடந்தே பள்ளிக்கூடம் செல்வாள். வழியில் நிறைய கடைகள் இருக்கும். அதில் ஒரு டீ கடையில் ஒருவன் சௌம்யாவை உற்று பார்த்தபடி இருப்பான். ஆனால் சௌம்யா மிகுந்த பயத்துடன் தலையை குனிந்தபடி சென்று விடுவாள். ஒரு நாள் அவன் அவளை கையைப் பிடித்து இழுத்தான். அவள் கையை உதறிவிட்டு வேகமாக சென்று விட்டாள். அவனது நண்பர்கள் கொல்லென்று சிரித்தனர். மறுநாள் அவன் திரும்பவும் அவளை நோக்கி வந்தான். அவள் பயத்துடன் ஓடினாள். அதனால் கல் தடுக்கி கீழே விழுந்து விட்டாள். முகத்திலும் கையிலும் காயம் ஏற்பட்டது. அவளது அம்மா கேட்டதற்கு தான் கல் தடுக்கி விழுந்ததை மட்டும் சொன்னாள்.

### சரியான விடையைத் தேர்ந்தெடு

1. நமக்கு நடக்கும் பிரச்சினைகளை நாம் நமது பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும். நம் விருப்பம் இன்றி நம்மைத் தொட யாருக்கும் அனுமதி இல்லை. நமது உடல் நமதே.
2. நம் பெற்றோரிடம் தெரிவித்தால் அவர்கள் பிரச்சினையை பெரிதாக்குவார்கள். இதனால் நம் மானம் போய்விடும்
3. ஈவ் டீசிங் எனப்படும் பெண்களை கேலி செய்யும் செயல் குற்றம். இதற்கென்று தனிச் சட்டம் உள்ளது. இது குறித்து நமது ஆசிரியரிடம் புகார் அளித்து நடவடிக்கை எடுக்கும் படி கூற வேண்டும்.
4. எப்போதும் பெற்றோரிடமும் ஆசிரியரிடமும் உண்மையை மறைக்க வேண்டும்

### அனுபவம்

காவ்யா வீட்டுக்கு ஒரே பெண். அவள் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தாள். அவளது குடும்பம் ஏழ்மையானது. அவளின் அம்மா வழியில் உறவினர் ஒருவர் நல்ல வசதியானவர். அவர் அடுத்த தெருவில் வசித்து வந்தார். அவர் மனைவி இறந்த விட்டார். பிள்ளைகள் வெளியூரில் வேலை செய்து வந்தனர். அவர் காவ்யாவின் குடும்பத்திற்கு பொருளுதவி செய்து வந்தார். அதனால் காவ்யாவின் குடும்பம் சிறிது நிம்மதியாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்த உறவினருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. அதனால் காவ்யாவின் அம்மா சமையல் செய்து அவருக்கு காவ்யாவிடம் கொடுத்து அனுப்பினாள். அத்துடன்

அவருக்கு உதவியாக அவர் வீட்டிலேயே இரவில் தங்கும்படி கூறினாள். அன்றிலிருந்து காவ்யா உறவினர் வீட்டில் தங்க ஆரம்பித்தாள். ஒரு நாள் அவளுக்கு தன் மீது ஏதோ ஊர்வது போன்றும் அழுத்துவது போன்றும் இருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு கண்ணை திறந்து பார்த்தாள். அவளது உறவினர் அவள் அருகில் இருந்து அவளது உடலை தடவிக் கொண்டிருந்தார். காவ்யாவுக்கு தூக்கிவாரி போட்டது. அந்த உறவினரோ தனக்கு ஒத்துழைக்கும்படியும் இதனை வீட்டில் சொன்னால் தான் செய்யும் உதவிகளை நிறுத்தி விடுவதாகவும் கூறினார். காவ்யா அதன் பிறகு தூங்கவே இல்லை. அவள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானாள்.

### சரியான விடையைத் தேர்ந்தெடு

1. காவ்யாவுக்கு நடந்ததற்கு அவள் பொறுப்பில்லை. அவள் மன உளைச்சல் சரிசெய்யக் கூடியது. அவள் தன் அம்மாவிடம் கூறி மாற்று வழி ஏற்பாடு செய்ய வேண்டும். காவ்யா அந்த உறவினரிடம் இது தனக்கு பிடிக்கவில்லை என்பதை உறுதியாக கூற வேண்டும்.
2. காவ்யா இதை அப்படியே விட்டு விட வேண்டும்.

### அனுபவம்

சுரேஷ் : கடைக்கார அண்ணே! ஒரு சாக்லேட் கொடுங்கண்ணே

கடைக்காரர் : இந்தாப்பா இது புது சாக்லேட், சாப்பிட்டா ரொம்ப சந்தோசமா இருக்கும். விலை கொஞ்சம் அதிகம்.

சுரேஷ் : சாக்லேட்ட சாப்பிட்டா சுவையா இருக்கும், இது என்ன சந்தோசமா இருக்கும் என்று சொல்றீங்க. அப்படி என்ன இருக்கு இந்த சாக்லேட்டில்?

கடைக்காரர் : நீ என்னடா விவரம் புரியாத பயலா இருக்கியே. உன்னை விட சின்ன பசங்க எல்லாம் வந்து கேட்டு வாங்கிட்டு போறாங்க. இத சாப்பிட்டா நல்ல கிக்கா இருக்கும். வெளிய வாசனை வராது. ரொம்ப விலை இல்லை. யார் கிட்டயும் மாட்டிக்க மாட்ட. உங்க பள்ளிக் கூடத்து பசங்க முக்கால்வாசி என் கஸ்டமர்.

சுரேஷ் : அப்படின்னா இது போதை மருந்து கலந்த மிட்டாய் என்று சொல்லுங்க. இத விக்கிறதும் தப்பு, வாங்குறதும் தப்பு. இத சாப்பிட்டா படிக்க தோணாது. இதையே எப்போதும் சாப்பிட வேண்டும் போல் இருக்கும். இப்படிப்பட்ட வியாபாரம் உங்களுக்கு தேவையா அண்ணே?

கடைக்காரர் : டேய்! விட்டா பெரிய மனுசன் போல் பேசுற. வாங்க விருப்பம் இருந்தா வாங்கு இல்லனா பேசாம போ. என் வியாபாரத்தை கெடுக்காத.

சுரேஷ் : (நேராக ஆசிரியரிடம் செல்கிறான்) அய்யா... நான் உங்களிடம் ஒன்று கூற வேண்டும். அது மிக முக்கியமானது. நம் பள்ளிக்கு எதிர்புறத்தில் இருக்கும் கடையில் போதை தரும் மிட்டாய்கள் விக்கிறாங்க. நமது பள்ளி மாணவர்கள் நிறைய பேர் அதை வாங்கி சாப்பிட்டு கொண்டு இருக்காங்க.

ஆசிரியர் : என்னப்பா? உண்மையாவா? எனக்கெப்படி தெரியும்? நீ வாங்கி சாப்பிட்டாயா?

சுரேஷ் : இல்லை அய்யா ... (தனக்கும் கடைக்காரருக்கும் நடந்த உரையாடலைக் கூறுகிறான்.)

ஆசிரியர் : உடனடியாக இதை நாம் நம்முடைய தலைமை ஆசிரியரிடம் தெரிவிப்போம் வா. இதனால் நம் பள்ளியின் பெயரே கெட்டு விடும் போல இருக்கே. காவல்துறையில் புகார் செய்து தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் இது விபரீதமாகிவிடும். உடனே போவோம் வா. நீ நடந்ததை தலைமை ஆசிரியரிடம் அப்படியே கூறு.

சுரேஷ் : சரி அய்யா ...

**பெற்றோரின் கவனத்திற்கு**

- குழந்தைகளிடம் அவர்களின் அன்றாட நிகழ்வுகள் குறித்து பேச வேண்டும்.
- குழந்தைகள் கூறும் விசயங்களை ஆர்வமுடன் கவனிக்க வேண்டும்
- குழந்தைகளை அவர்களது பழக்க வழக்கங்கள் அதில் ஏற்படும் மாற்றங்களை கூர்ந்து கவனிக்க வேண்டும்.
- தனியாக குழந்தைகளை வெகு தூரத்திற்கு அனுப்புதல் தவிர்க்கப்பட வேண்டும்.
- ஆபத்தான குளம், கிணறு போன்றவற்றிற்கு குழந்தைகள் செல்லாதிருக்க அவர்களை எச்சரிக்க வேண்டும்

பெண் குழந்தைகளுக்கும் சில சமயங்களில் ஆண் குழந்தைகளுக்கும் பாலியல் தொந்தரவுகள், பாலியல் வன்முறைகள் நடக்கின்றன. எனவே அவை குறித்து குழந்தைகள் ஏதேனும் சொல்ல முற்பட்டால் அதனை கூர்ந்து கவனித்து அவர்களது பிரச்சனைகளைப் புரிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் அதே சமயத்தில் அவர்களின் பழக்க வழக்கங்கள் குறித்து அறிந்து தக்க ஆலோசனை வழங்க வேண்டும்.

குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு பெற்றோரிடம் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

## 4. ஊடகங்களும் குழந்தைகள் மீதான அதன் தாக்கங்களும்

ஊடகங்கள் சமூகத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக தகவல்களை அளித்தல், புதிய கருத்துகளை பயிற்றுவித்தல் மற்றும் மிகச் சிறந்த பொழுதுபோக்கு சாதனமாக உள்ளது. சமூக பிரச்சனைகளை பிரதிபலிப்பதோடு தக்க விதத்தில் வினையாற்றுகிறது. திரைப்படங்கள் முக்கிய வெகுஜன ஊடகமாக உள்ளதோடு அனைத்து நிலைகளிலும் வியாபித்துள்ளன.

**ஊடகங்களின் வகைகள்**

- தொலைக்காட்சிகள்
- வானொலிகள்-பண்பலைகள்
- திரைப்படங்கள்
- அச்சு ஊடகங்கள்-நாளேடுகள், வார, மாத இதழ்கள்
- இணைய தளங்கள்
- கேபிள் வழி தொலைக்காட்சிகள்
- மொபைல் போன்கள்-அலைபேசிகள்

**ஊடகங்களின் பயன்பாடு**

ஆசிரியர்கள் வகுப்பறையில் சிறு குழுக்களாக பிரிந்து கீழ்க்கண்ட அம்சங்களின்படி விவாதிக்கவும்.

- உங்கள் வீட்டில் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தொலைக்காட்சி பார்ப்பாய்?
- எந்த வகையான நிகழ்ச்சிகளை அதிகம் பார்ப்பாய்?
- உங்களுக்கு பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி எது?
- ஒரு மாதத்தில், ஒரு வாரத்தில் எத்தனை திரைப்படங்களை பார்ப்பாய்?



- உனக்கு பிடித்த நடிகை மற்றும் நடிகர் யார்?
- ஏன் அந்த நடிகை மற்றும் நடிகரை பிடிக்கும், அவரிடம் என்ன பிடிக்கும்?
- திரைப்படத்தில் வரும் உனக்கு பிடித்த உரையாடல் என்ன?
- உனக்கு பிடித்த திரைப்பட பாடல் எது?
- உனக்கு பிடித்த நகைச்சுவை வசனம் என்ன?

சிறுகுழுவில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களை அனைத்து மாணவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

குழந்தைகளே!

- ஊடகங்களின் தாக்கம் எம்மாதிரி குழந்தைகளிடம் உள்ளது என்பதை உணரவும்.
- தொலைக்காட்சியில் ஏதாவது நிகழ்ச்சி பிடித்துள்ளதா? அதற்கான காரணத்தை அறியவும்.
- ஒவ்வொரு நாளும் எவ்வளவு நேரம் நாம் தொலைக்காட்சி பார்ப்பதற்காக செலவிடுகிறோம்.
- ஒவ்வொரு நாளும் விளையாடுவதற்கான நேரம் எவ்வளவு ஒதுக்குகிறோம் என்பதை கணக்கிடவும்.

## உங்கள் சிந்தனைக்கு

1. பொழுதுபோக்கு ஊடகங்களில் சித்தரிக்கப்படும் பெண்கள் அதிகப்படியான அழகு, வெளிர் நிறம் மற்றும் அவர்களின் குணங்கள் நடைமுறையில் உள்ள நிஜ பெண்களுக்கு பொருந்துபவையாக இல்லை.
2. இளம் பெண்கள் மற்றும் பெண்கள் தங்கள் பேணி பாதுகாப்பதாக கூறி மிகக் கடுமையான முறையில் உணவு உண்ணாமை, பல வேலை உணவை உண்ணாமை, அதிகப்படியான உடற்பயிற்சி மற்றும் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பிற முறைகளை பயன்படுத்துகின்றனர். இதனால் மிக மோசமாக உடல் நிலை பாதிக்கப்படுகின்றது.

3. அழகான பெண் குழந்தைகளை மட்டும் பள்ளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் முன்னிலைப் படுத்தும் மனநிலையால் அதிகப்படியான திறமை இருந்தும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

4. பெரும்பாலான ஊடகங்களில் பெண்களை வெறும் காட்சிப்பொருளாகவும், அழகு பொம்மை யாகவும் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றனர். ஆனால் நிஜ வாழ்க்கையில் பெண்கள் கடின உழைப்பாளிகள், பல குடும்பங்களை தலைமையேற்று நடத்துபவர்களாகவும் உள்ளனர். குடும்பத்தின் சுமைகளை தாங்கும் பொறுப்பு பல இளம் பெண்களிடம் உள்ளன. தினம் தினம் அவர்கள் தங்கள் குடும்பத்திற்காக கடுமையாக உழைக்கின்றனர். இன்று பெண்கள் விளையாட்டில், கல்வியில், இன்னும் பல துறைகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

## ஊடகங்கள் கட்டமைக்கும் மேன்மையான பெண்கள்-அழகு விதிகள்

### ஊடகங்களில் வரும் பெண்களையும் நிஜத்தில் வரும் பெண்களையும் ஒப்பீடுக.

| | நிறம் மற்றும் அழகு | உடல் தோற்றம் | முக்கிய குணங்கள் |
|---|---|---|---|
| தொலைக்காட்சிகள், திரைப்படங்கள், விளம்பரங்கள் | | | |
| நிஜ வாழ்க்கையில் பெண்கள்-அம்மா, தங்கை, சித்தி, அத்தை, ஆசிரியை, வகுப்பு தோழி, உறவுக்கார அக்கா இன்னும் பிற... | | | |

## விவாதத்திற்கான கேள்விகள்

1. ஊடகங்களில் வரும் பெண்களுக்கும் நிஜத்தில் வரும் பெண்களும் உள்ள வித்தியாசம் என்ன?
2. வேறுபாடுகளால் ஏற்படும் விளைவுகள் என்ன?
3. ஊடகங்கள் சொல்லும் அழகு என்ற அடிப்படையில் நீங்கள் ஏதாவது பிரச்சனைகள் அல்லது பாகுபாடுகளை சந்தித்துள்ளீர்களா?
4. நீங்கள் பார்த்த திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் ஆண் பாத்திரங்கள் மற்றும் பெண் பாத்திரங்களை எவ்வாறு படைத்துள்ளனர்.

குழந்தைகளே, எட்டாம் வகுப்பு படிக்கும் மாரியம்மாளுக்கும் அவரின் சித்திக்கும் நடைபெற்ற உரையாடலை பார்ப்போமா?

மாரியம்மாள் : வணக்கம் சித்தி, வீட்டுக்கு வாங்க, சரியா உங்களை பார்த்து ஒரு வருடம் ஆகுது. என்னை மறந்துட்டீங்களா?

சித்தி : ஊம் இல்லை, இல்லை, உங்க அக்கா பத்தாவது போயிருக்கா இல்ல அதனால் நான் எங்கும் போக முடியவில்லை. உன்னைப் பார்த்துக் கொள். நீ எப்படி படிக்கிறாய்? நீ படிக்கிறாயா அல்லது சும்மா சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறியா? உன் உடம்பு குண்டாக இருக்கு.

மாரியம்மாள் : ஓகோ, அத சொல்கிறீர்களா?

சித்தி : நீ உன் உடலைப் பார்த்துக் கொள், ஒல்லியா இருப்பதுதான் பெண்ணுக்கு அழகு.

மாரியம்மாள் : சித்தி நான் அழகா இல்லை என்று சொல்றிங்களா? என் அம்மா, பாட்டி என எல்லோரும் அவர்கள் வழியில் அழகாய்தானே இருக்கிறார்கள். நான் ஒரு கூடைப்பந்து வீராங்கனை. என்னுடைய எடை என்னுடைய உயரத்திற்கு ஏற்றவாறு சரியாகவே உள்ளது. சரியான முறையில் நான் உணவை மூன்று வேளையும் எடுத்துக் கொள்கிறேன். சித்தி உங்களுக்கு தெரியுமா என் தோழிகள் சில பேர் ஒல்லியாக இருந்தால்தான் அழகு என்று நினைத்துக் கொண்டு பல வேளைகள் உணவு எடுக்காமல் இருந்ததால் உடல் மெலிந்து அனிமியா என்ற இரத்த சோகை ஏற்பட்டு இப்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சித்தி : அனிமியாவா அப்படினா?

மாரியம்மாள் : இரத்தத்தில் அணுக்களின் எண்ணிக்கை குறைந்த நிலையைத்தான் இவ்வாறு கூறுகின்றனர். இவர்கள் பச்சைக் காய்கறிகள், கொட்டைகள், பழங்கள் தானியங்கள் சரியாக எடுத்துக் கொள்ளாதது மட்டுமல்லாமல் பலவேளை உணவு சாப்பிடாமல் இருந்தால் இந்த நிலை வரும். இது வந்தால் நாம் பலவீனம் அடைவோம்.

சித்தி : ஓ அதுதான் அனிமியா நிலையா?

மாரியம்மாள் : அழகை காட்டிலும் நம் உடல் ஆரோக்கியம் மிக முக்கியம். திரைப்படங்கள் காட்டும் அழகு என்பது நம்மை அழகு சாதன பொருட்களை வாங்க வைக்கும். அதற்கு நாம் உழைத்த பணத்தை செலவழிக்கும் நிலைக்கு செல்கிறோம். உங்களுக்குத் தெரியுமா? நாம் அழகா இல்லை என்று சொல்லியே பல மிகப்பெரிய அழகு சாதன சந்தைகள் நம் நாட்டில் உள்ளன. அவை மிகப் பெரிய வியாபாரமாக உள்ளன.

சித்தி : ஆனால், ஏன் ஒவ்வொருவரும் அதனை வாங்க வேண்டும்.

மாரியம்மாள் : விளம்பரங்களும் திரைப்படங்களும் நாம் அழகாய் இல்லை என்று நம்மை ஏற்றுக் கொள்ள செய்கின்றன. அதனால் நாம் அழகு சாதன பொருட்களை பயன்படுத்துவதன் மூலமே நம் அழகை நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்ன எண்ணத்தை வளர்க்கிறது. இன்று பல பெண்கள் மற்றும் ஆண்கள் தங்கள் உடலை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். அவர்கள் தங்களுக்கு பிடித்த கதாநாயகன் மற்றும் கதாநாயகி போன்று வர வேண்டும் என்று எண்ணுகின்றனர். இது இயற்கைக்கு எதிரானது மற்றும் நம்மிடையே தாழ்வு மனப்பான்மையை வளர்க்கிறது.

சித்தி : நீ சரியா சொன்ன மாரி. எனக்குதான் இதுநாள் வரை புரியாமல் போய்விட்டது. இதை கண்டிப்பாக உன் அக்காவிடம் சொல்றேன்.

மாரியம்மாள் : சரி சித்தி, நான் கூடைப்பந்து பயிற்சி செய்ய போகிறேன். அடுத்த முறை பார்ப்போம்.

## விவாத கேள்விகள்

1. உங்கள் நண்பர்கள் யாராவது உணவு உண்ணாமல் உடல் எடை குறைந்ததை பார்த்திருக்கிறாயா?
2. என் உடம்பு இப்படி இருக்கே என்று அவர்கள் புலம்பியதை கேட்டிருக்கிறாயா?
3. ஏன் இளம் பெண்களும் இளைஞர்களும் அழகு சாதன கிரீமை பயன்படுத்துகின்றனர்?
4. ஏன் நம் ஊர்களில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அழகு சாதன கடைகள் இல்லை?
5. அழகுக்காக உடல் ஆரோக்கியத்தை விட்டு கொடுக்கலாமா?

## ஊடகங்கள் கட்டமைக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

பொழுதுபோக்கு ஊடகங்கள் சித்தரிக்கும் பெண்கள் மீதான வன்முறைகளின் பல்வேறு வகையான வடிவங்களை அடையாளம் காணவும்.

திரைப்படங்களில் கதாநாயகன் கதாநாயகியை கிண்டல் செய்வது, முடியை பிடித்து இழுப்பது, பாட்டு பாடி கிண்டல் செய்வது, அறிவுரை கூறுதல், திட்டுவது, இது போன்ற நிகழ்வுகள் உள்ள திரைப்படங்களையும் பாடல்களையும் நினைவுக் கூறவும்.

| வ.எண் | பாடலின் முதல் வரி | படம் பற்றிய தகவல் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## வகுப்பறையில் சிறு குழுவாக பிரிந்து விவாதிக்கவும்

- சில பாடல்கள் உங்களுக்கு பிடிக்குமா?
- பாடல் காட்சிகளில் வரும் பெண்களுக்கு எதிரான வன்முறை காட்சிகளை பார்த்திருக்கிறாயா?
- அதுவே ஒரு ஆணுக்கு நிகழ்ந்தால் எப்படி இருக்கும். உனக்கு மகிழ்ச்சியாக இருக்குமா?
- பெண்களின் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்துகிறதா? விவாதிக்கவும்.
- திரைப்படத்தில் வரும் காட்சிகளை போன்று ஒருவர் நிஜத்தில் வாழ்க்கையில் பயன்படுத்தினால் எத்தகைய விளைவு ஏற்படும்.

## சிந்தனைக்கு

1. அனைத்து வகையான பொழுது போக்கு ஊடகங்களும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அதிகளவில் சித்தரிக்கின்றன. குறிப்பாக பின்வருமாறு
   - உடல் சார் வன்முறைகள்–அடித்தல், உதைத்தல், முடியை இழுத்தல், கொலை செய்தல்.
   - வார்த்தை வழி வன்முறைகள்–திட்டுதல், தப்பான வார்த்தைகளால் திட்டுதல், அவமதித்தல்.
   - உளரீதியான வன்முறைகள்–அச்சுறுத்தல், மிரட்டல்
   - பாலியல் வன்முறைகள்–பாலியல் வன்முறை, மானபங்கப்படுத்துதல், கொடுமைகள், கிள்ளுதல்.
   - பொருளாதார வன்முறைகள்–அடிப்படை தேவைகளை மறுத்தல், (எ.கா.) உணவு, உடை.
2. திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மேற்கண்ட வன்முறைகள் கதாநாயகன் என்ற பெயரில் நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதது.

3. சட்ட ரீதியாக மட்டுமே எந்த ஒரு நபரையும் தண்டிக்க முடியும். சட்டத்திற்கு புறம்பாக எந்தவொரு நபரையும் அடித்தல், சித்ரவதை செய்தல், அவமரியாதை செய்தல் போன்றவைகளை ஏற்றுக் கொள்ள முடியாதது.

4. எந்த பிரச்சனைக்கும் வன்முறை தீர்வு அல்ல. ஆலோசனை, சட்டரீதியான சமரச மையங்கள் மற்றும் பிற சட்ட ரீதியான நடவடிக்கைகள் மட்டும் எடுக்க வேண்டும்.

## ஊடகங்கள் கட்டமைக்கும் ஹீரோயிசம்

| | கதாபாத்திரம் வெளிப்படுத்தும் விதம் | உடல் தோற்றம் | முக்கிய பண்புகள் |
|---|---|---|---|
| திரைப்படங்கள், தொலைக்காட்சி மற்றும் விளம்பரங்கள் | | | |
| நிஜ வாழ்க்கை மனிதர்கள்– உங்கள் அப்பா, சகோதரர், ஆசிரியர், வகுப்பறை தோழன், மற்றும் தெரிந்த மனிதர்கள் | | | |

## விவாதத்திற்கான கேள்விகள்

- ஒருவர் ஒரே நேரத்தில் 10 முதல் 15 பேரை முட்டி தள்ள முடியுமா? அது மாதிரியான மனிதர்களை உங்கள் பகுதியில் பார்த்திருக்கியா?
- உங்கள் வீட்டில் உள்ள அனைத்து ஆண்களும் கதாநாயகன் அல்லது வில்லனுக்கு உரிய நிலையில் உள்ளனரா?
- திரைப்படங்களில் எப்பொழுது பார்த்தாலும் ஆண்கள் ஆபத்திலிருந்து பெண்களை காப்பாற்றுகின்றனர்.
- திரைப்படங்களை பார்த்து சமூகத்தில் ஆண்கள் என்றால் இப்படிதான் இருக்க வேண்டும் என்ற விதியை நிர்ணயித்துள்ளனரா? அதன் விளைவுகள் என்ன?

## சிந்தனைக்கு

- சினிமாவில் வரும் கதாநாயகன் மற்றும் வில்லன் போன்று அசாதாரணமான மனிதர்கள் போன்று அல்லாமல் நிஜ வாழ்க்கையில் ஆண்களும் சாதாரண மனிதர்களே.
- நிஜ வாழ்க்கையில் சினிமா போன்று கதாநாயகன் போன்று எதிர்பார்ப்பது குடும்பத்திலும் உறவிலும் குழப்பத்தையே ஏற்படுத்தும்.
- வரலாற்றில் பல்வேறு துறைகளில் மிகச் சிறந்த சாதனைகளைச் செய்த கதாநாயகர்கள் உள்ளனர். அவர்களின் வாழ்க்கை அனுபவங்களே நமது முன்னேற்றத்திற்கு உந்துதலாக அமையும். உதாரணத்திற்கு, ஏ.பி.ஜெ.அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை, அன்னை தெரசா.

- நம் நிஜ வாழ்க்கையில் உங்கள் அப்பா, அண்ணா மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் சினிமாவில் உள்ள கதாநாயகர்ளிடமிருந்து மாறுபட்டு உங்களிடம் பாசமாகவும் நன்கு கவனிக்கக் கூடியவர்களாவும் உள்ளனர். அவர்கள் உங்களுக்கு வில்லன் அல்ல மாறாக உங்களின் முன்மாதிரிகளாகவும் பாசமுள்ளவர்களாகவும் கடின உழைப்பாளிகளாகவும் தியாகம் செய்யக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

## நம்முடைய தினசரி வாழ்க்கையில் ஊடகங்களின் தாக்கம்

கீழ்க்கண்டவாறு உங்களின் தினசரி வாழ்க்கையில் ஊடகங்களின் தாக்கம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அடையாளம் காணுங்கள்.

| வ.எண் | தினசரி செயல்பாடுகள் | ஆம்/இல்லை |
|---|---|---|
| 1 | உடை அலங்காரம், முடி அலங்காரம் | |
| 2 | உணவு முறைகள்-நூடுல்ஸ், துரித உணவுகள்... | |
| 3 | நடத்தை வெளிப்பாடு-உடல் அசைவுகள் | |
| 4 | மொழி-சினிமா வசனங்களைப் பயன்படுத்துதல்,<br>நகைச்சுவை வசனங்களைப் பயன்படுத்துதல் | |

### சிந்தனைக்கு

- பொழுது போக்கு ஊடகங்கள் - திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள், விளம்பரங்கள் அதிகமான நமது தினசரி வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- நமது உணவு, உடை, பேச்சு, நடத்தை என அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

### பயிற்சி

- உங்கள் பகுதியில் பெண்கள் மற்றும் உங்கள் வயதுடைய சிறுமிகளைச் சந்தித்து சினிமா மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெண்களை எவ்வாறு சித்தரிக்கிறது என்பதைக் கேட்கவும். அவர்கள் அளிக்கும் பதில்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

# 10. பாகுபாட்டை வென்று சாதித்த மகளிர்

## நோக்கம்

பாகுபாட்டை எதிர்த்து போராடிய மற்றும் சாதனை புரிந்த பெண்களை தமது வாழ்க்கையில் முன்னுதாரணமாக கொள்ளல்.

## கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்



கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் சமூக சேவகி மற்றும் போராளி. இவரின் கணவர் சங்கரலிங்கம் ஜெகநாதன். இருவரும் சமூக அநீதிகளுக்கு எதிராக காந்திய வழியில் போராடினர். தலித் மக்களின் முன்னேற்றத்திற்கும், நிலமற்ற விவசாய கூலிகளுக்கு நிலத்தை பெற்றுத் தருவதிலும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிராகவும் போராடி, ஏழை மக்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

ஆரம்பத்தில் இந்திய விடுதலை போராட்டத்தில் பங்கு பெற்ற இவர் தன் கணவருடன் வினோபாபாவேயின் பூமிதான இயக்கத்தில் பங்கு கொண்டார். தன்னுடைய உயரிய சேவைக்கான 2008-ல் Right to Livelihood Award விருதைப் பெற்றார்.

1926-ம் ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பட்டிவீரன்பட்டி கிராமத்தில் நிலமற்ற தலித் குடும்பத்தில் பிறந்தார். கிருஷ்ணம்மாள். பட்டிவீரன்பட்டி கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் 7 ஆம் வகுப்பு வரை படித்தார். மதுரையில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். அமெரிக்கன் கல்லூரியில் படித்தார். அப்போது மதுரை மாவட்டத்தின் முதல் பெண் பட்டதாரியாக கிருஷ்ணம்மாள் இருந்தார். ஏழ்மை மற்றும் சமூக நீதி பற்றிய ஆர்வம் வர இவரது தாயார் நாகம்மாளின் பேறு கால இன்னல்கள் காரணமாக இருந்துள்ளன. ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தபோதிலும் அவர் பல்கலைக்கழக கல்வி பெற்று காந்தியம் மற்றும் சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார்.

நாகை மாவட்டத்தில் கீழ வெண்மணி என்னும் சிற்றூரில் 42 தாழ்த்தப்பட்ட உழவுத் தொழிலாளர்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி கிருஷ்ணம்மாள் மனதை வெகுவாக பாதித்தது. எனவே, கிராமத்தில் உள்ள ஏழைகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குவதன் மூலம் காந்திய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று உறுதியாக நம்பிய கிருஷ்ணம்மாள் உழுபவருக்கு நிலம் திட்டத்தை 1981-ல் தொடங்கினார்கள்.

கடலோரத்தில் சூழ்நிலை சீர்கேட்டை ஏற்படுத்தும் இறால் பண்ணைகளை மூடப் போராடினார். இறால் பண்ணைகளுக்காக விளைநிலங்கள் காவு கொடுக்கப்படுவதை எதிர்த்துப் போராடினார். அமைதிக்கான நோபல் பரிசுக்கும் இவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

## மலாலா- பெண் கல்வியின் விடிவெள்ளி

மலாலா பாகிஸ்தானின் வடமேற்கிலுள்ள ஸ்வாட் பகுதியில் மிங்கோரா என்னும் ஊரில் பிறந்தவர். மலாலா யூசுப் சாயின் தந்தை ஒரு கவிஞர். பல பள்ளிகளுக்கு சொந்தக்காரர். பெண் கல்விக்கு தாலிபான்கள் தடை விதித்தனர். தாலிபானின் தடையை மீறி மலாலா அப்பகுதியிலுள்ள பெண்கள் பாடசாலை சென்று வந்தார்.



தாலிபான்களின் ஆதிக்கத்தால் தனது கல்வி உரிமை பாதிக்கப்படுகிறது என்று மலாலாவுக்குப் புரிந்தது. அதை எதிர்த்துக் கேட்கும் துணிச்சல் அவளுக்குப் பிறந்தது. உலகமே கண்டு நடுங்கும் தாலிபான்களை நோக்கி, என்னுடைய அடிப்படை உரிமையான கல்வியைத் தடுக்க இந்தத் தாலிபான்களுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்? என்று கேட்டாள் மலாலா. இந்தக் கேள்வியை மலாலா கேட்ட போது அவளுக்கு வயது 11.

தொலைக்காட்சி, இசை, பெண் கல்வி ஆகியவற்றைத் தடை செய்துவிட்ட தாலிபானின் ஆட்சியில் பெண்களின் நிலை பற்றி 12வது வயதில் பி.பி.சி.யில் ஒரு பள்ளி மாணவியின் டைரிக் குறிப்பு என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார் மலாலா. பெண் கல்வியின் அவசியத்தையும். கல்வி என்பது அனைவரின் அடிப்படை உரிமை என்றும் பேசினாள். பாகிஸ்தானின் இளம் அமைதிப்பரிசு-2011 மலாலாவுக்குத் கிடைத்தது. மலாலாவுக்கு ஆதரவுக் குரல்கள் பெருகிய நேரத்தில்தான் தாலிபான்கள் அவளது உயிருக்கும் குறிவைத்தனர். சுடப்பட்டார் மலாலா. உலகமே துடித்தது.

### வீழ்ந்தாரா மலாலா?

“எனது கனவுகள் தற்போது மேலும் உயர்வடைந்துள்ளது. பாகிஸ்தானின் பிரதமராக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன். அரசு தனது நிதியிலிருந்து அதிகளவில் கல்விக்காக செலவிட வேண்டும். தாலிபான்களால் எனது உடலை சுட்டு வீழ்த்த முடியும். எனது கனவுகளை சுட்டுவீழ்த்த முடியாது. நான் செல்ல வேண்டிய தூரம் இன்னமும் நிறைய உண்டு. உலகிலுள்ள ஒவ்வொரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் கல்வி கற்கும் உரிமை கிடைக்கும் வரை இப்பயணம் தொடரும்” என்றார்.

2014 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு மலாலாவுக்கு வழங்கப்பட்டது.

## விஞ்ஞானி வளர்மதி நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கை ஒளி



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தொலையுணர்வு செயற்கைக்கோள் திட்டத்தின் முதல் பெண் இயக்குநராக நம் அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த விஞ்ஞானி வளர்மதி உள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு விஞ்ஞானி வளர்மதி அவர்களை திட்ட இயக்குநராக கொண்டு ரிசாட் 1 என்ற செயற்கைக் கோள், விண்வெளியில் வெற்றிகரமாக ஏவப்பட்டபோது நாடே பாராட்டியது. இவை மட்டுமா அவரின் சாதனை பிற செயற்கைக் கோள்களான IRNSS, சரல், ஜிசாட் 7, மார்ஸ் மிஷன், ஜிசாட் 14 என பல செயற்கைக் கோள் திட்டங்களில் சிறப்பாக செயல்பட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் நினைவாக அவரது பெயரில் தமிழ்நாடு அரசு வழங்கும் முதல் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருதை தமிழக முதல்வர் அவர்களிடம் பெற்றார். நம்ம ஊர் பள்ளியில் பயின்று கடின உழைப்பு மற்றும் விடா முயற்சியால் இன்று நாடே போற்றும் விஞ்ஞானியாக உயர்ந்துள்ளார். நாமும் முயல்வோம். சிகரத்தைத் தொடுவோம்.



## கனரக வாகனத்தை இயக்கும் ஜோதிமணி

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள கள்ளிப்பட்டி என்ற கிராமத்தை சார்ந்தவர் ஜோதிமணி. இவர் ஒரு முன்னுதாரணப் பெண். ஆம், பெண்கள் பலவீனமானவர்கள் அவர்கள் வீட்டிலேயே முடங்கி கிடப்பது அவர்களின் கடமை என்ற கற்பிதத்தை உடைத்தெறிந்தவர்.

கனரக வாகனமான டாரஸ் மற்றும் 10 சக்கரங்கள் கொண்ட சரக்கு லாரியை கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக ஓட்டி வருகிறார். தமிழ்நாடு மட்டுமல்லாமல் குஜராத் போன்ற நீண்ட தூரத்தில் உள்ள மாநிலங்களுக்கும் தொடர்ந்து 10 நாட்களுக்கும் மேலாக பயணம் மேற்கொள்கிறார். ஒரு முறை விபத்தில் சிக்கிய அவர் லேசான காயத்துடன் உயிர் தப்பினார். கடந்த 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, கல்பன சாவ்லா விருதை திருமிகு ஜோதிமணி அவர்களுக்கு வழங்கி கவுரவித்துள்ளது. ஜோதிமணி நமக்கெல்லாம் நம்பிக்கை ஒளி.

## போர் விமானத்தை இயக்கி சமத்துவத்தை சாத்தியமாக்கியவர்கள்

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் விமானப்படையில் பெண் விமானிகள் சேர்த்து கொள்ளப்பட்டனர். தற்போது 1500 பெண்கள் இந்திய விமானப்படையில் பணியாற்றி வருகின்றனர். அதில் 90 பெண்கள் மட்டுமே விமானிகளாக உள்ளனர். ஹெலிகாப்டர்கள், சரக்கு, போக்கு வரத்து விமானங்களையே இவர்கள் இயக்கி வந்தனர்.



இந்திய வரலாற்றில் முதன் முறையாக போர் விமானங்களை இயக்க பாவனா காந்த், அவனி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகிய 3 பெண் விமானிகள் விமானப் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரஷ்யாவின் சுகோய், மிக் 21, 27 ரக போர் விமானங்களை இயக்கும் பயிற்சி நிறைவு செய்துள்ளனர்.

நிறைவு நாள் நிகழ்ச்சியில் மூன்று பேரும் ஜெட் விமானத்தில் பறந்து தங்கள் திறமையை நிரூபித்தனர். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் குறிப்பிடும்போது ஆண்களுக்கு நிகராக பாதுகாப்புத் துறையில் அனைத்து வகையான ஆயுதங்களையும் கையாளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று குறிப்பிட்டார்.

மத்திய பிரதேச மாநிலத்தைச் சார்ந்த அவனி சதுர்வேதி, “மிகச் சிறந்த போர் விமானியாக வரவேண்டும் என்பதே எனது கனவு. மிகச் சிறந்த போர் விமானத்தை இயக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக மேலும் மேலும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்” என்று தனது விருப்பத்தைக் கூறினார்.

## 16 ஆண்டுகளாக உண்ணாவிரதம் இருந்த இரும்பு மனுஷி

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் மாநிலத்தைச் சார்ந்தவர் இரோம் ஷர்மிளா. இவர்



கடந்த 16 ஆண்டுகளாக உண்ணாவிரதம் இருப்பதற்குக் காரணம் அந்த மாநிலத்தில் அமலில் இருக்கும் ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம். இச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் அதனால் இச்சட்டத்தை மனிப்பூர் மாநிலத்திலிருந்து நீக்க வேண்டும் என்று கடந்த 2000-ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் தேதி, தமது 27 வயதில் உண்ணாவிரதப் போராட்டத்தை மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் தொடங்கினார்.

உண்ணாவிரதத்தைத் தொடங்கிய மூன்றாவது நாள், காவல் துறையினர் அவரை கைது செய்தனர். தற்கொலைக்கு முயன்றதாக கூறி ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனாலும் அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தார். மூக்கு வழியாக உணவு அவரது விருப்பமின்றி செலுத்தப்பட்டது. ஓராண்டு முடிந்து வெளியே வந்த அவர் மீண்டும் உண்ணாவிரதத்தை தொடர்ந்தார்.

மீண்டும் கைது, மீண்டும் ஓராண்டு சிறை தண்டனை என 16 ஆண்டுகள் தொடர்ந்தன. அதனால் இரும்பு மனுஷி என்று மணிப்பூர் மாநில மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.

2016, ஆகஸ்ட் 09 ஆம் தேதி அன்று தனது 44 வயதில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மணிப்பூர் மாநில சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

தனது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து ஷர்மிளா கூறுகையில், எனது குறிக்கோளை எட்ட ஒரு கருவியாக உண்ணாவிரதப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். இதே ஆயுதத்தைதான் ( உண்ணாவிரதம்) நம் தேசத் தந்தை மகாத்மா காந்தி, இந்திய நாட்டு விடுதலைக்கு பயன்படுத்தினார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

## மெட்ரோ ரயிலை இயக்கிய பெண் ஓட்டுநர்-பிரித்தி



சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலை போக்கும் வகையில் மெட்ரோ ரயில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது தங்களுக்கு தெரிந்ததே. முதற்கட்டமாக சென்னை கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை பணிகள் முடிக்கப்பட்டு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் மெட்ரோ ரயிலை சென்னையைச் சார்ந்த பிரீத்தி என்ற 28 வயது பெண் ஓட்டினார் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். பிரித்தீ அவர்கள் சென்னை தரமணியில் உள்ள தர்மாம்பாள் பெண்கள் பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

ஓட்டுநர் பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்டதும் சென்னை, டெல்லி ஆகிய இடங்களில் ஓராண்டு பயிற்சி பெற்றார். தற்போது, 3 பெண்கள் ரயில் ஓட்டுநர்களாக (பைலட்) தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ஐ.ஏ.எஸ் தேர்வில் முதல் இடம் பிடித்த திவ்யதர்ஷினி

ஐ.ஏ.எஸ் தேர்வில் இந்தியாவிலேயே முதல் இடத்தை பெற்று தேசத்தின் ஒட்டுமொத்தப் பார்வையை தமிழகம் பக்கம் திருப்பியவர் திவ்யதர்ஷினி. தேசிய அளவில் முதல் இடத்தைப் பெற்றாலும் இயல்பாகவும்



எளிமையாகவும் வலம் வருகிறார். சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் தனது பள்ளிப் படிப்பை முடித்து சென்னை சட்ட பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வியை பயிலும் போதே சிவில் சர்வீஸ் தேர்வு எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இறுதி ஆண்டு படிப்பை முடித்த பிறகு முதல் நிலை தேர்வு எழுதி வெற்றி பெற்ற அவர் பிரதான தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வை நம்பிக்கையுடன் எதிர்கொண்டார்.

தான் வெற்றி பெற்றதன் ரகசியத்தை இவ்வாறு கூறுகிறார் – வீட்டில் படிக்க நல்ல ஆதரவும் சுதந்திரமும் அளித்தார்கள். என்னை அர்ப்பணித்துப் படித்தேன். பலன் கிடைத்தது. ஐ.ஏ.எஸ் பரீட்சை அவ்வளவு எளிது அல்ல. ஆனால் மாணவர்கள் நினைப்பது போல கடினமானதும் அல்ல. நாம் சரியாக முயற்சி செய்தால் எளிதாக வெற்றி பெறலாம். இதை எப்படிச் சொல்வதென்றால் கஷ்டப்பட்டு படிக்காமல் இஷ்டப்பட்டு படித்தால் எளிதாக வெற்றி பெற முடியும். கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மூன்றும் இருந்தால் எல்லோரும் வெற்றி பெறலாம். நாமும் நம்முடைய இலக்கு எது என்பதை உறுதி செய்து, அதன்படி வீறுநடை போடுவோம்.

## கல்பனா சாவ்லா- நம்பிக்கை கீற்று



இந்தியாவில் ஹரியானா மாநிலத்திலுள்ள கர்னால் என்ற சிறிய நகரத்தில் பிறந்தார் கல்பனா சாவ்லா. சிறு வயதிலேயே விண்வெளி பொறியாளராக வர வேண்டும் என்பதுதான் அவரின் விருப்பம். அவ்வூரில் உள்ள தொடக்கப் பள்ளியில் தனது தொடக்கக் கல்வியை முடித்தார். சண்டிகாரில் உள்ள பஞ் சாப் பொறியியல் கல்லூரியில் விமான பொறியியல் பயின்றார். தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள டெக்ஸஸ் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

கொலோராடோ பல்கலைக் கழகத்தில் பொறியியலில் முனைவர் பட்டம் பெற்றார். 1994 ஆம் ஆண்டு கல்பனாவில் கனவு நனவானது. விண்வெளி வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெற விண்ணப்பத்திருந்த சுமார் மூவாயிரம் நபர்களிலிருந்து ஆறு பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் கல்பனா. ஜான்ஸன் விண்வெளி தளத்தில் பல்வேறு உடல் மருத்துவ பரிசோதனைகள், கடுமையான நேர்காணல்கள் ஆகியவற்றை கடந்து வெற்றிகரமான விண்வெளி வீராங்கனையாக பரிணமித்தார்.

1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி ஆறு வீரர்களுடன் கொலம்பியா வான்கலம் மூலம் விண்வெளிக்கு சென்ற கல்பனா 16 நாட்களில் 252 முறை பூமியை சுற்றியதோடு சுமார் 65 இலட்சம் மைல் தொலைவு பயணம் செய்து வெற்றியுடன் பூமிக்கு திரும்பினார்.

இரண்டாவது முறையாக 2003 ஆம் ஆண்டு மீண்டும் கொலம்பியா வான்கலம் மூலம் 16 நாட்கள் விண்வெளியில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு இறுதி நாள் அன்று பூமிக்கு திரும்ப, பதினாறு நிமிடங்கள் இருந்தபோது கொலம்பியா வான்கலம் விண்ணில் வெடித்து சிதறியது. கல்பனா சாவ்லா உட்பட அனைவரும் உயிரிழந்தனர்.

கொலம்பியா விண்வெளி பயணம் மேற்கொள்ளும் முன் அவர் கூறிய வரிகள் இதுதான்– “முழுமனதோடு ஒரு காரியத்தில் ஈடுபடும் எவரை பார்த்தாலும் எனக்கு ஊக்கம் ஏற்படும். உதாரணத்திற்கு எனது உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கண்டுபிடிப்பாளர்களின் கதைகள் எனக்கு ஊக்கத்தை தரும்.” விண்ணைத் தொட்ட இந்திய தலைமகள் கல்பனா சாவ்லா நம்பிக்கை கீற்றுதான். அப்போ நீங்க…

## சானியா மிர்சா




மும்பையில் பிறந்து ஐதராபாத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சாமானியர்களும் சாதனை புரிய முடியும் என்பதற்கு சானியா மிர்சா ஒரு சான்று. தனது ஆறு வயதிலேயே பேட்மிட்டன் விளையாட ஆரம்பித்த சானியா 13 வயதில் தொழில் முறை விளையாட்டில் கவனம் செலுத்தினார். விம்பிள்டன் போட்டியில் அதிக முறை வெற்றி பெற்ற இந்திய நம்பிக்கை நட்சத்திரம். ஒரு சர்வதேச போட்டியில் ஏன் செரினாவை வெல்ல முடியவில்லை எனக் கேட்டதற்கு அடுத்த சந்திப்பில் அது நடைபெறலாம் என தன்னம்பிக்கை பொங்க புன்னகைத்தார் சானியா.

என்னால் வெற்றி பெற முடிந்திருக்கிறது என்றால் இந்தியாவில் உள்ள எவராலும் வெற்றி பெற முடியும். ஏனென்றால் பெரும்பாலான பயிற்சிகளை நான் இங்குதான் பெற்றேன் என்று இந்நாட்டில் உள்ள இளம் பெண்களுக்கு அறைகூவல் விடுத்தார். நாமும் நாம் தேர்வு செய்த துறையில் தீவிர கவனம் செலுத்தி வெற்றி பெற்று வாழ்க்கையில் சிகரத்தைத் தொட சபதமேற்போம்.

## சாய்னா நேவால்



சாய்னா நேவால் ஹரியானா மாநிலத்தில் பிறந்து தற்போது தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் வசித்து வருபவர். பேட்மிட்டன் என்ற இறகுப் பந்தாட்ட விளையாட்டில் முடிசூடா மங்கையாக உள்ளார். பேட்மிட்டன் தரவரிசையில் இன்று உலகின் முன்னணி வீராங்கனை,

சாய்னாவின் விடாமுயற்சி மற்றும் போராட்டம் குணம் நமக்கு ஒரு படிப்பிடினையே. நாமும் சாதிக்கலாம் நம்பிக்கையுடன்.

## பாரா ஒலிம்பிக் போட்டியில் சரித்திரம் படைத்த தீபா

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான தீபா 17 ஆண்டுகளுக்கு முன்பு முதுகு தண்டுவடத்தில் ஏற்பட்ட கட்டியை அகற்ற அறுவை சிகிச்சை நடந்த போது, இடுப்புக்கு கீழே உடல் உறுப்புகள் செயல் இழந்தன.



நடந்து செல்வது இனி சாத்தியமில்லை என்ற நிலையில் சக்கர நாற்காலியிலேயே வாழ்க்கையை நகர்த்தி வருகிறார். உடல் ஊனமானாலும், மன உறுதி தளராமல் விளையாட்டில் கவனம் செலுத்தினார்.

சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு குண்டு வீசும் அவர் ஏற்கனவே உலக அளவில் பல போட்டிகளில் வென்றுள்ளார். இந்த நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டி

2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரேசிலின் ரியோடி ஜெனீரோ நகரில் நடந்தது. இந்தியா சார்பில் பெண்களுக்கான குண்டு எறிதலில் இந்திய வீராங்கனை தீபா மாலிக் பங்கேற்றார்.

அதிகபட்சமாக 4.61 மீட்டர் குண்டு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பாரா ஒலிம்பிக் வரலாற்றில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற மகத்தான சாதனையை 45 வயதான தீபா மாலிக் படைத்துள்ளார்.

**பயிற்சி**

1. பாகுபாடு மற்றும் பெண்கள் உரிமைகளுக்கான போராடியவர்களின் செய்திகளை பத்திரிகை களிலிருந்து தொகுக்கவும்.
2. பெண்கள் உரிமைகளுக்காக போராடியவர்களின் புகைப்படங்களை சேகரித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.
3. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளை நினைவுக் கூறும் தினங்களை தொகுக்கவும். அவற்றின் சிறப்புகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.
4. குழந்தைகளே உங்களின் முன்னுதாரண பெண்கள் யார்? ஏன் அவர்கள் உங்களுக்கு முன்னுதாரணமாக உள்ளனர்?
5. உங்கள் ஊரில் அல்லது உங்களுக்கு தெரிந்த கீழ்க்கண்ட முன்னுதாரண பெண்கள் உள்ளனரா? உங்கள் பெற்றோரிடம் கேட்டு விபரம் தரவும்.
   1. குழந்தை திருமணத்தை தடுத்தவர் ________________
   2. குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக போராடியவர் ________________
   3. சிசுக் கொலைக்கு எதிராக பேராடியவர் ________________
   4. வரதட்சணை கொடுமைக்கு எதிராக போராடியவர் ________________
   5. பெண்களின் பாதுகாப்பிற்காக போராடியவர் ________________
   6. பெண் கல்விக்காக பாடுபடுபவர் ________________
   7. பெண்களின் உடல் நலத்திற்காக உழைப்பவர் ________________

## 6. பெற்றோர் மற்றும் சமூகத்தில் உரையாடல்

1. உங்கள் ஊரில் உள்ள விளையாட்டு வீராங்கனைகள் பற்றியும் அவர்கள் விளையாடும் விளையாட்டுகளையும் அறிந்து கொள்ளவும்.
2. உங்கள் ஊரில் உள்ள பெண்கள் எம்மாதிரியான பணிகளை செய்கின்றனர்? அடையாளம் கண்டு பட்டியலிடவும்.
3. படிப்பை பாதியில் நிறுத்தியவர்களை அடையாளம் கண்டு அவர்கள் ஏன் படிப்பை நிறுத்தினார்கள்? அவர்கள் என்னவாக வேண்டும் என்று நினைத்தார்கள்? என்பதையும் கேட்டு தகவல்களை சேகரித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

# 11. பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான அரசு திட்டங்கள்

| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | **திட்டத்தின் விபரம்** | தகுதிகள் | இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலர் |
| 1 | **சிலேட்டுகள், பாட புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள்** | ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளியில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு<br>1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு | சாதிச் சான்று (நோட்டு புத்தகம் மற்றும் சீருடைகளுக்கு மட்டும்) | தலைமையாசிரியர் |
| 2 | **இலவச மிதிவண்டிகள்** | அரசு மற்றும் அரசுதவிப் பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு | சாதிச் சான்று | தலைமையாசிரியர் |
| 3 | **இலவச விடுதி [ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகள்]** | பெற்றோர் ஆண்டு வருமானம் 1 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். வீட்டிற்கும் பள்ளிக்கும் இடையேயான தூரம் 5 கிலோ மீட்டர் மற்றும் அதற்கும் அதிகமாக இருக்க வேண்டும். | சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று | தலைமையாசிரியர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதி காப்பாளர் |
| 4 | **மைய அரசின் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் மெட்ரிக் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் திருப்பி அளிக்கப்படாத அனைத்துக் கட்டணங்களையும் அரசே கல்வி உதவித் தொகையாக வழங்குதல்.** | இந்து ஆதிதிராவிடர்கள் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள். | சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று | |
| 5 | **12ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட அரசு, அரசுதவிப் பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கருக்கு கல்வி கட்டணத்திலிருந்து விலக்கு** | இந்து ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர். | சாதிச் சான்று | கல்லூரி முதல்வர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர்கள் மற்றும் கல்லூரி கல்வி இயக்குநர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **அரசு நிதியுதவி பெறா சுயநிதி கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு திருப்பி அளிக்கப்படாத கல்வி கட்டணங்களை அரசே ஏற்றல்** | தமிழ்நாடு அரசின் ஆணை எண் 06 மற்றும் வழிகாட்டல் கடிதம் எண் 92 இன்படி மைய அரசின் நிதியுதவியுடன் அரசு நிதி பெறா சுயநிதி கல்வி நிறுவனங்களில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் திருப்பி அளிக்கப்படாத கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும்.<br>எந்தெந்த படிப்புகளுக்கு பொருந்தும் கலை,<br>அறிவியல், சட்டம், பொறியியல், மருத்துவம்,<br>தொழில் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, வேளாண்மை சார்ந்த படிப்புகளுக்கு.<br>கல்லூரிலேயே விண்ணப்பிக்க வேண்டும். | சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். | கல்லூரி முதல்வர் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர். |
| 7 | **ஊக்கப் பரிசுகள்-மாநில அளவில்** | 1. மாநில அளவில் முதலிடம் பிடிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தைச் சார்ந்த தலா ஒருவருக்கு...<br>• 12 ஆம் வகுப்பிற்கு ரூ.25000.00<br>• 10ஆம் வகுப்பிற்கு ரூ. 10000.00<br>2. மாநில அளவில் பாடங்கள் வாரியாக முதலிடம் பிடிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தைச் சார்ந்த தலா ஒருவருக்கு...<br>12 ஆம் வகுப்பிற்கு ரூ.2000.00<br>10ஆம் வகுப்பிற்கு ரூ. 1000.00 | | மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அலுவலர் வாயிலாக இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-05. |
| 8 | **ஊக்கப் பரிசுகள்-மாவட்ட அளவில்** | மாவட்ட அளவில் முதலிடம் பிடிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தை சார்ந்த ஒரு மாணவிக்கும் மாணவனுக்கும்.<br>முதல் பரிசு<br>• 12 ஆம் வகுப்பிற்கு ரூ.2000.00<br>• 10ஆம் வகுப்பிற்கு முதல் பரிசு ரூ. 1000.00, இரண்டாம் பரிசு ரூ.500.00 மூன்றாம் பரிசு ரூ.300 வழங்கப்படும். | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர். |
| 9 | **பரிசுத் தொகை திட்டம்** | பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்படிப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தை சார்ந்த மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகிறது. தேர்வுகளில் உயர் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் முதல் 550 மாணவர்களுக்கு ரூ.2000.00 முதல் ரூ.5000.00 வரை பரிசாக வழங்கப்படுகிறது. | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | **அறிவுக் கூர்மை பரிசுத் தொகை திட்டம்** | பத்தாம் வகுப்பில் மாவட்டம் தோறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தை சார்ந்த முதல் இடத்தை பெற்ற 2 மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பு தொடரும் வகையில் ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகிறது. இப்பரிசு 6 ஆண்டுகள் வழங்கப்படும். முதல் ஆண்டில் ரூ.800.00 பிற 5 ஆண்டுகள் ரூ.960.00 வழங்கப்படும். பெற்றோர் வருமான வரம்பு இல்லை. | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை. |
| 11 | **காந்தி நினைவுப் பரிசு** | 12 ஆம் வகுப்பில் மாவட்டம் தோறும் இந்து தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த முதல் இடத்தை பெற்ற 1 மாணவி மற்றும் 1 மாணவனுக்கு வழங்கப்படும். அவர்கள் மேற்படிப்பு தொடரும் வகையில் ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகிறது. இப்பரிசு 6 ஆண்டுகள் வழங்கப்படும். முதல் ஆண்டில் ரூ.1500.00 பிற 5 ஆண்டுகள் ரூ.1000.00 வீதம் வழங்கப்படும். பெற்றோர் வருமான வரம்பு இல்லை. | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை. |
| 12 | **தகுதி வழிவகை பரிசு** | காந்தி நினைவுப் பரிசு போன்றே பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் வழங்கப்படும். | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை. |
| 13 | **முதலமைச்சர் தகுதி பரிசு** | 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தை சார்ந்த முதல் 1000 மாணவர்களுக்கும் 1000 மாணவிகளுக்கும் இப்பரிசு வழங்கப்படும். தொடர்ந்து படிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். ஆண்டிற்கு ரூ.1500.00 வீதம்<br>5 ஆண்டுகள் வரை வழங்கப்படும். | | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர். |
| 14 | **ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பினை தொடர ஊக்க தொகை வழங்கும் திட்டம்.** | கல்வியில் பின்தங்கியுள்ள 15 மாவட்டங்களில் உள்ள 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 60,000 மாணவ மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 500.00 வீதம் வழங்கப்படும், | | மாவட்ட ஆதிதிராவிடர் நல பழங்குடியினர் நல அலுவலர் |
| 15 | **மருத்துவ படிப்பில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் சேர்ந்து படித்தால் செலவினங்களை அரசே ஏற்கும்.** | ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த மாணவர்கள் அகில இந்திய அளவில் நடத்தப்பெறும் மருத்துவத்திற்கான நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பெற்றோர் வருமான உச்ச வரம்பு இல்லை. | பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் சாதி சான்றிதழ் | மாநில ஆதிதிராவிடர் நலத் துறையை அணுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | **தொழிற்கல்வி பயிற்சி திட்டம்** | கணினி பயிற்சி, விமான பணிப் பெண் பயிற்சி, செவிலியர் உதவியாளர் பயிற்சி, உணவக நிர்வாகம், ஆடை வடிவமைப்பு, ஆடை தயாரித்தல் மற்றும் இதர வகை பயிற்சிகள் மாவட்ட அளவில் வழங்கப்படுகிறது. | வயது 18 முதல் 35 வரை<br>சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று | மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் அல்லது தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) |
| **சமூக நலத்துறை** | | | | |
| 17 | **அன்னை திரேசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்** | ஆதரவற்ற பெண்கள், 18 வயது முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். திருமணத்திற்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும். | தாய் மற்றும் தந்தை இறப்பு சான்று அல்லது ஆதரவற்ற பெண் என்ற சான்று சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று மணப்பெண்ணின் வயது சான்று மணமகளின் மார்பளவு புகைப்படம்.<br>திருமண அழைப்பிதழ் (திருமணத்திற்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்) | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்,<br>மகளிர் ஊர் நல அலுவலர். |
| 18 | **சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.** | • ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர், விதவை பெண்கள்<br>• உடல் ஊனமுற்ற ஆண் பெண்.<br>• தையல் தைக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>• வயது 20 முதல் 40க்குள் இருக்க வேண்டும். | சாதி வருமானச் சான்று வயது சான்று மாற்றுத் திறனாளிக்கான சான்று, ஆதரவற்றோர் மற்றும் விதவையராயின் அதற்கான சான்று, கணவனால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்று | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்,<br>மகளிர் ஊர் நல அலுவலர். |
| 19 | **ஈ.வெ. ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்** | • 18 வயது முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>• ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டுமே வழங்கப்படும்.<br>• திருமணத்திற்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்.<br>ரூ. 25 ஆயிரம் நிதியுதவியும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம்தங்கமும் அளிக்கப்படும். பட்டதாரி பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் நிதியுதவியும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம்தங்கமும் அளிக்கப்படும். | விதவைத் தாயின் கணவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் விதவை சான்றிதழ் சாதிச் சான்று மற்றும் வருமானச் சான்று | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்,<br>மகளிர் ஊர் நல அலுவலர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | **டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்** | வருமான வரம்பு இல்லை<br>20 முதல், மணமகனின் வயது 40க்குள் இருக்க வேண்டும். திருமணம் முடிந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். ரூ.25 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும்.<br>பட்டதாரி பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும். | மறுமணம் முடிந்து பெண்ணின் முதல் கணவரின் இறப்புச் சான்றிதழ்.<br>மறுமண பதிவு சான்றிதழ் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>சமூக நல விரிவாக்க அலுவலர்<br>மகளிர் ஊர் நல அலுவலர். |
| 21 | **ஆதரவற்ற முதியோர் ஓய்வூதியத் திட்டம்** | மாதத்திற்கு ரூ.1000.00, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளுக்கு இலவச வேட்டி அல்லது சேலை. மதிய உணவு திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ அரிசி பங்கெடுக்காதவர்களுக்கு 4 கிலோ அரிசி.<br>உழைத்து வாழ இயலாதவராக இருக்க வேண்டும்.<br>வருமானம் இல்லாதவராக இருக்க வேண்டும்.<br>18 வயதிற்கு மேற்பட்ட மகன் அல்லது பேரன் (மகனின் மகன்) ஆதரவு அளிக்க கூடியவராக இருத்தல் கூடாது. | வெள்ளை தாளில் மனு, மார்பளவு புகைப்படம், குடும்ப அட்டை நகல், வருமானச் சான்று, இருப்பிட சான்று | வட்டாட்சியர் தனி, வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) (எஸ்.எஸ்.எஸ்) |
| 22 | **ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்** | மாதத்திற்கு ரூ.1000.00, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளுக்கு இலவச வேட்டி அல்லது சேலை. மதிய உணவு திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ அரிசி பங்கெடுக்காதவர்களுக்கு 4 கிலோ அரிசி. வயது வரம்பு இல்லை, மறுமணம் செய்திருக்க கூடாது, வருமானம் ஏதுமின்றி வயது வந்த மகள்கள் இருந்தாலும் வழங்கலாம், | வருமானம் இல்லாதவராக இருக்க வேண்டும்.<br>வெள்ளை தாளில் மனு, மார்பளவு புகைப்படம், குடும்ப அட்டை நகல், வருமானச் சான்று, இருப்பிட சான்று | வட்டாட்சியர் தனி, வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம் (எஸ்.எஸ்.எஸ்) |
| 23 | **கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற மனைவியருக்கு ஓய்வூதியத் திட்டம்** | மாதத்திற்கு ரூ.1000.00, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளுக்கு இலவச வேட்டி அல்லது சேலை. மதிய உணவு திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ அரிசி<br>பங்கெடுக்காதவர்களுக்கு 4 கிலோ அரிசி. குறைந்தபட்சம் 60 வயது, முறையாக திருமணம் ஆனவர், குறைந்தது 5 வருடம் பிரிந்து வாழ்ந்தவர், வருமானம் ஏதுமின்றி வயது வந்த மகள்கள் இருந்தாலும் வழங்கலாம். | வெள்ளை தாளில் மனு, மார்பளவு புகைப்படம். குடும்ப அட்டை நகல், இருப்பிட சான்று, வருமானச் சான்று | வட்டாட்சியர் தனி, வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம் (எஸ்.எஸ்.எஸ்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | **அந்தியோதியா அன்ன யோசனா திட்டம்** | 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற முதியோா். கைவிடப்பட்ட நபா், விதவை, நோயுற்றோா், நிலமற்ற விவசாய கூலிகள், கைவினைஞர்கள் மற்றும் தினக் கூலிகள். | கிராம சபை நகல், கிராம நிர்வாக அலுவலா் சான்று, நிலங்கள் ஏதும் இருக்க கூடாது, | மாவட்ட மற்றும் வட்ட உணவு வழங்கல் அலுவலா். |
| 25 | **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்** | 18 வயது பூர்த்தியடைந்த ஏழைப் பெண்களுக்கு திருமணத்தின் போது திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது.<br>தகுதிகள்: பெண்கள் பத்தாம் வகுப்பும், பழங்குடியின பெண்கள் ஐந்தாம் வகுப்பும் படித்திருக்க வேண்டும்.<br>இதில் ரூ.25 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும்.<br>பட்டதாாி பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும். | பெற்றோா் ஆண்டு வருமானம் ரூ.72,000 மிகாமல் இருக்க வேண்டும். | மாவட்ட சமூக நல அலுவலா், சமூக நல விரிவாக்க அலுவலா், மகளிா் ஊா் நல அலுவலா். |
| 26 | **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதயுதவித் திட்டம்** | 18 வயது பூர்த்தியடைந்தவர்கள்<br>1. கலப்புத் திருமணம்–ஒருவா் ஆதிதிராவிடா் அல்லது பழங்குடியினா் மற்றொருவா் வேறு சாதியினராக இருத்தல்<br>2. கலப்புத் திருமணம்–ஒருவா் முற்பட்ட வகுப்பினராகவும் மற்றொருவா் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவராக இருக்க வேண்டும்.<br>ரூ.25 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும்.<br>பட்டதாாி பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் நிதியுதவியும் 4 கிராம் திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கமும் அளிக்கப்படும். | திருமணத்திற்கு பிறகு இரண்டாண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். | |
| 27 | **அரசு சேவை இல்லங்கள்** | விதவையா், கணவரால் கைவிடப்பட்டவா்கள், ஆதரவற்ற ஏழைப் பெண்கள் நலனுக்காக உணவு, தங்குமிடம், கல்வி மற்றும் தொழிற் கல்வி<br>14 முதல் 45 வயது வரை, ஆண்டு வருமானம் ரூ.24000.00க்குள் தமிழ்நாட்டில் 9 இடங்களில் உள்ளன. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | **அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள்** | தமிழ்நாட்டில் 21 இடங்களில் உள்ளன. குடும்பத்தை விட்டு வெளியூரில் பணிபுரியும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பெறும் மகளிருக்கு உணவுடன் பாதுகாப்பான தங்கும் வசதி | மாத வருமானம் சென்னையில் ரூ.25000 த்திற்குள்ளும் இதர மாவட்டங்களில் ரூ.15000 க்குள்ளும் இருக்க வேண்டும். வாடகை மாதத்திற்கு 300 சென்னைக்கும் பிற மாவட்டங்களில் 200 ரூபாய். | |
| 29 | **முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்** | பெற்றோருக்கு 1 அல்லது 2 பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.72,000க்குள் இருக்க வேண்டும். இரண்டு மற்றும் மூன்று வயதில் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு பெண் குழந்தைக்கு ரூ.50000யும் இரண்டு பெண் குழந்தைகளுக்கு தலா ரூ. 25000 யும் வழங்கப்படும். | | |
| 30 | **இணை உணவு வழங்கும் திட்டம்** | 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல். | | அங்கன்வாடி மையம் |
| 31 | **ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்லா) மற்றும் கிஷோரி சக்தி யோஜனா.** | 11 முதல் 18 வயது வளரிளம் பெண்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் மற்றும் 11 முதல்18 வயதுடைய வளரிளம் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த தொழிற்கல்வி அளித்தல் | | |
| **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை** | | | | |
| 32 | **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்** | முதல் தவணையாக ரூ.4000.00 பெறுவதற்கு தாய்மையடைந்த 12 வாரங்களுக்குள் பதிவு செய்து பதிவு எண் பெற்றிருக்க வேண்டும். அனைத்து ஆய்வுகளையும் அரசு மருத்துவமனைகளில் செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு தவணையும் வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்படும். 19 வயதிற்கு மேல் இருக்க வேண்டும். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருக்க வேண்டும். முதல் இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் வழங்கப்படும். | | கிராம சுகாதார செவிலியர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், வட்டார மருத்துவ அலுவலர், துணை இயக்குநர், சுகாதார பணிகள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 33 | **மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்** | 10 முதல் 19 வயது வரை உள்ள பள்ளிச் செல்லும் மற்றும் பள்ளிச் செல்லா வளரிளம் பெண்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 3 நாப்கின் பைகள் வழங்கப்படுதல் | | கிராம சுகாதார செவிலியர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், வட்டார மருத்துவ அலுவலர், துணை இயக்குநர், சுகாதார பணிகள். |
| 34 | **பள்ளி சிறார் நலத் திட்டம்** | அனைத்து வியாழக்கிழமையும் பள்ளி சிறார் நல நாளாக அனுசரிக்கப்படுகிறது.<br>குழந்தைகளின் பொதுவான குறைகளைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | | கிராம சுகாதார செவிலியர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், வட்டார மருத்துவ அலுவலர், துணை இயக்குநர், சுகாதார பணிகள். |
| 35 | **குடப்புழு நீக்குதல்** | பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் மூலமாக மக்கள் நல்வாழ்வுத் துறை குடற்புழு நீக்க மருந்துகளை அளிக்கிறது. | | கிராம சுகாதார செவிலியர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், வட்டார மருத்துவ அலுவலர், துணை இயக்குநர், சுகாதார பணிகள். |
| 36 | **104 மருத்துவ தகவல் சேவை** | நோய்கள், அதற்கான மருத்துவ சிகிச்சை போன்ற தகவல்களைத் தொலைபேசி வாயிலாக கேட்டு பெறலாம். | | |

குழந்தைகளே!

குழந்தைத் தொழிலாளர் முறை

குழந்தைத் திருமணம்

கொத்தடிமை முறை

குழந்தை கடத்தல்

பாலியல் ரீதியாக சித்தரித்தல், உட்படுத்துதல்

அடித்தல், திட்டுதல், பயமுறுத்தல்

கேலி செய்தல், பின் தொடர்தல்

தவறாக சித்தரித்தல்

பிச்சை எடுக்க வைத்தல்

சாதி, மத, உடல் நிலையை காரணம் காட்டி பாகுபடுத்தல்

கல்வி மறுத்தல் என இவை அனைத்தும்

குழந்தைகளுக்கு எதிரான மீறல்களே

**குழந்தைகளே உங்கள் உதவிக்கு**

# 1098